கல்கி

KALKI 21.9.2003 ரூ.6.00



விழுப்புரம் மாநாடு திருப்புமுனை ஆகுமா...?

-கலைஞர் பேட்டி!



Heinz
Trust • Taste • Nutrition
என்னையே நம்பி இருக்கும் என் குழந்தையின் ஊட்டசத்துக்கு நான் யாரை நம்புவது?
என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவள் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவளுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை. ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே! ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அதுமட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் என் குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, என் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது ஃபாரெக்ஸைதான்.
எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு முறையும் என் குழந்தை சிரிக்கும் போது, 'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூறுவது போல் இருக்கும்.
ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி
6 ருசிகரமான சுவைகளில்
ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்
வீட் எக்
இலவச குழந்தை பராமரிப்பு புத்தகத்திற்கு, குழந்தையின் பெயர்/பிறந்த தேதியுடன் எங்களுக்கு எழுதுங்கள்: ஹைன்ஸ் இந்தியா பி. லிட், த. பெ. எண் : 1907, மும்பை - 400 001.
IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें.
CONTRACT:FRX2479TM

உள்ளே...

பாய்ஸ் மொக்கராசு போட்ட உருளு தண்டம்



17

கலைஞரின் கைக்குள் என்ன ரகசியம்?

8-12





ஜாதகத்தை எடுத்துக் கொண்டு ஓட வேண்டாம்!

84-87




வலை வீசம்மா... வலை வீசு!

ஐ.ஐ.டியின் பி.டெக் மற்றும் எம்.டெக்கில் இவரது சிறப்புப் பாடம் உலோகவியல்! ஒரு தொழிலதிபராகத்தான் வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார். கிட்டத்தட்ட பதினேழு ஆண்டுகள் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'ஹைடெக் இண்டஸ்ட்ரீஸ்' என்ற நிறுவனத்தை நடத்திக் கொண்டிருந்த இவர் எப்படி 'சென்னை ஆன்லைனை'த் தொடங்கினார்?

கிட்டத்தட்ட சமகாலத்தில் சென்னையை மையமாகக் கொண்டு தொடங்கிய பல வலை இதழ்கள் மூடுவிழா நடத்திவிட, 'சென்னை ஆன்லைன்' தனது பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதன் நிறுவனரும் இயக்குனருமான திரு. ரவிச்சந்திரனை சந்தித்தபோது சில வியப்புகள் காத்திருந்தன.

பத்திரிகை இயல் படித்தவரல்ல. பொறியியல் படிப்பு படித்தவர் - ஆனால் தகவல் தொழில்நுட்பத்தில் அல்ல.


• ரவிச்சந்திரன்

"1996ல்தான் இன்டர்நெட் சென்னையில் பரவலாக அறிமுகமானது. தொடக்கத்திலேயே இந்த ஊடகத்தின்மீது ஒரு தனி ஆர்வம் ஏற்பட்டது. சென்னையில் இன்டர்நெட் வசதியை ஏற்படுத்திக் கொண்ட முதல் சில நபர்களுள் நானும் ஒருவன். என் தொழிலுக்கு இது உதவக் கூடும் என்பதுதான் இந்த வசதியை ஏற்படுத்திக் கொண்டதன் நோக்கமாக முதலில் இருந்தது. அப்போது இன்டெர்நெட்டை வழங்கிய ஒரே அமைப்பான வி.எஸ்.என்.எல்., இருவித வசதிகளை வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்திருந்தது. வருடத்துக்கு ஐயாயிரம் ரூபாய் என்ற பிரிவை நான் தேர்ந்தெடுத்ததில், வலைத்தளங்களில் டெக்ஸ்ட்டை மட்டுமே பார்க்க முடிந்தது (ஓவியங்கள், கார்ட்டூன்கள் போன்றவற்றையும் பார்க்க வேண்டுமென்றால் வருடத்துக்கு பதினைந்தாயிரம் ரூபாய் கட்ட வேண்டும்). எனது சில நண்பர்களிடமும் இந்த வசதியை அறிமுகம் செய்தேன். இதுகுறித்து மேலும் பேசப்பேச, நண்பர்களோடு இணைந்து நானே ஒரு வலைத்தளத்தை ஏன் உருவாக்கக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது. முதலில் சென்னை நகரம் தொடர்பான

தகவல்களைத் திரட்டியளிக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். 'சென்னை ஆன்லைன்' என்ற பெயரை வைக்க முடிவு செய்தபோது ஒரு பெரும் பயம் தோன்றியது. இவ்வளவு நேரடியான எளிதான பெயரை ஏற்கெனவே யாராவது தேர்ந்தெடுத்திருந்தால்? நல்ல வேளையாக அப்படி ஆகவில்லை.

1997 ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சென்னை ஆன்லைனை எங்கள் வீட்டிலேயே தொடங்கினோம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சீரான வளர்ச்சி. 1998ல் ஆறாம் திணை என்ற வலைப்பத்திரிகையையும் தொடங்கினோம். 1999ல் சென்னையில் தோன்றிய செஸ் ஆர்வத்தைத் தொடர்ந்து, 'சதுரங்கம் டாட்காம்' துவக்கப்பட்டது.

மிகவும் வேகமாக உச்சத்தை நெருங்கினாலும் சோதனைகளும் வரத் தொடங்கின. பல போட்டி வலைப்பத்திரிகைகள் உருவாயின. எங்களைவிடக் குறைவான தொகைக்கு ஸ்பான்ஸர்ஷிப் மற்றும் விளம்பரங்களுக்கு அவை ஒப்புக் கொண்டன. ஆறாம் திணை பத்திரிகையை பணம் கொடுத்துத்தான் வலைத்தளத்தில் படிக்கலாம் என்றால் ஒப்புக் கொள்வீர்களா என்ற கேள்விக்கு, மிக அதிகம்பேர் "ஒப்புக் கொள்வோம்" என்று சர்வேயில் குறிப்பிட்டனர். ஆனால் அப்படி நாங்கள் ஆக்கிய பிறகு அதில் குறைந்த சதவிகிதத்தினரே சந்தாதாரர் ஆயினர்.

பொருளாதாரம் கையைக் கடிக்க, செலவுகளைக் குறைக்க நேர்ந்தது. ஊழியர்களின் எண்ணிக்கையையும் குறைத்தோம். அமெரிக்காவில் மட்டுமே அச்சு வடிவத்தில் வெளியிடப்படும் 'தென்றல்' தமிழ் இதழை அறிமுகப்படுத்தினோம். விளம்பர ஆதரவு கிடைத்தது. எல்லாப் பிரிவுகளிலும் பரவலாக தகவல்கள் கொடுப்பதைவிட, குறிப்பிட்ட பிரிவுகளில் கவனம் செலுத்துவது, தரம், பொருளாதாரம் இரண்டுக்குமே ஏற்றது என்ற முடிவுக்கு வந்தோம். தொடக்கத்தில் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரவில்லை. ஆனால் இப்போது தரத் தொடங்கியிருக்கிறோம். நிலைமை சீரடைந்திருக்கிறது. 'ஆறாம் திணை'யில் சில பகுதிகளை இலவசமாக்கி, அதையே தூண்டிலாக்கி, இதழின் பிறபகுதிகளையும் சந்தா செலுத்தி படிக்க வைக்கப் போகிறோம். இப்போதைக்கு ஒவ்வொரு நாளும் சுமார் அறுபத்தையாயிரம் பேர் எங்கள் வலைத் தளங்களை வாசிக்கிறார்கள். இது மேலும் அதிகமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்கிறார் ரவிச்சந்திரன்.

— ஜி.எஸ்.எஸ்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

ஆஹா!

ரூ.50,000 பரிசு!

கோவை வாசகர்களுக்காக மட்டுமே

கல்கி

வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி!

வந்தாச்சு மூன்றாவது கூப்பன்! ரூ.50,000 மெகா பரிசை அள்ள நீங்கள் செய்ய வேண்டியது ஈஸியான வேலை தான்.

கீழே உள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 28 செப்டெம்பர் மற்றும் 5, 12 அக்டோபர் இதழ்



களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய கோவை மாவட்ட வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக, சென்னை, தி. நகர் P.R. ஜுவல்லரி வழங்கும் ரூ.120/- மதிப்புள்ள வெள்ளி காமாட்சி விளக்கு நூறு பேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (கோவை)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி கோவை மாவட்ட கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

ஆஹா! ரூ. 50,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 3

1. கோவை மாவட்ட ஆட்சியாளரின் பெயர்..............................
2. ....கட்சித் தலைவரின் பெயரைத் திருப்பிப் போட்டால் இந்த க்விஸ் தொடர்பான ஊரின் பெயர் கிடைத்துவிடும்.
3. கோவை அருங்காட்சியகம் .... சாலையில் உள்ளது.
4. சினிமா தயாரிப்பாளர் தேவருக்கு உகந்த முருகனின் திருத்தலம் ....
5. வ.உ.சி. பூங்காவுக்கு எதிரே உள்ள .... மைதானத்தில் கால் பந்துப் போட்டிகள் வழக்கமாக நடைபெறும்.
6. பல துறைகளிலும் அரிய கண்டுபிடிப்புகள் செய்த, கோவையின் மறைந்த பிரபல விஞ்ஞானி ....



✉ ஃபார்முலா கார் பந்தயங்களில் இந்தியாவின் பெயரை ஓங்கி ஒலிக்கச் செய்து கொண்டிருக்கும் நரேன் கார்த்திகேயனின் பேட்டி, கார் பந்தயம் தொடர்பான நிறைய விஷயங்களை எங்களுக்கு விளக்கும் விதமாக அமைந்திருந்தது.
மொரட்டுப்பாளையம், இரா.வி. சௌந்தர்யாவிசாலினி.

✉ 'திக்கும் திருப்பம் நிச்சயம்' ப. சிதம்பரத்தின் பேட்டி ஒன் டே மேட்சின் விறு விறுப்போடு







கோவை காதலர்களுக்குத் திண்டாட்டம்!

அமைந்திருந்ததுடன், ஏதோ ஓர் எதிர்பார்ப்பை உண்டு பண்ணிவிட்டது நிஜம்!
திருவாரூர், ஆர். ராமசுப்ரமணியர்.

✉ திராவிடக் கட்சிகளைத் தவிர்த்து காமராஜ் ஆட்சியைக் கொணர பசி, ஆசைப்படுவது அவர் விருப்பம். ஆனால் நித்தம் ஒரு யுத்தமாய் கோஷ்டியில் திளைக்கிறதே காங்கிரஸ்..! இந்நிலையில் ஆட்சி, அதிகாரம் என்பதெல்லாம் 'காட்டைக் காணுதற்கு முன் கோட்டேர் போட' நினைப்பது போன்றது.
கோவை - 23, போத்தனூர் புலிச்சோழன்.

✉ தொலை தூரப் பார்வையில் தமது தரப்பு வாதங்களைத் தெளிவாகவும் பவ்யமாகவும், தீர்க்கமாகவும் அடுக்கி வைப்பதில் ப. சிதம்பரம் படுகில்லாடிதான். ஆனாலும் காங்கிரஸ் இன்னும் விட்டுக் கொடுக்காமல் தொங்கிக் கொண்டிருக்கும் அவரது 'கொக்கு காத்திருப்பை' நினைக்கும்போதுதான் கொஞ்சம் நெருடுகிறது.
அகஸ்தியர்பட்டி, எம். இசக்கி.

✉ முப்பத்து ஏழு வருடங்களாக வேலை பார்த்து வரும் 'சின்சியர், கை நீட்டாத, போலீஸ்காரர்' நாகலிங்கத்தின் கதியைப் பார்த்தீர்களா? இன்னும் தலைமைக் காவலர் தான்! பன்னிரெண்டரை லட்சம் அரசு ஊழியரில், பதினோரு லட்சம் பேரின் நிலைமை இதுதான். நேர்மையும், திறமையும் மதிக்கப்படுவதே இல்லை.
சென்னை, ச. இராசன்.

✉ நிருத்யோதயா பத்மா சுப்ரமணியம் - நல்லி குப்புசாமி உரையாடல் படிக்கப் படிக்கச் சுவையூட்டியது. பாராட்டு!
திருச்சி - 102, புறம்பை இரா. கு. பிரகாசம்.

✉ எழுத்தாளர் இராஜேஷ்குமார் பேட்டியில் தமிழ்வாணன் 1980ல் காலமானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் 10.11.1977ல் தீபாவளி அன்று காலமானார் என்பதே சரி!
சிங்காநல்லூர்புரம், துணிவே துணைவன்.

✉ என்ன சார் இப்படிப் பண்ணிட்டீங்க! இப்படி வ.உ.சி. பூங்காவை வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டீர்களே! இனி கோவை காதலர்களுக்குத் திண்டாட்டம்தான்!
பொள்ளாச்சி, பொ. பொன்ராஜ்குமார்.

✉ 'காக்க... காக்க'வில் சூர்யாவின் பாத்திரப் பெயர் அன்புச்செல்வன், நீங்கள் குறிப்பிட்டது போல வெற்றிச்செல்வன் அல்ல. விமர்சகர் அதிரடிப் படங்களைப் பார்க்கும்போது அசந்து விடுவாரோ என்னவோ?
குட்டலாடம்பட்டி, கொ. மூர்த்தி.

விழுப்புரம் மாநாடு திருப்புமுனை ஆகுமா...?

கல்கி: எந்தச் சூழலில் தி.மு.க மாநாடு கூடுகிறது? எந்த வகையில் இது முக்கிய மான மாநாடு? இந்த மாநாட்டின் மூலம் என்ன செய்தியை தமிழகம் எதிர்பார்க்க லாம்?

கலைஞர்: தி.மு.க மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது மாநில மாநாட்டைக் கூட் டும். ஆனால் சில எதிர்பாராத இடையூறு களால் திருநெல்வேலியில் கூட்டப் பட்ட மாநாட்டிற்குப் பிறகு, ஒரு ஐந் தாண்டுக் கால இடைவெளி ஏற்பட்டு விட்டது. விழுப்புரம் மாநாடு மாவட்ட அளவில் நடைபெறுகிற மாநாடு என்று ஏற் பாடு செய்யப் பட்டா லும், மாநில மாநாடு அளவுக்குச் சிறப்புப் பெற்றுவிட்டது. கார ணம், தொடக்கத் திலிருந்தே இந்த மாநாட் டிற்குப் பல்வேறு விதமான எதிர்ப்புகளை, இடையூறுகளை இன்றுள்ள அரசு செய்து வருகிறது. பொது வாக எந்தக் கட்சி மாநாடு என்றாலும், மாநாட்டையொட்டிய பேரணி, ஊர்வலங் கள் நடத்துவது வழக்கம். நெடுஞ்சாலை என்ற காரணத்தைக் காட்டி விழுப்புரம் மாநாட்டுப் பேரணிக்குத் தடை விதித்து விட்டார்கள். மாவட்ட அதிகாரிகளிடத் தில் பேசியும் பயனில்லை. நெடுஞ் சாலையை விடுத்து வேறு வழியாகப் பேரணி செல்ல அனுமதி கொடுங்கள் என்று மனு செய்து, அந்த வழியையும் போலீஸ் அதிகாரிகளுக்குக் காட்டி னோம். அந்தப் பாதையிலும் பேரணி நடத்த அனுமதி மறுக்கப்பட்டு, அந்த மறுப்பு, பொன்முடியின் வீட்டுக் கதவிலேயே ஒட்டப்பட்டது. இவையெல்லாம் இந்த மாநாட் டிற்குத் துவக்கத்திலேயே ஏற்பட்ட சிறப்புகள்!

கல்கி: அரசியல் ரீதியான சிறப்பு என்னவென்று



-கலைஞர் பேட்டி

சொல்லுங்கள்!

கலைஞர்: ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள அரசியல் மாற்றங்கள், ஓர் அடக்குமுறை ஆட்சியுடைய, அடாவடித்தனமான அதிகார துஷ்பிரயோகத்தை, திடீர் திடீரென்று, பிறப்பிக்கப்படக் கூடிய புதிய புதிய சட்டங்கள் (இன்றுகூட சென்னை நகரில் மரங்களை வெட்டினால் ஆறு மாதம் தண்டனை என்று சட்டம் பிறப்பிக்கப்படும் என்று அறிவித்திருப்பது ஓர் உதாரணம்) மட்டுமல்லாமல், பொதுவாக தற்போதைய ஆட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளை முழுமையாக அலசி ஆராய்ந்து, எதிர்கால தமிழகத்துக்கு ஏற்றதொரு நல்ல வழிகாட்டுதலை இந்த மாநாடு எடுத்து வைக்கும்.

கல்கி: விழுப்புரம் மாநாடு திருப்புமுனை மாநாடாக இருக்கும் என்று அறிவித்தீர்கள். பாராளு மன்றத் தேர்தல் தொடர்பாக என்ன நிலையை தி.மு.க எடுக்கும் என்ற அறிவிப்பை எதிர்பார்க்கலாமா?

கலைஞர்: மாநாட்டுக்கு முன்போ அல்லது அதற்குப் பிறகோ, கழகத்தின் பொதுக்குழு கூடி அதில்தான் முடிவெடுக்கப்படும். தனியாக நான் எந்த முடிவையும் எடுப்பதில்லை. ஏனென்றால் பொதுக்குழு கூடித்தான் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்வதென்ற முடிவை எடுத்தோம். தே.ஜ.கூ.வில் தொடர்கிறோமா இல்லையா என்பதை பொதுக்குழுதான் முடிவு செய்யும்.

கல்கி: நான்கு வருட காலமாக பா.ஜ.க.வுடன் நட்பு கொண்டு, தே.ஜ.கூ. அரசில் நீடித்து வருகிறீர்கள்! பா.ஜ.க.வுடன் இருக்கும் இந்தத் தொடர்பு காரணமாக, அரசியல் ரீதியாகத் தி.மு.க இழந்தது என்ன? பெற்றது என்ன?

கலைஞர்: தமிழ்நாட்டு பா.ஜ.கவுக்கும்



தேர்தல் நிதியளிப்புக் கூட்டங்களில் பங்கேற்க தொடர் பயணம், மாறன் உடல்நிலை தொடர்பான ஆஸ்பத்திரி விஜயம் - மன அழுத்தம், விழுப்புரம் மாநாடு ஏற்பாடுகள், இடையில் முரசொலி கடிதம், வாசிப்பு என்று ஒரு நாளில் இருபது மணி நேரம் பிஸியாக இருக்கும் கலைஞர், விழுப்புரம் மாநாட்டையொட்டி 'கல்கி' பேட்டிக்கு ஒப்புக் கொண்டார். மைக்கை அவர் சட்டையில் மாட்டும்போது "மைக் ஒயர் உங்க movementக்கு கொஞ்சம் தடையாக இருக்கும்" என்று நாம் சொன்னபோது "என் movementக்கு யாரும் தடைபோட முடியாது" என்ற கலைஞர் திருப்பி வார்த்தை விளையாட, ஒரு கலகலப்புடன் பேட்டி துவங்கியது.

எங்களுக்கும் நான்காண்டுக் காலமாக உறவு இல்லை. காரணம், கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, முக்கால் பங்கு தமிழக பா.ஜ.க.வினர், மறைமுகமாக ஜெயலலிதா ஆதரவாளர்களாக மாறி விட்டார்கள். எந்த ஒரு கட்சியிலும் இப்படி ஒரு பிளவை உண்டாக்க முடியும் என்று காட்டுவதற்காக காங்கிரஸ் மற்றும் பா.ம.க.விலும்கூட, ஜெயலலிதா இதுபோன்ற பிளவை உண்டாக்கினார். அது போல பா.ஜ.க.விலும் செய்து சில பேர் தி.மு.க.வைத் தாக்கிப் பேசினார்கள். நாங்கள் அதைப் பற்றியெல்லாம் கண்டு கொள்வதில்லை. எங்களுக்கும், தமிழக பா.ஜ.க.வுக்கும் நல்லுறவு



கிடையாது. அதனால் 'இழந்தது எவ்வளவு; பெற்றது எவ்வளவு' என்ற கேள்வியே எழாது.

கல்கி: ஆனால் தி.மு.க மதச் சார்பற்ற கட்சி என்ற பெயரைப் பெற்றிருந்தது. பா.ஜ.கவுடன் மத்தியில் கொண்டுள்ள உறவு காரணமாக அந்தப் பெருமையை நீங்கள் இழந்துவிட்டதாகக் கருதவில்லையா?

கலைஞர்: மதச் சார்பற்ற அமைப்பு திமுக என்ற பெருமையை என்றைக்கும் இழக்க மாட்டோம். நாங்கள் அதை இழந்திருந்தால் இந்து முன்னணியின் பாராட்டைப் பெற்றிருப்போம். மேலும் இது சம்பந்தமாக மற்றொரு விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். மதச் சார்பற்ற நிலை என்பது ஓர் அரசுக்குத்தான் இருக்க வேண்டும். கட்சிகளுக்கிடையில் மதச்சார்பற்ற கட்சி என்றெல்லாம் இருக்க முடியாது. எப்படி என்று சொன்னால், ஒரு முஸ்லிம் அரசியலில் இருக்கிறார்; ஒரு இந்து அரசியலில் இருக்கிறார்; ஒரு பௌத்த மதக்காரர் அரசியலில் இருக்கிறார்... இவர்கள் அனைவரும் இணைந்து ஒரு கூட்டணி நடத்தினால், அது மத நல்லிணக்க கூட்டணி. ஆனால் அரசு மதச்சார்பற்று இருக்க வேண்டும். அரசுக்கு மதம் இருக்கக்கூடாது, அது மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கருத வேண்டும். கட்சிகள் மத நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

கல்கி: பா.ஜ.க.வால் மத அடிப்படை வாதத்தை விட்டுக் கொடுக்க முடியவில்லையே. கூட்டணி அரசை நடத்திக் கொண்டிருப்பதால் வெளிப்படையாகப் பல விஷயங்களை அவர்கள் பேசாவிட்டாலும் உள்ளுக்குள் அவர்கள் எண்ண ஓட்டம் அடிப்படை வாதம் சார்ந்ததுதானே?

கலைஞர்: உங்கள் மதிப்பீட்டை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் தே.ஜ.கூ. செயல்திட்டம் உருவாக்கப்பட்டபோது, 'சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதமான தொல்லையும் கொடுக்க மாட்டோம்; அவர்களையும் சகோதரர்களாகக் கருதுவோம்; அயோத்தி பிரச்னையெல்லாம் எழுப்ப மாட்டோம்' என்ற வாக்குறுதிகள் தந்ததால்தான் நாங்கள் தே.ஜ.கூ.வில் இருக்கிறோம். இந்த வாக்குறுதிகள் என்றைக்கு மீறப்பட்டாலும், அதில் இருக்க மாட்டோம். பலமுறை இதைச் சொல்லியிருக்கிறேன்.

கல்கி: அந்த வாக்குறுதிகளுக்கு சவால் வந்து கொண்டே இருக்கிறதே! இப்போதுகூட திரிசூலம் விநியோகம் என்று தொகாடியா துவங்கியிருக்கிறார்.

கலைஞர்: அதை நடத்துவது பா.ஜ.க இல்லையே, விஸ்வ ஹிந்து பரிஷத்தானே நடத்துகிறது.

கல்கி: பா.ஜ.கவுக்கும் வி.ஹெச்.பிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

கலைஞர்: திமுக ஆட்சியில் திராவிடக் கழகத்தினர் பூணூலை அறுத்தார்கள். தி.க.விலிருந்து தி.மு.க வந்த ஒரே காரணத்திற்காக அதுபோன்ற சம்பவத்தை தி.மு.க ஏற்றுக் கொள்ள முடியாது. அதேபோல் 1971ல் சேலத்தில், தேர்தலின்போது, ராமர் சிலைகளை பெரியார் உடைத்தார். அதற்காக வழக்குப் போட்டு, சிலரைக் கைது செய்தோம். அது எங்களுக்கு உடன்

பாடான கருத்தல்ல. அண்ணாகூட 'பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்' என்று சொல்லியிருக்கிறார். அதுதான் என் கொள்கையும்; தி.மு.க.வின் கொள்கையும்.



* விழுப்புரம் மாநாடு ஏற்பாடுகளைப் பார்வையிடுகிறார் கலைஞர்...

கல்கி: பாராளுமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. அணிகள் மாற்றம், மூன்றாவது அணி என்றெல்லாம் பலமாகப் பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. மூன்றாவது அணி வாக்குகளைப் பிரித்து விடாதா?

கலைஞர்: மூன்றாவது அணி வர இயலாது. வந்தாலும் அது பெரிய அணியாக இயங்க முடியாது. அது சோபிக்காது. வோட்டுக்களைப் பிரிக்கும் அளவுக்குக் கூட மூன்றாவது அணிக்கு வலிமை இருக்குமா என்பது சந்தேகம்.

கல்கி: பாராளுமன்றத் தேர்தலில் எந்தவிதமான தேர்தல் வியூகத்துக்கு தி.மு.க முயற்சி செய்யும்? இன்று உங்களைச் சந்தித்ததில் இந்தக் கேள்விக்கான பதிலைப் பெறுவதில் ஆர்வமாக இருக்கிறோம்

கலைஞர்: (கைகளை மூடிக் கொண்டே) இந்த விஷயத்தில் இப்போதைக்குக் கைகளை மூடி வைத்துக் கொள்ளத்தான் நான் விரும்புகிறேன்.

கல்கி: காங்கிரஸுக்கும் உங்களுக்கும் தேர்தல் உறவு ஏற்படுவதில் உள்ள ஒரே சிக்கல் 'விடுதலைப்புலிகளை தி.மு.க ஆதரிக்கிறது' என்ற விவகாரம்தான். அந்த உறுத்தலை சரி செய்யும் பட்சத்தில் தமிழ்நாட்டு நலனுக்கு ஏற்ற கூட்டணி அமையுமே!

கலைஞர்: விடுதலைப்புலிகளுக்கு என்றைக்கு நாங்கள் ஆதரவு கொடுத்தோம்?

கல்கி: ராஜீவ் கொலைக்கு அப்புறம் உங்கள் நிலைப்பாடு மாறியது தெரிந்ததுதான். ஆனால் உங்கள் தற்போதைய நிலைப்பாடு பற்றி எந்த அளவுக்கு காங்கிரஸ் மேலிடத்துக்குப் புரியும்படி சொல்லப்பட்டிருக்கிறது?

கலைஞர்: இன்னமும் சொல்லப் போனால் ராஜீவ் கொலையில் தி.மு.க.வைத் தொடர்புபடுத்தி வதந்தியைக் கிளப்பியவர் வாழப்பாடி ராமமூர்த்திதான். கட்சி வளர்ச்சிக்கும், தேர்தலில் வெற்றி பெறவும் அப்படியொரு வதந்தியை அவர் கிளப்பி விட்டார். ராஜீவ் கொலையைத் தொடர்ந்து முரசொலி அலுவலகம் கொளுத்தப்பட்டது. எழுபது லட்சம் ரூபாய் நஷ்டம். ராஜீவ் கொலையில் தி.மு.கவைத் தொடர்பு படுத்தியது என்பது ஒரு சூழ்ச்சி. இந்தச் சூழலில் மேலும் இதுபற்றிப் பேச நான் விரும்பவில்லை.

கல்கி: காங்கிரஸ் மேலிடத்துக்கு தி.மு.க.வுடன் கூட்டணி சேருவதில் இந்த வகையில் சங்கடம் இருக்கத்தானே செய்கிறது?

கலைஞர்: அதற்கு நான் என்ன செய்வது? அவர்களுக்கு இந்தத் தெளிவு ஏற்படுத்தி 'கூட்டணியில் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று யாரிடமும் சொல்லும் நிலையில் நான் இல்லை. நான் ஆரம்பக் காலத்திலிருந்து சுயமரியாதைக்காரன்.

கல்கி: சமீப காலத்தில் காங்கிரஸ் - சி.பி.ஐ, சி.பி.எம்மோடு சேர்ந்து ஜெயலலிதா அரசை எதிர்த்து கூட்டுப் போராட்டம் நடத்தியிருக்கிறீர்கள். பா.ஜ.க.வுடன் கூட்டணியில் நீடித்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் ஜெ. எதிர்ப்பு அலையை, இவர்களுடன்



''என்னுடைய பெயரில் மட்டும் சினிமா நடிகை இல்லையே என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.''

''அதற்கு என்ன செய்ய முடியும் திலோத்தமை!''

''என் பெயரை மும்தாஜ் என்று மாற்றப் போகிறேன் நாரதரே!''

- ஞா. ஞானமுத்து

சேர்ந்து தி.மு.க. பயன்படுத்திக் கொள்வது இந்தக் கட்சியினருக்கு கசப்பை ஏற்படுத்தியிருக்கிறதே! இந்த இரட்டைக் குதிரைச் சவாரி எத்தனை நாள் நீடிக்கும்?

கலைஞர்: அது ஒரு திறமைதானே *(சிரிக்கிறார்)* இரண்டு குதிரைகளில் பயணம் செய்வது திறமைதானே! *(மீண்டும் சிரிப்பு)*

கல்கி: இதுபோன்ற நிலையை காங்கிரஸ் - சி.பி.ஐ, சி.பி.எம் ஆகிய கட்சிகள் விரும்பவில்லையே!

கலைஞர்: நீங்கள் எப்படி மாற்றிக் கேட்டாலும் நான் மூடிய கையைத் திறப்பதாக இல்லை. *(கலைஞர் கையை மூடிக் காட்ட, போட்டோ எடுக்கப்பட்டது)* 'கை'யைப் பற்றி *(காங்கிரஸ் தேர்தல் சின்னம்)* பேசிக் கொண்டிருப்பதால் கையைப் படம் எடுக்கிறீர்களா? *(சிரிப்பு)*

கல்கி: தா.கிருஷ்ணன் மரணம் காரணமாக தென்மாவட்டங்களில் கழகத்தின் செல்வாக்கு கொஞ்சம் இறங்கிவிட்டதாகச் சொல்லலாமா?

கலைஞர்: உங்கள் அபிலாஷையாக இருந்தால் சொல்லிக் கொள்ளுங்கள். எனக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது தா.கி.மரணம்.

கல்கி: உட்கட்சித் தேர்தலில் நிறைய நியமனங்களுக்கு இடம் கொடுக்கப் பட்டிருக்கிறதே!

கலைஞர்: அப்படியெல்லாம் கிடையாது. நூற்றுக்குப் பத்து இருக்கலாம். போட்டி இருக்கும் இடங்களில் சம்பந்தப்பட்ட எல்லோரும் அமர்ந்து பேசி ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது எப்படி நியமனம் ஆகும்? நியமனங்கள் மிக அரிதாகவே செய்யப்படும்; அது கூடப் பெரும்பாலும் தற்காலிகமாக இருக்கும்.

கல்கி: தி.மு.க.வில் ஸ்டாலின் ஆதரவாளர்கள், அழகிரி ஆதரவாளர்கள் சேருவார்களா?

கலைஞர்: அவர்கள் இணைந்துதான் இருக்கிறார்கள். பிரிந்திருக்கும் நிலையே கிடையாது. அப்படி இரண்டாகப் பிரிந்து இருந்தால் அவர்களுக்கு தி.மு.க.வில் இடம் கிடையாது.

கல்கி: பிரிந்து செயல்படுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படுமா?

கலைஞர்: கட்டாயம் எடுக்கப்படும். அழகிரி பேரிலேயே எடுத்திருக்கிறோமே! மூன்பு ஒன்றரை வருடம் அவர் கட்சியில் இல்லையே!

கல்கி: ஜெ. ஆட்சியில் பாராட்டத்தக்க அம்சம் ஏதாவது உண்டா!

கலைஞர்: ஒரு விஷயம் கேள்விப் பட்டேன். திரைப்படத் துறையினர் அவரைச் சந்தித்து கோரிக்கை வைத்தபோது "நீங்களெல்லாம்தான் ஆளுக்கொரு முதல்வராக வரப் போறீங்களே! அப்படி ஆகும் பட்சத்தில் உங்கள் கோரிக்கைகளை நீங்களே நிறைவேற்றிக் கொள்ளலாமே" என்றாராம். I appreciate this. *(சிரிக்கிறார்)*


கல்கி: வன்மையாகக் கண்டிக்கத்தக்க விஷயம் என்ன?

கலைஞர்: இரண்டு லட்சம் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்த கொடுமை தான்.

கல்கி: மாறன் உடல்நிலை எப்படி இருக்கிறது?

கலைஞர்: பரவாயில்லை. கோமாவில் இருக்கிறார் என்று பிரசாரம் செய்கிறார்கள். தேறி வருகிறார். மீண்டும் set back வராமல் இருக்க வேண்டும். ஒரு வருடம் மிக அவதிப்பட்டு விட்டார்.

அட்டை, படங்கள்: **மீடியா ராமு**



ஹிந்து - 125!

ஒன்றே முக்கால் ரூபாய் கையிலே கிடைத்தால் என்ன செய்யலாம்?...

இன்றைக்கு அந்தத் தொகைக்கு ஒரு நல்ல செய்தித் தாள்கூட வாங்க முடியாது. ஆனால் 125 ஆண்டுகளுக்கு முன், ஆறு இளைஞர்கள் சேர்ந்து ஒன்றே முக்கால் ரூபாய் கடன் வாங்கி, ஒரு செய்தித்தாளை அச்சிட்டு வெளியிட்டனர். எண்பது பிரதிகள் மட்டுமே அச்சிடப்பட்ட அந்த சென்னை நாளிதழ்தான் இன்று தேசம் முழுதும் 9,25,000 பிரதிகள் விற் பனையாகும் 'தி ஹிந்து': கோடிக்கணக்கான வாசகர்களைப் பெற்று, நாட்டின் முன்னணி நாளிதழ் என்கிற பெருமையுடன், 125வது ஆண்டுவிழாவை, பிரதமர் தலைமையில் கொண்டாடி யிருக்கிறது.

காலத்தின் தேவைக்கேற்ப ஹிந்துவின் கொள்கை திருத்தி யமைக்கப்பட்டிருப்பதாக அவ்விதழின் சமீபத்திய தலையங்கம் ஒன்று விவரிக்கிறது :


- செய்திகளைச் செய்திகளாகவே தருவோம்; அதில் விமர் சனக் கருத்துகள் கலவாமல் காப்போம்.
- பத்திரிகை சுதந்திரத்துக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் எழுந்துள்ள சவால்களைச் சந்திப்போம் - அச் சுதந்திரங்களை வலிமைப்படுத்த அரசியல் சாஸன திருத்தங்களுக்காகப் போராடுவோம்.



கல்கி



2003 செப்டெம்பர் 21
சுபானு புரட்டாசி 4
மலர் : 62
இதழ் : 8



- சமுதாய நீதிக்காகவும் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்தும் குரல் கொடுப்போம்.
- மனித நேயத்தைக் காப்போம்.
- அனைத்துப் பிரச்னைகளையும் மக்கள் நலன் என்கிற கண்ணோட்டத்தில் மட்டுமே அணுகி மதிப்பீடு செய்வோம்.


· இந்த ஐந்தும் ஹிந்துவின் 'புதிய அஜெண்டா' என்றாலும், இந்தக் கொள்கை உறுதிக்கும் ஆரோக்கியமான ஜனநாயகப் பார்வைக்கும் அஸ்திவாரம் எங்கே என்று பார்த்தால், ஒன்றே முக்கால் ரூபாய் கடன் வாங்கிய அந்த ஆறு பேர்தான், அதை அமைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சியின் அநீதிகளைச் சீர்திருத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட இச் செய்தித்தாள், இறுதியில் அவ்வாட்சியை ஒழித்துக் கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து, தேசிய இயக்கத்தின் போர்க்கருவியாகப் பரிணமித்தது. சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டு நிர்மாணப் பணிகளுக்கு உதவும் கருவியாக உருக் கொண்டது.

சுதந்திர இந்தியாவின் ஜனநாயக இயக்கத்தில் ஹிந்துவுக்கு முக்கியப் பங்கு இருந்து வருகிறது. போஃபார்ஸ் ஊழலை அம்பலப்படுத்தியது போன்ற புலனாய்வுப் பணிகளானாலும் சரி, தேர்தலையொட்டி செய்தி சேகரிப்பானாலும் சரி... ஹிந்துவின் நம்பகத்தன்மை கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது.

ஆங்கில நாளிதழான போதிலும் இந்தியாவின் பன்மொழிக் கலாசாரத்தை மதித்து, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் செய்தியிலும் சிந்தனையிலும் இடம் கொடுத்து வருகிறது.

கலை, இலக்கியம், சினிமா, விளையாட்டு, விஞ்ஞானம், விவசாயம், தொழில் - வர்த்தகம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாகத் தோள்கொடுத்து வருகிறது.



இன்றைய தேதியில் ஹிந்து ஒரு நானூறு கோடி ரூபாய் நிறுவனம். பதினொரு நகரங்களில் அச்சாகி தினமும் வெளியாகின்றது.

சக பத்திரிகைகள் ஆரோக்கியமற்ற வியாபாரப் போக்கை மேற்கொண்டாலும், விலை குறைப்பு யுத்தம் தொடுத்தாலும் ஈடுகொடுத்து, தொலைக்காட்சி இன்டர்நெட் போன்ற சாதனங்களிடமிருந்து எழும் போட்டியைச் சந்தித்து, கொண்ட கொள்கையிலிருந்து விலகாமல், வியாபார ரீதியாகவும் வெற்றி பெற்று 125 ஆண்டு இளமையுடன் திகழ்வதென்பது மாபெரும் சாதனை.

பத்திரிகை தர்மத்தையும் வியாபார நெறிகளையும் பிறழாமல் கடைப்பிடிக்கும் ஒரு நிறுவனத்தால்தான் இது போன்ற சூழலில் தாக்குப் பிடிக்க முடியும். இரண்டையும் இரு கண்களெனப் போற்றி வரும் 'தி ஹிந்து'வை வாசகர்கள் சார்பிலும், சக பத்திரிகைகள் சார்பிலும் மனதார வாழ்த்துகிறோம்.

இன்றைய அதன் ஆசிரியர் குழுவினரையும் ஊழியர்களையும் வாழ்த்துகிற சமயத்தில், இந்த ஸ்தாபனத்துக்கு ஓர் உயர் நோக்கையும் அதை அடையும் மார்க்கத்தையும் மிகத் தெளிவாக இனம் காட்டிவிட்டுச் சென்ற ஸ்தாபகர்களையும், அடுத்தடுத்து ஆசிரியர் பதவிகளில் அமர்ந்து கௌரவம் சேர்த்த பல பெரியோர்களையும் நினைவு கூர்ந்து வணங்குகிறோம்.

அந்தப் பெரியோர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் சந்தித்த சவால்களைவிட, இன்றைய சுதந்திர பாரதத்தின் ஜனநாயக ஆட்சியில் பத்திரிகைகள் சந்திக்க நேரும் சவால்கள் கடுமையானவை; கொடுமையானவையும்கூட! இல்லாமலா ஹிந்து பத்திரிகை தமிழக அரசு தொடுத்துள்ள 15 அவதூறு வழக்குகளைச் சுமந்து கொண்டிருக்கிறது?

அச்சமின்றி ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்கவும் உள்ளடக்கத்தில் உண்மைக்கு மட்டுமே இடமளித்து நம்பகத்தன்மை காக்கவும், அனைத்து பத்திரிகைகளுமே உறுதி பூண வேண்டிய சமயம் இது. ○


தீபாவளியின்
வண்ணங்களையும்
குதூகலத்தையும் தாங்கி
பாரம்பரியப் பொலிவுடன்
தயாராகிறது...
கல்கி
தீபாவளி மலர்
2003
உங்கள் பிரதிக்கு உள்ளூர்
ஏஜெண்டிடம் முன் பதிவு செய்யுங்கள்.

பிரார்த்தனை

• பதினெட்டு வயதுக்குத்
தப்பு ரூட்டில்
சென்றிருக்கும்
ஷங்கர் - சுஜாதா
தத்தம் வயதுக்குத்
திரும்ப...

• 'பாய்ஸ்' மாதிரி
கலாசாரக் கொலை செய்ய
இருபத்திரண்டு கோடி
ரூபாயை வீணடிக்காமலிருக்க...

• நடுரோட்டில் நிர்வாணமாக
ஓடும் இளைஞனைப்
பெண்கள் காதலிக்காமல்
இருக்க...


• 'டேட்டிங்' என்ற பெயரில்
'பசங்க' ஏடாகூடக் கேள்விகள்
கேட்காமலிருக்க...

• ரவி.கே. சந்திரன்
தமது கேமராவை
மற்றவர்களிடம் கொடுக்காமலிருக்க...

• விவேக்
காமெடியனாகவே நடிக்க...


• இது போன்ற படங்களால்
பாலியல் வன்முறைகள்
அதிகரிக்காமல் இருக்க...

- மொக்கராசு





பாய்ஸ்



கணேசனுடன் ஒரு பேட்டி

"**வ**ணக்கம், கணேசன்."

"வாங்க, வணக்கம்."

"உங்களுக்கெல்லாம் ஏதோ அதிர்ஷ்டம் அடிச்சிருக்காமே?"

"ஹி..ஹி... அம்மா தயவு."

"வருஷத்துல ஒரு மாசம் விடுமுறையாமே? ஜாலிதான்..."

"பதினோரு மாசம் கஷ்டப்பட்டு உழைக்கிறோமே?"

"அப்பப்ப பருவக் கோளாறு காரணமா, பக்கத்துல இருக்கறவரை துவம்சம் பண்ணறீங்க. இது நியாயமா?"

(வெட்கத்துடன்) "பின்னே? எங்க உணர்வுகளைக் கவனிக்காம இருந்துட்டா என்னதான் செய்யறது? ஹி..ஹி..."

"முதலாளி சொல்றார்னு, தெருவில இருக்கறவங்க, வரவங்க போறவங்ககிட்ட எல்லாம் கை நீட்டிக் காசு வாங்கறீங்களாமே?"

"முதலாளிகிட்ட மொறைச்சுக்கலாமா? அதான் அவர் சொல்றபடி கேக்கறேன். தேர்தல் நிதிக்கா கேக்கறேன்?"

"உங்க நண்பர்கள் நாற்பத்தியோரு பேரையும் ஒண்ணா சேர்த்து வச்சு, தினம் தினம் பிரமாதமா விருந்து வைச்சு கவனிக்கப் போறாங்களாமே?"

"பல தடவை பட்டினியாக் கிடக்கறோம். அப்ப யாரும் கண்டுக்க மாட்டேன்கறீங்க. இப்ப ஏதோ அம்மாவாப் பார்த்து நல்ல ஆகாரம், நிறைய ரெஸ்ட்னு கவனிக்கச் சொல்லியிருக்காங்க. கண்ணு போட்டுடாதீங்க!"

"ஒண்ணே ஒண்ணுல மட்டும், ஜாக்கிரதையா இருங்க."

"அய்யோ, என்ன பயமுறுத்தறீங்க?"

"ஒண்ணுமில்லே. நாற்பத்தியோரு பேர் ஒண்ணா சேர்றீங்க. அசோசியேஷன் - கிசோசியேஷன், யூனியன் - கினியன்னு அமைச்சுக்கிட்டு, விழா சமயத்துல ஸ்ட்ரைக்னு மட்டும் ஆரம்பிச்சிடாதீங்க. ESMA பாஞ்சுடும்."

"ESMAவா?"

"ஆமா. Elephant's Services Maintenance Act, 2003."

— சாருகேசி



மழை 'சோ'என்று வெளியே பெய்த தால் குளிர்ந்த காற்று 'ஜில்' பரப்பிக் கொண்டிருந்தது. பள்ளிக்குக் குடையைப் பிடித்தவாறே குழந்தைகள் சென்று கொண்டிருந்தன. தனக்கு மட்டும் ஒரு குடை இல்லாமல் செல்வராஜ் தவித்துக் கொண்டிருந்தான்.

ஒரு குடை மட்டும் இருந்திருந்தால் இந்நேரம் மழை நீரில் காலை அளைந்த வாறே அவனும் பள்ளிக்குச் சென்றிருப் பான். மழை நிற்கட்டும் என்று காத்திருந் தான் செல்வராஜ்.

மதுபாக்யா

இரண்டொரு முறை திண்ணையில் நின்று வெளியே வானத்தை எட்டிப்பார்த் தான் செல்வராஜ். மேகம் இன்னும் திரள் திரளாய் இருந்தது.

"எம்மா, பள்ளிக் கூடத்திற்கு நேரம் ஆகிட்டிருக்குமா?"

"அதுக்கென்னடா? மழை நின்னவுடன் போகலாம்... நீ மொதல்ல இந்த முறுக்கைக் கடிச்சு காப்பியைக் குடி" அம்மா தங்க ராணி சொன்னாள்.

"நான் இன்னும் ஒரு நாள் கூட லீவு எடுக்கலை, பிந்தியும் போகலை. டீச்சர் என்னை நல்ல பையன்னு சொல்லுவாங்க. அதை நான் காப் பாத்தணும்" செல்வராஜ் மிகுந்த கரிசனையோடு சொன்னான்.

"அந்தச் சொளவைத் தலையில் வைத்துக் கொண்டு அவனைப் பள்ளிக் கூடத்தில் விட்டுட்டு வா" செல்வராஜின் அப்பா மணிமாறன் சொன்னார்.

இந்த ஒரு வார்த்தை சொன்னதும் பொறுக்காதது போல் வெடிப்புறப் பேசினாள் தங்கராணி.

"ஆமா... இப்படித் தினமும் சொளவை வைச்சே பள்ளிக் கூடத்தில் கொண்டு விடறேன். மழைக்காலமாச்சேனு கொஞ்சம் காசைச் சேர்த்து ஒரு குடை வாங்கி னாத்தான் என்ன?"

குடை இல்லாதது பெருங்குறை யாகப்பட்டது தங்கராணிக்கு. அக்கம் பக்கத்தார் அனைவருமே விதவித மான குடைகளை உபயோகித்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டு துரைராஜ் கரெண்ட் ஆபீஸில் வேலை பார்ப்பவர். அவர் அலுவலகத்துக்குப் போகிறபோது கறுப்புக் குடை கொண்டுச் செல்வார். அவர் மனைவி வெளியே செல்லும்போது, டிசைன் போட்ட குடையைக் கொண்டு செல்வாள். மகனுக்கோ அவனுக்குத் தகுந் தாற் போல் மினி குடை.

எதுத்த வீட்டு செல்வராணியோ இன்னும் ஸ்டைல்காரி! அவள் புடை வைக்கு ஏற்றாற்போல் தினுசு தினுசாய்க் குடை கொண்டு செல்வாள். அவளுக்



கென்ன, அவன் குவைத்காரன் பொண்டாட்டி!

தங்கராணிக்கு இத்தனை பேர் மத்தியில் முறத்தைத் தூக்கி கொண்டு மழையில் செல்லவே தயக்கமாய் இருந்தது.

சேலை முந்தானையை செல்வராஜ் மீது போட்டு சொளவை தலைக்கு மேலே பிடித்துக் கொண்டு பள்ளிக்கு அழைத்துச் சென்றாள்.

மழை விர்றென்று பெய்வதும், இலேசாகத் தணிவதுமாய் இருந்தது. பள்ளிக் கூடம் வந்ததும், உள்ளே ஓடினான் செல்வராஜ்.

''எம்மா, சொளவை உனக்கு மேல் பிடி!'' என்றான் செல்வராஜ்.

அவன் மேல் மழை அதிகமாய்ப் படவில்லை என்றாலும், அங்கிங்கு சட்டையில் ஈரமாய் இருந்தது.

பள்ளிக்கூடம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர்.

தங்கராணிக்கு அவர்கள் முன்னால் சுளவை தலைக்குமேலே பிடித்து வரவே வெட்கமாய் இருந்தது. ஒவ்வொருவரும் கொண்டு வரும் குடைகள் விதவிதமாய் இருந்தன. குவைத்காரர் பொண்டாட்டி செல்வராணி, அவள் மகனுக்குச் சிறுடை கலரிலேயே ஒரு குடையைக் கொடுத்திருந்தாள். அவன் எதிரிலேயே நடந்து வந்தான்.

பம்பாயில் பிரஸ் வைத்திருக்கும் தங்க

ராஜ் மகன் மழைக் கோட்டுடன் வந்தான். அவன் கால்களில் மழைக்கோட்டுக்கு ஏற்றாற்போல் ஷூ இருந்தது. அவனை விடவந்த அவனுடைய அம்மா தங்கராணியைப் பார்த்துக் கேட்டான், ''என்ன இன்னும் குடை வாங்கலையா?''

நட்பாய்த்தான் கேட்டாள். இருந்தாலும் தங்கராணிக்குச் சுள்ளென்று நெஞ்சில் தைத்தது. ஏதோ ஒரு பதிலைச் சொல்லி விட்டு வீடு வந்தாள். ஒரு பிடிவாதமான முடிவுக்கு வந்து விட்டாள். வீட்டில் இருக்கும் இரண்டு கோழிகளையும் விற்றாவது ஒரு குடை வாங்கி விட வேண்டும் என்பதுதான் அது.

வெள்ளிக்கிழமை சந்தை தினம். வள்ளியூருக்கு இரண்டு கோழிகளையும் கொண்டு சென்றாள்.

சந்தைக்கு வெளியே தூரத்திலேயே ஒரு கூட்டம் தங்கராணியை மறித்து கோழிக்கு விலை பேசியது. இரண்டையும் சேர்த்து எழுபத்தைந்து ரூபாய்க்குக் கேட்டது.

''என்னது? ஒரு கோழியே அறுபது ரூபாய்க்கு மேலே விக்குது. நீ என்னண்ணா இரண்டையும் எழுபத்தைஞ்சு ரூவாய்க்குக் கேட்கறே..'' என்று முகத்தைக் கடுகடுவென வைத்துக் கொண்டு போனாள்.

''உங்க பையன் பார்த்திபன் ரசிகனா?''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''அவன் கிறுக்கி கிறுக்கி எழுதும் போதே நினைச்சேன்.

— ம. மணிகண்டன்



ஆனால் சந்தையிலோ அவள் எவ்வளவு விலை பேசியும் எண்பது ரூபாய்க்கு மேல் விற்க இயலவில்லை. விதியை நொந்து கொண்டு கடைகடையாய் ஏறி, குடைக்கு விலை பேசினாள். குடை நூற்று இருபத்தைந்து ரூபாயில் இருந்தது. மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வெறுப்புடன் திரும்பி விட்டாள்.

''வீட்டிலே இருக்குற இரண்டு குஞ்சு கோழியைக் கொண்டு வந்து வித்து மிச்சத்தை ஈடு கூட்டி குடை வாங்கிட்டா போச்சு''என்று நினைத்தாள்.

வீட்டுக்கு வந்தால், புருஷன் செல்வராஜனுக்குக் காய்ச்சல். முனகிக் கொண்டு படுத்திருந்தான். அவள் குடைக்காக வைத்திருந்த பணத்தைத் தொடவில்லை. புருஷனுக்கு காரம், புளி சேர்க்காத பத்தியச் சாப்பாடு கொடுத்து, கஷாயம் தந்தே காய்ச்சலைக் குணப்படுத்தினாள். காய்ச்சல் குணமான போது 'அப்பாடா!' என்றிருந்தது அவளுக்கு.

இந்த வாரம் வெள்ளிக்கிழமை குஞ்சுக் கோழிகளைக் கொண்டு விற்று எப்படியாவது குடை வாங்கி விட வேண்டும் என்று எண்ணமே வட்டமிட்டது.

ஆனால் செல்வராஜனுக்கோ, போன ஜுரம் மறுபடி அதிகமாகித் திரும்பி விட்டது. வலிப்பு வந்து விடுமோ என்ற பயமேற்பட்டதும், பதற்றத்துடன் வள்ளியூருக்குக் கொண்டு சென்றாள். டாக்டர் ஊசி போட்டார். டாக்டருக்கு ஃபீஸ், மருந்து மாத்திரை என பணம் கரைந்ததில் மிஞ்சியது வெறும் பத்து ரூபாய்த் தாள் தான்.

டாக்டரிடம் சென்று மருந்துக் கடையில் வாங்கிய மருந்துகளைக் காட்டினாள். மூன்று வேளைக்கும் சாப்பிட வேண்டிய மருந்துகளைக் காட்டி விட்டு, ''நாளைக்கு மறுபடி கூட்டிக்கிட்டு வாம்மா! இன்னொரு ஊசி போடணும்'' என்றார்.

'நாளை வெள்ளிக்கிழமை. கையோடு சந்தைக்குக் குஞ்சுக் கோழிகளைக் கொண்டு வரவேண்டும். சந்தையில் விற்று விட்டு, அதன் பின் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும். இந்த ஊசியோட புருஷனுக்குக் காய்ச்சல் குணமாயிடணும் மகமாயி...' தங்கராணி மனசுக்குள் உருகினாள்.

குடையைக் குறித்து அவளுக்கு ஞாபகம் வரவே இல்லை. ○

மூட்டு வலி! மூட்டு வலி! மூட்டு வலி!

பல வருட வேதனை
சில நாட்களில் பக்க
விளைவுகள் இல்லாத
முழுமையான ஆற்றல்

அசமந்த ஓமம்
(Celery Seeds)
ஆஸ்திரேலியாவின்
விஞ்ஞானப் புரட்சி
இப்பொழுது இந்தியக்
கூட்டு முயற்சி



Mrs. Akilamani
Old No.53/4, New No.111,
T.T.K.Road, Alwarpet,
Chennai - 600 018.

ஆர்தோக்யூர்™

ஆயுர்வேதம் ஆனால்
திறனோ அதிவேகம்



Product of
NATURE REMEDIES (P) LIMITED
CHENNAI-600 083

MARKETED BY:
KUREWEL PHARMA CHENNAI-600083
PH: 044 2489 3013
044 2471 1719

இப்பொழுது தமிழகம் மற்றும்
*கர்நாடகம் எங்கும் கிடைக்கும்

*Super stockist for Karnataka:
ARIES MARKETING, Bangalore - 560010.
Ph: 3526356, Mobile: 9844152615.

STOCKISTS

Chinmaya Nagar	Vasantha Enterprises	24795251
Sowcarpet	Srinath Medical Agencies	25352799
Annanagar	Perfect Medical Enterprises	26150253
Teynampet	Prisam Pharmaceuticals	24338456
Mylapore	S.V.S.Agencies	24941057
Perambur	Kumaran Pharma Agencies	26704285
Tiruvottiyur	Kumaran Agencies	25734336
Tambaram(W)	Sri Saravana Pharma	22263890
Nanganallur	Sunmoon Enterprises	22310186
Pallavaram	Ganesh Agencies	22402189
Pudukkottai	A.V.Medical Agencies	220181
Dindigul	Alagappa Agencies	2433914
Palani	Best Medical Agencies	245049
Mayiladuthurai	Chellas Enterprises	243272
Madurai	Dhanalakshmi & company	2621421
	Sri Pushpa Agencies	2630371
Nagapattinam	Eagammal Agencies	220983
Krishnagiri	Kuttappa Agencies	231211
Tirupur	Kumaran Pharma	2427193
Kanchipuram	Kanagavalli Pharma	220326
Karaikal	Maragatham Medicals	222079
Coimbatore	M.S.Agencies	2491554
	Selva Rathna Agencies	2397085
Thiruvallur	Medicare Agencies	264997
Arakonam	Murugan Pharma	224225
Tiruvannamalai	Mohana Agencies	227689

Tiruvarur	Maharaja Traders	222894
Pollachi	Pharmaceutical Services	220435
Pondycherry	Pharm House	2212001
Cuddalore	Arcot Agencies	230592
Tindivanam	P.R.R.Pharma	224313
Karur	Showaa Agencies	236573
Thanjavur	Sidharth Pharma	224024
Vandavasi	Srinivasa Medicals	225135
Chengalpattu	State Pharma Distributors	222159
Kumbakonam	Sri Bargavi Agencies	2426426
Ranipet	Sri Rajeswari Pharma	222788
Villupuram	Saraswathi Agencies	224224
Tirupattur	Srinivasa Pharma	227498
Tirunelveli	SPM.Medical mart	2333801
Erode	Shri Ramana Medical Agencies	2253421
	ESS Jay Agencies	2268855
Chidambaram	Salamia Distributors	220871
Arni	Sri Guna & Company	226470
Nagercoil	Saravana Pharmaceutical	232341
Trichy	Uthra Marketing	2760542
	V.R.Agencies	2740933
Salem	Vinayaga Agencies	2266098
	Shri Ramana Medical Agencies	2336365

காதைத் திறந்த குழந்தைகள்!

தாராபுரத்தைச் சேர்ந்த குழந்தை சிந்துஜாவுக்குக் காது கேட்கிறதா? என்று பெற்றோருக்குச் சந்தேகம். காரணம் சிந்துஜாவின் தந்தைக்குப் பிறவியிலேயே காது கேட்கவில்லை. வாய் பேசவும் வராது.

வாழ்க்கையில் தாம் சந்திக்கும் சிக்கல்களைத் தமது குழந்தை ஒரு போதும் சந்திக்கக் கூடாது என நினைத்த தந்தை, சிந்துஜாவை நேரே கோவை விக்ரம் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். கேட்கும் சக்தி உள்ளதா என்ற சோதனை நடந்தது. சிந்துஜாவுக்கும் காது கேட்பதில்லை என்று ஆய்வில் தெரியவந்தது. இடிந்து போயினர் பெற்றோர்.

ஆனால் டாக்டர் பி.ஜி. விஸ்வநாதன், ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் "காக்ளியர்" சாதனத்தைப் பொருத்தினால், சிந்துஜாவால் பேச முடியும் என்று நம்பிக்கை வழங்கினார்.

நாட்டில் முதல் முறையாக, மருத்துவ முன்னேற்றத்தின் மைல் கல்லாக, ஒன்றரை வயது சிந்துஜாவுக்கு "காக்ளியர் இம்ப்ளான்ட்" அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர் பேச்சுப் பயிற்சி. விளைவு... இன்று வகுப்பில் முதல் மாணவி சிந்துஜா!

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என பல மொழிகளில் வெளுத்துக் கட்டுகிறாள்.

சிங்கப்பூர் சிறுவன் அஸ்வினுக்கும் இதே சிகிச்சை. தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கும் அவனை அமைதியாக இருக்க வைக்க வழி சொல்லித் தாருங்கள் என்று பெற்றோர் இப்போது ஈ-மெயிலில் கேட்கின்றனர்!

நவீன நிபுணத்துவம் வாய்ந்த சிகிச்சையுடன், நல்ல பேச்சுப் பயிற்சி வழங்கியதே, குழந்தைகளின் மறுவாழ்வுக்கு முக்கியக் காரணம் என்கிறார் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் முத்துலட்சுமி விஸ்வநாதன்.

இந்தியாவில் கே.டி.பி லேசர்

• டாக்டர் அருணாவிஸ்வநாதன்





• குழந்தைகளுடன் கலாம்...

என்னும் சாதனத்தை முதலில் பயன்படுத்திய விக்ரம் மருத்துவமனை, தற்போது ஓபி.எம்.ஐ சென்சரா – 7' என்ற நவீன உருப் பெருக்கியை (மைக்ராஸ்கோப்) முதலாவதாக நிறுவியுள்ளது.

இதன் பலன், வெளிநாடுகளில் இருந்து மட்டும் நோயாளிகள் இங்கு வருவதில்லை. காது, மூக்கு, தொண்டை மருத்துவர்களும் இங்கு வந்து தங்கிப் பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.


இச்சேவை நமது ஏவுகணை விஞ்ஞானி அப்துல் கலாமின் காதுகளை எட்டியது. நேராகக் கோவைக்கு வந்தார். 'பிறவியிலேயே காது கேளாதோருக்கும் காதொலி வழங்கும் "காக்ளியர்" கருவியை இந்தியாவிலேயே தயாரித்தால் என்ன?' என்று கேள்வியெழுப்பினார். "ஏழு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டிய இக்கருவியை இந்தியாவிலேயே வடிவமைக்கலாமே. ராக்கெட்டுக்களில் பயன்படுத்தப்படும் இலகு ரக உலோகங்களைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் இங்கேயே தயாரித்து, உலகுக்கே விநியோகிக்கலாமே" என்றார்.

தொடங்கியது புதிய ஆராய்ச்சி! குடியரசுத் தலைவர் ஆன பின்னரும் தமது கனவைக் கைவிடவில்லை கலாம். விக்ரம் மருத்துவமனை துவக்கிய இன்டக்ரல் இயர் இன்ஸ்டிட்யூட்டின் புரவலராக இருந்து, ஆய்வுகளைத் தொடர்ந்து வழி நடத்தி வருகிறார்.

புதிய கருவியின் வடிவமைப்பு குறித்து டாக்டர் அருணா விஸ்வநாதனிடம் கேட்டோம்.

"ஆய்வுகள் நன்றாக நடந்து வருகின்றன. முன்னேற்றம் குறித்து குடியரசுத் தலைவரே நேரம் வரும்போது அறிவிப்பார். நல்ல செய்தி நிச்சயம் காதில் விழும். இப்போது இதைப்பற்றி அதிகம் பேச வேண்டாமென்று நினைக்கிறேன்" என்றார்.

– திருநாவு



• ஆழியாறு அறிவுக் கோயில்...

குறுகிய காலத்தில் குண்டலினி!

அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, 'ஹலோ' சொல்வதில்லை. 'குட்மார்னிங்' சொல்லிக் கொள்வதில்லை. ''வாழ்க வளமுடன்'' என்று வாழ்த்தி அன்பைத் தெரிவிக்கிறார்கள். அந்த ஒரு வார்த்தை உலகில் அத்தனை பேரையும் ஈர்த்து வைத்துள்ளது. பயிற்சி பெற்ற பத்து லட்சம் மன வளக்கலைஞர்களின் உதடுகள் உச்சரிக்கும் மந்திரச் சொல், 'வாழ்க வளமுடன்!'

ரஷ்யா, சீனா தவிர உலகின் பல்வேறு நாடுகளில் ஆயிரத்து இருநூறு மனவளக் கலைமன்றங்கள் விரிந்து பரந்துள்ளன. அவற்றின் ஆணி வேர், பொள்ளாச்சி அருகிருக்கும் ஆழியாறில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோயில்.

இங்கு வர நேருகின்ற ஒவ்வொருவரும், மன அமைதி நாடி வருவதாகக் கூறுகின்றனர். அவர்களுக்கு முதலில் தனி மனித அமைதி, பின்னர் குடும்ப அமைதி ஆகியவற்றுக்கான பயிற்சிகள் தரப்படுகின்றன. இந்த இரண்டும் ஒருங்கே அமையப் பெற்றவுடன், அவர்களால் இந்த உலகம் மேன்மையுறும் என்பது மனவளக் கலை மன்றத்தின் கோட்பாடு. அடுத்த கட்டமாக, எளிய உடற் பயிற்சி முதல் குண்டலினி யோகப் பயிற்சி வரை கற்றுத் தரப்படுகின்றன.

இல்லறத்தில் இருந்து கொண்டே மன ஓர்மை, அறிவுக் கூர்மை அடைய குண்டலினி யோகப் பயிற்சி தரப்படுவது இம்மன்றத்தின் சிறப்பம்சம். ஏனெனில் குண்டலினி யோகத்துக்கு ஒருவர் வருவதற்கு, பல ஆண்டுகள் முறையான பயிற்சி வேண்டும் என்றிருந்தது ஒரு காலம். அதனை குறுகிய காலத்திற்குள் அடைந்து விட முடியுமென இங்கு பயிற்சி பெற்றோர் பலரும் நிரூபித்துள்ளனர்.

உடற்பயிற்சி, தியானப் பயிற்சி, காய கல்பப் பயிற்சி ஆகியன கற்றுத் தரப்படுகின்றன. அதன் பின்னர் அவர்கள் வருவது அகத்தாய்வுப் பயிற்சிக்கு. அதில் தேர்ச்சி பெற்றவுடன் ஆழியாறில் அறிவுத் திருக்கோயிலில் மூன்று நாள், பிரம்ம ஞானப் பயிற்சி. அதில் தேர்ந்தவுடன் மூன்று நாள் குண்டலினி யோக ஆசிரியப் பயிற்சி. ஒருவர் எட்டு மாதத்திற்குள் குண்டலினி யோக ஆசிரியராகி மனவளத் தூய்மை பரப்பலாம்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



• வேதாத்ரி மகரிஷி

டாக்டர் ஜெயசீலனால் இன்னும் நம்பமுடியவில்லை, தாம் காண்பது கனவா, நனவா என்று. ஆனால், விமானத்தில் கண்ணாடி ஜன்னலோரத்தில் தாம் அமர்ந்திருப்பது உண்மைதான் என்பதை நிகழ்காலம் விளக்கியது. அந்த விமானம் டெல்லிக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அவரது கோட் பாக்கெட்டிலிருந்த பயண டிக்கெட் உறுதி செய்தது. குடியரசு தினவிழாவில் தமக்குச் 'சிறந்த சமூக சேவகருக்கான குடியரசுத் தலைவர் விருது' வழங்கப்பட இருக்கிறது என்பதை மட்டும் அவர் உள்ளம் இன்னும் ஏனோ நம்ப மறுத்தது. குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து வந்திருந்த அழைப்புக் கடிதம் பளிச்சிட்டது. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, அதைத் தொட்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பிறவிப் பயனை அடைந்து விட்டது போன்ற ஓர் அதீத திருப்தி அவரை ஆட்கொண்டது. ஃபைலை மூடி, மீண்டும் ப்ரீஃப் கேஸினுள் தள்ளினார்.

ஒருகணம், இந்த விருதுக்குத் தாம் உகந்தவர்தானா என்று அவர் மனம் நூறாவது முறையாக வினவிய போது, அந்தத் தள்ளாத உருவம் அவர் மனக் கண் முன் தோன்றி மறைந்தது.

ராமகிருஷ்ணன், வெளிச்சத்தை ஒரு கையால் மறைத்தபடியே, எதிர் வந்த பேருந்தின் எண்ணைப் படிக்க முயன்று தோற்றார்.

"அமிஞ்சிக்கரை பஸ் வந்தா கொஞ்சம் சொல்லுங்க சார். பார்வை கம்மி.'' பக்கத்திலிருந்த வாலிபன் உதவி யுடன் பஸ் ஏறினார்.

"என்னப்பா, கண்டுக்காம இருக்கே! என்னைத் தெரியல்லே, உனக்கு?" பின் சீட்டில் இருந்தவர் உரக்கப் பேசியதும், ராமகிருஷ்ணன் புரியாமல் திரும்பினார். அவர் தம்மிடம் பேசவில்லை என்று தெரிந்ததும் மீண்டும் தலையைத் திருப்பிக் கொண்டார்.

"சரியாத் தெரியல்லியே.." பின் சீட்டிலிருந்து இரண்டாமவர் தலையைத் தடவி விட்டுக் கொண்டார்.

"சரியாப் போச்சு போ. நாலு வருஷத்துல சுத்தமா மறந்துட்டியேப்பா. இன்னா ராஜசேகர் நீ..? தண்டபாணிப்பா...!"

"ஓ! நம்ம ரெயில்வே தண்டபாணியா! என்னங்க, சுத்தமா மாறிட்டீங்க! கண்ணாடி கின்னாடியெல்லாம் போட்டுக்



இட்டு, சாரி, தப்பா நெனைக்காதீங்க."

"எனக்கு ஒரு நிமிஷம் நீ தானான்னு சந்தேகமா இருந்தது. அது சரி, ஸ்டேஷனரி பிஸினஸ் எல்லாம் எப்படி இருக்கு?"

"பிஸினஸ் ரொம்ப டல்லுங்க. ஒரே காம் பெடிஷன் ஆயிடுச்சு. உங்க ரெயில்வே காண்ட்ராக்ட் எல்லாம் எப்படி போயிட் டிருக்கு?"

"அது ஒண்ணும் சுகமில்லேப்பா. இப்ப தம்பியோட சேர்ந்து போர்ட் டிரஸ்ட் காண்ட்ராக்ட் எடுத்திருக்கேன். சூப்பரா போயிட்டிருக்கு."

"ஆளைப் பார்த்தாலே தெரியுதே! ஆமாம், கண்ணாடி பவர் கிளாஸா இல்லே ஃபேஷனா?"

"பவர் கிளாஸ்தான் ராஜசேகர். காட் ராக்ட் ஆபரேஷன் ஆச்சு.


விஸ்வம்

நாலு வருஷத்துக்கு மேல ஆயிடுச்சே. நாம அப்புறம் சந்திக்கவே இல்லேன்னு நெனைக் கறேன்."

"காட்ராக்ட் ஆபரேஷன்னா ஒவ்வொரு கண்ணுக்கும் நாலாயிரம், அஞ்சாயிரம்னு புடுங்கியிருப்பாங்களே?"

தமக்குச் சம்பந்தப்பட்ட பேச்சாக இருந்ததால், ராமகிருஷ்ணன் காதுகளைக் கூர்மையாக்கி, நிமிர்ந்து உட்கார்ந்தார். உண்மைதான். அவர் விசாரித்தவரை, தனி யார் மருத்துவமனைகளிலெல்லாம் ஒரு கண்ணுக்குக் காட்ராக்ட் அறுவை சிகிச்சை செய்யவே நான்கா யிரம் முதல் பத்

விழியிலே... ஒளியிலே...!



தாயிரம் வரை ஆகும் என்று தெரியவந்தது.

"நாலாயிரமும் இல்லே. அஞ்சாயிர மும் இல்லே. சொன்னா நம்ப மாட்டே ராஜ சேகர். ஒரு கண் ஆப ரேஷனுக்கு வெறும் ஆயிரம் ரூபாய்தான். இரண்டு கண்ணுக்கும் மருந்து செலவு, கண் ணாடி எல்லாம் சேர்த்து ஐந்நூறு ரூபாய். ஆக மொத்தம் இரண்டா யிரத்து ஐந்நூறுதான் ஆச்சு. சும்மா சொல் லக்கூடாது சூப்பர் டாக்டர்."

"யாருங்க அந்த டாக் டர், இந்தக் காலத்துலே? எனக் கும் கண்ணுல பொறை தட்டி யிருக்கு. பணத்துக்குப் பயந்துகிட்டு போகாம இருக்கேன். கவர்மெண்ட் ஆஸ்

பிட்டல்லே ஏகப்பட்ட சர்டிபிகேட் கேக்கறானுங்க, கொடுத்தாலும் ஒரு வருஷத்துக்கு மேலே ஆகுமாம்."

"உடனே போய்ப் பாரு ராஜசேகர்; கண்ணை வீணடிச்சுக்காதே. தங்கமான மனுஷன். பணம் கறக்க மாட்டார். டாக்டர் ஜெயசிலன்னு பேரு. பெரிய கண் டாக்டர். திருவல்லிக்கேணி ஹைரோட்லதான் ஆஸ்பத்திரி."

ராமகிருஷ்ணனின் காதுகளில் அத்தனையும் தேனிசையாக விழுந்தது. திருவல்லிக்கேணி ஹைரோடு... டாக்டர் ஜெயசிலன்...

டாக்டர் ஜெயசிலன் கண் மருத்துவமனையில், எதிர்பார்த்தது போலவே கூட்டம் நிரம்பி வழிந்தது. ராமகிருஷ்ணனது முறை வந்ததும், டாக்டர் கைகளைப் பிடித்துக் கொண்டு சின்னக் குழந்தை போலத் தேம்பினார்.

"டாக்டர் சார், ஒண்ணு சொல்றேன். தப்பா நினைக்காதீங்க, சிவ பெருமானுக்கே கண் கொடுத்த கண்ணப்ப நாயனார் புராணம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். நீங்க அந்த கண்ணப்பனுக்கும் மேலான ஒரு ஸ்தானத்துல இருக்கீங்க." பதிலுக்கு டாக்டரிடமிருந்து ஒரு புன்சிரிப்பு மட்டும் வெளி வந்தது. அவர் சோதனையில் கவனமாயிருந்தார். ஆனால், அவரது அமைதி, ராமகிருஷ்ணனின் உற்சாகத்தைக் குறைக்கவில்லை. "அவனவன் ஒரு கண் ஆபரேஷனுக்கு நாலாயிரம், ஆறாயிரம்னு வாங்கும்போது நீங்க மட்டும் ஆயிரம் ரூபாயில காட்ராக்ட் ஆபரேஷன் பண்ணறது ஒரு மாபெரும் சேவை. நீங்க மனிதருள் மாணிக்கம்."

டாக்டர் ஜெயசிலனின் முகம் வெளிறியது சொட்டு மருந்தால் கண் கலங்கியிருந்த ராமகிருஷ்ணனுக்குத் தெரியவில்லை. டாக்டர் ஜெயசிலன் தற்போது ஒரு கண் அறுவைச் சிகிச்சைக்கு வாங்குவது ஐந்தாயிரம் ரூபாய். ஆயிரம் எல்லாம் நான்கைந்து வருடங்களுக்கு முற்பட்ட கதை. யாரோ இந்தப் பெரியவரிடம் தவறான தகவல் கூறி அனுப்பி விட்டனர் என்பது டாக்டருக்குப் புரிந்தது. ஏழை எளியவர் யாராவது இது போல் தம்மிடம் அறுவை சிகிச்சைக்கு வந்தால், வழக்கமாக, அரசாங்க கண்மருத்துவமனையில் பணிபுரியும் தம் நண்பரான கண் டாக்டருக்கு ஒரு கடிதம் கொடுத்து, அங்கு இலவச கண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள உதவுவது டாக்டர் ஜெயசிலனின் வழக்கம். அதுபோல் கடிதம் எழுதி ராமகிருஷ்ணனிடம் கொடுத்தனுப்ப, தமது இருக்கையில் வந்து அமர்ந்து எழுத ஆரம்பித்தார். என்ன காரணம் சொல்லி அவரை அங்கிருந்து அனுப்புவது என்று யோசித்தபடியே, கடிதம் எழுதத் தேவையான விவரங்களைக் கேட்டார், டாக்டர்.

"பெரியவரே, உங்க பேரு?"

"ராமகிருஷ்ணன், வயசு எண்பத்தேழு."

"ஐயா எந்த ஊரு?"

"மெட்ராஸ்தான், அமிஞ்சிக்கரை."

"என்ன தொழில் பண்ணறீங்க?"

"ஐ அம் எ ரிடயர்ட் ஸ்கூல் டீச்சர். பென்ஷனர். மாசம் ஆயிரத்தைந்நூறு பென்ஷன். ஒண்டிக்கட்டை."

"எந்த ஸ்கூல்ல டீச்சரா இருந்தீங்க?"

"கவர்மெண்ட் ஹையர் செகண்டரி ஸ்கூல், செங்கல்பட்டு."

பதில் காதில் விழுந்ததும், டாக்டர் ஜெயசிலன் நிமிர்ந்து உட்கார்ந்து, அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்துடன், ராமகிருஷ்ணனின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

"நம்ம ராமகிருஷ்ண வாத்தியாரா இது?"

ஜெயசிலனால் நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு, சோதனை செய்வதுபோல் அருகில் சென்று, கண்களை மூடிக் கொண்டிருந்த அவரை, கண்களை அகல விரித்து, சில நிமிடம் உற்று நோக்கினார், ஜெயசிலன். ராமகிருஷ்ண வாத்தியாரேதான். சந்தேகமே இல்லை. ஆனால் ஏன் இப்படி? கூனிக் குறுகி, கண் பார்வை மங்கி, முண்டும் முடிச்சுமாய், முற்றிய முருங்கைக்காய் போல்... இருபது வருடங்களில் இத்தனை மாற்றமா? சிபாரிசுக் கடிதத்தைக் கசக்கி, குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தார். கூடாது... இவர் குருடாகக் கூடாது. குருடாக, விடக் கூடாது. கண் டாக்டரான தமக்கு அதைத் தடுப்பது தலையாய கடமை... ஒரு முடிவுடன் ராமகிருஷ்ணன் வாத்தியாரை அணுகினார், ஜெயசிலன்.

"நடய்யா, போலீஸ் ஸ்டேஷனுக்கு. வீட்டுக்கு வீடு, ப்ளாட்டுக்கு ப்ளாட் சாராயம் காய்ச்ச ஆரம்பிச்சீட்டீங்களா?"

"சார்! சத்தியமா சொல்றேன், மழை நீர் சேகரிப்புத் தொட்டி, பைப் சார்."

- ஆர்.எஸ். சந்திரசேகர்


"சார், நீங்க என்னிக்கு கண் ஆபரேஷன் பண்ணிக்கலாம்னு முடிவு செஞ்சிருக்கீங்க?" ஜெயசிலனின் கேள்வி முடிவதற்குள் ராமகிருஷ்ண வாத்தியாரிடமிருந்து பட்டென்று வந்தது பதில். "நான் இன்னிக்குகூட ரெடிதான் சார். ஆயிரத்து இருநூறு ரூபாய் ரெடியா பையிலே போட்டுக் கொண்டு வந்துட்டேன்" கையில் சுருட்டி வைத்திருந்த மஞ்சள் துணிப் பையை, அசைத்துக் காண்பித்தார்.

"நீங்க ரூபாயெல்லாம் கொடுக்க வேண்டாம் சார். நான்தான் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கேன். கண் திறக்க முடிஞ்சவுடனே, என்னை உத்துப் பாருங்க, தெரியும்."

ராமகிருஷ்ணன் கஷ்டப்பட்டு கண்களைத் திறந்தார். கண்கள் மீண்டும் எரிந்து, கண்ணீர் சுரந்தது. ஜெயசிலனை உற்றுப் பார்த்து, உதட்டைப் பிதுக்கினார்.

"எனக்குத் தெரியல்லையே சார்."

"என்னை சார்னு கூப்பிடாதீங்க சார்.



என்னவோ போல இருக்கு. ஜெயசிலன்னு கூப்பிடுங்க போதும். இல்லேன்னா 'டேய்'னு கூப்பிடுங்க."

"ஜெயசிலனா...? தெரியல்லியேப்பா..."

"சுமார் இருபது வருஷத்துக்கு முன்னாடி தீபாவளி முடிஞ்ச கையோட கிளாஸ்ல பட்டாஸ் வெடிச்சான்னு ஒரு பையனை கிளாஸுக்கு வெளியே போகச் சொல்லி, அப்பாவைக் கூட்டிக்கிட்டு வந்தால்தான் உள்ளே சேர்ப்பேன்னு அடிச்சு விரட்டினீங்களே சார்... ஞாபகம் வரல்லே?"

"ஆமாம்... நீங்க சொன்னவுடனே ஏதோ கொஞ்சம் ஞாபகம் வருது. பட்டாசு வெடிச்சு, விரட்டினதெல்லாம் ஞாபகம் இருக்கு. ஆனா யாருன்னு மட்டும் சரியா..!" ராமகிருஷ்ணன் இழுத்தார்.

"நான்தான் சார் அது... ஜெயசிலன்."

"ரொம்ப சந்தோஷம் ஜெயசிலன்..!"

"இப்ப சொல்லுங்க சார். நாளைக்கே ஆபரேஷன் வெச்சுக்கலாமா...?"

"ஓ! பேஷா...!"

அன்று அந்த 'ஒண்டிக்கட்டை'யை அதன் வீடு திரும்ப ஜெயசிலன் விடவில்லை. தம் வீட்டிலேயே தங்க வைத்தார். உபசாரமெல்லாம் பலமாக இருந்தது. மறுநாள், ராமகிருஷ்ண வாத்தியாரின் வலக்கண் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. பத்தாம் நாள், ஜெயசிலனின் காரில் டிரைவர் ராமகிருஷ்ண வாத்தியாரை அவரது வீட்டில் கொண்டு சென்று விட்டு வந்தார்.

பத்து நாளாகப் பூட்டப்பட்டிருந்த ராம கிருஷ்ண வாத்தியாரின் வீடு திடீரென்று திறக்கப்பட்டு, புது மூக்குக் கண்ணாடியுடன் அவர் தோற்றமளித்தது, அக்கம் பக்கத்தில் இருப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வாத்தியார், இளமை திரும்பியது போல் காணப்பட்டார். வீட்டை ஒட்டடையடித்து, ஒழுங்கு செய்தார். புத்தகங்களைத் தூசு தட்டி, அடுக்கி வைத்தார்.

பார்வை மங்கிய பூக்காரக் கிழவி பூவாத்தாவிடம் வாத்தியார் விவரம் சொன்னார். வெறும் ஆயிரம் ரூபாயில் காட்ராக்ட் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியும் என்றும், பெயர் டாக்டர் ஜெயசிலன், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் மருத்துவமனை என்றும், ராமகிருஷ்ண வாத்தியார் அனுப்பியதாகச் சொன்னால் இன்னும் 'ரேட்' குறைத்துக் கொள்வார் என்றும் கூறி அனுப்பினார். பால்கார பன்னீர்செல்வத்திடம் விவரம் சொல்லி அனுப்பினார். அடுத்தடுத்து ராமகிருஷ்ண வாத்தியாரின் பெயர் சொல்லி பலர் விரைந்தனர். கண் அறுவை சிகிச்சைக்கு 'கியூ'வை சமாளிக்க முடியாத டாக்டர் ஜெயசிலன், யோசித்து மருத்துவமனையை விஸ்தரிக்கத் திட்டமிட்டார். வசதியுள்ளவரிடம் அறுவை சிகிச்சைக்கு வழக்கம் போல் ஐந்தாயிரம் ரூபாயும், வாத்தியார் அனுப்பும் ஏழைகளிடம் ஆயிரத்துக்கு குறைவாகவும் வாங்கி, தினம் பத்து முதல் இருபது அறுவை சிகிச்சைகளை நடத்தி வந்தார்.

ஜெயசிலன் நிமிர்ந்து உட்கார்ந்தார். தாம் ஜனாதிபதியின் கையினால் விருது வாங்கக் காரணம் அந்த ராம

கிருஷ்ண வாத்தியார்தான். வாத்தியாரை அவர் சந்தித்திராவிட்டால் இன்னும் தான் மற்ற மருத்துவர்கள் போல் ஆயிரத்தில் ஒருவராக இருந்திருக்க வேண்டியதுதான்.

நாளை மாலை டெல்லியிலிருந்து திரும்பி சென்னை விமான நிலையத்தில் இறங்கியதும் முதல்வேலையாக, நேராகக் காரை வாத்தியாரின் வீட்டுக்குப் போகச் சொல்லி, அவர் காலில் விழுந்து ஆசி பெற வேண்டும். அவரால்தானே இத்தனை பெருமை?

கார், அமிஞ்சிக்கரையின் பள்ளம் மேடுகளில் விழுந்து, எழுந்து, ஒரு வழியாக ராமகிருஷ்ண வாத்தியாரின் வீட்டை அடைந்தது. காரில் இருந்து இறங்கி, கதவைத் தட்டினார். கதவு திறக்கப்பட்டதும் உள்ளே சென்று அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து அவரை திக்குமுக்காடச் செய்யத் திட்டமிட்டிருந்தார்.

கதவு திறக்கப்பட்டது. சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி தன் இடுப்பிலிருந்த குழந்தைக்கு சாதம் ஊட்டியபடியே, யார் வேண்டும் என்பது போல் புருவத்தை உயர்த்தினாள். தாம் ராமகிருஷ்ண வாத்தியாரைப் பார்க்க வேண்டுமென்று கூறினார், ஜெயசீலன். ராமகிருஷ்ண வாத்தியார் காலமாகி விட்டதட்ட பத்து மாதங்களுக்கு மேலாகி விட்டதென்றும், தமக்குத் தெரிந்தவரை அவருக்கு உறவினர் யாரும் அந்த ஊரில் இல்லை என்றும் கூறக் கேட்ட ஜெயசீலன், நிலை குலைந்து போய், கதவைப் பிடித்துக்கொண்டார்.

‘**ரா**மகிருஷ்ண வாத்தியார் நினைவு கண் மருத்துவமனை’யில் இப்போதெல்லாம் ஒரு மாறுபாடு. அன்று ஆயிரம் ரூபாயாக இருந்த கண் அறுவை சிகிச்சைக் கட்டணம் நூறு ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஓர் அதிசயம் என்னவென்றால், தம்மை வாத்தியார் அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு, இன்னும் பல பாமரர்கள் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மனதுக்குள் சிரித்தபடியே டாக்டர் ஜெயசீலனும் அவர்களது கண்ணைச் சோதிக்கத் தொடங்கி விடுகிறார்!

சிரித்து வாழவேண்டும் - 8



• படம்: யோகா

"வேலை கிடைச்சாச்சு!"

நாகேஷ்

சுமார் முன்னூறு தொழிலாளர்களுடன், வேலைப் பளு தெரியாமல் இருக்க கோரஸாகப் பாடிக் கொண்டு வேலை பார்த்தாலும், அது ரொம்ப ரிஸ்க்கான வேலைதான். கவனமாக இல்லையெனில் ஆபத்து. காய்ச்சிய ஈயத்தை ஊற்றும் போது, கவனப்பிசகால், உடம்பில் பட்டுவிட்டதென்றால், தீப்புண் ஏற்பட்டு விடும்.

ஒரு நாள், பதினாறு அடி உயரமுள்ள ஏணி மீது ஏறி, ஒரு குழாயில் ஈயக் கலவையை ஊற்ற வேண்டியிருந்தது. ஒரு கையில் கலவை நிரம்பிய பக்கெட், இன்னொரு கையில் ஸ்குரு டிரைவர் போன்ற உபகரணங்களுடன் மேலே ஏறினேன். காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டிய குழாயின் அடிப்பகுதியில் பெரிய நட்டுகளைத் திருகி, மூடியிருக்க வேண்டும். அப்படிச் செய்ய மறந்து விட்டேன். விளைவு, சரசரவென்று இறங்கிய காய்ச்சிய ஈயம் வழிந்து, என் காலில் பட்டுவிட்டது. எரிச்சல் தாங்க முடியாமல், அலறியபடி காலை உதற, நான் ஏறி நின்றுகொண்டிருந்த ஏணி, ஆட்டம் கண்டு, அப்படியே சாய்ந்தது. நான் தூக்கி எறியப் பட்டேன். போய்விழுந்த இடம்? வேகமாய் ஓடிக்கொண்டிருந்த ஓர் இயந்திரத்துக்கு அரை அடி அப்பால், கொஞ்சம் தள்ளி. இயந்திரத்தின் மீது விழுந்திருந்தால், நாகேஸ்வரன் என்ற முகமில்லாத இளைஞனின் கடைசி அத்தியாயம் அப்போதே எழுதப்பட்டிருக்கும். நாகேஷ் என்ற நடிகன் உருவாகியிருக்கவே மாட்டான்!

அடிபட்டு விழுந்த என்னை உடனே தூக்கிக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். பதினாறு நாட்கள் சிகிச்சை தரப்பட்டது. அந்தத் தொழிற்சாலையில் வேலை பார்த்த எனக்கு, கூலியாகக் கொடுத்த தொகையை விட ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக செலவழித்தது அதிகம். என்னை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்த பிறகு, முதலாளி என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

வழக்கமாய், ஒரு வேலையை வேண்டாம் என்று உதறித் தள்ளுவது என் முடிவாக இருக்கும். இந்தத் தடவை அந்த வாய்ப்பை முதலாளி எடுத்துக் கொண்டு விட்டார்.

"நாகேஸ்வரன்! நீங்க படிச்சிருக்கீங்க! உங்களுக்கு ஏன் இந்த தினக் கூலி வேலை? வேறு நல்ல வேலை நிச்சயமா கிடைக்கும். வாழ்த்துகள்!" என்று அழகாகப் பேசி எனக்குச் சீட்டைக் கிழித்தார்.

மறுபடியும் வேலை தேடும் படலம். ஒரே ஆறுதல், கையில் கொஞ்சம் பணம் இருந்ததுதான். நான் வாழ்க்கையில் சின்ன வயசிலேயே இத்தனைக் கஷ்டங்களை அனுபவித்ததைப் பார்த்து, ஆண்டவனுக்கே என் மீது கொஞ்சம் இரக்கம் வந்து விட்டது போலும்! ஆமாம்! அந்தச் சமயம் பார்த்து ரயில்வே சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கான அறிவிப்பு வெளியானது. நானும் விண்ணப்பித்தேன்.

தினக்கூலி வேலையும் போய்விட,

அடுத்து சில நாட்கள், ஹைதராபாத்தில் கஷ்ட ஜீவனம்தான். ஹைதராபாத் உறவினர் வீட்டிலும் என்னை ஒரு பாரமாக நினைக்க ஆரம்பித்து விட்டது போல எனக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. 'பெரிசாய் படிப்பு இல்லை; நிரந்தரமாய் வேலையும் இல்லை; எங்கே வேலை வாங்கிக் கொடுத்தாலும், அங்கே நிலைப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தினமும் வாழை இலை போட்டு உபசரிப்பார்களா என்ன? எனவே நானும் அங்கே நிரந்தரமாகத் தங்கவில்லை.

ஹைதராபாத்தில் வேலை பார்த்த நாட்களில், தினமும் எப்படியாவது ஒரு வேளை சாப்பிட்டு விடுவேன். மற்ற சமயங்களில் மூன்று மிளகாய் பஜ்ஜி, இரண்டு டீ, சிகரெட் இவைதான் உணவு. சிகரெட் கூட, ஒன்றை எடுத்தால், அதை முழுசாய்ப் பிடித்து முடிக்காமல், அணைத்து வைத்து, மறுபடி புகைக்க வேண்டிய சூழ்நிலை. புகை பிடிக்கும் கெட்டப் பழக்கத்தை என்னால் இன்றைக்கும் விட முடியாமல் போய்விட்டது.

நான் ரயில்வே சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தேனில்லையா? பரீட்சை எழுத அழைப்பு வந்தது. திருவனந்தபுரம்தான் பரீட்சை மையம். ரயிலில் திருவனந்தபுரம் போய் பரீட்சை எழுதி விட்டு மறுபடி ஹைதராபாத் திரும்பினேன்.

பரீட்சையில் நிறையக் கேள்விகள் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட கேள்வியைப் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும். ஒரு விரிவான கட்டுரை எழுதச் சொல்லிக் கேட்டிருந்தார்கள். 'ரயில்வேயில் பணி புரிய வாய்ப்புக் கிடைக்குமானால்...' இதுதான் கட்டுரைக்கான தலைப்பு.

நான் ஸ்டேஷன் மாஸ்டர் மகனாயிற்றே! ஸ்டேஷனின் ஒவ்வொரு பகுதியும், எனக்கு அத்துபடி, ரயிலைப் பற்றி மட்டும் என்னவாம்? அவ்வப்போது ஏராளமான கேள்வி கேட்கிற பழக்கம் கொண்ட நான், என் அப்பாவிடம் பல்வேறு சமயங்களிலும் ரயில்வேயைப் பற்றி நிறையக் கேள்விகள் கேட்டிருக்கிறேன்.

அந்த அறிவின் அடிப்படையிலும், சிறு வயது முதலே ரயிலில் பயணம் செய்த அனுபவத்தின் அடிப்படையிலும்... அடடா! சுமார் நாற்பது பக்கத்துக்கு, கிடுகிடுவென்று விரிவான ஒரு கட்டுரை எழுதினேன். விஷயமும் தெரியும்; அதைப் பளிச்சென்று எடுத்துச் சொல்லிவிடும் மொழித் திறமையும் எனக்கு இருந்தது. விளாசிவிட்டேன்.

பரீட்சை எழுதி சில வாரங்கள்தான் ஆகியிருக்கும். எனக்கு ஒரு தபால் வந்தது. "அட! நமக்குக் கூட யாரோ லெட்டர் போட்டிருக்கிறார்களே!" என்று ஆர்வம் பொங்கப் படித்தேன். என் மனசு, ஆகாயத்துக்கும், பூமிக்குமாய்த் துள்ளிக்குதித்தது. ஆம்! அந்தக் கடிதம், ரயில்வே வேலைக்கு நான் நியமிக்கப்பட்டதாகச் சொல்லும் கடிதம்.

ஹைதராபாத்துக்கு ஒரு சலாம் அடித்து விட்டு, விடை பெற்றுக் கொண்டு சென்னைக்கு ரயில் ஏறினேன்.

சென்னையில், சென்ட்ரல் ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பெரிய, பழங் கால கட்டடத்தில் இயங்கி வந்தது தென்னக ரயில்வே அலுவலகம். போகும் போது, வரும்போது பார்த்திருக்கிறேன். எனக்கு அந்த ஆபீசில் ஒரு வேலை கிடைத்திருக்கிறது என்று நினைத்துப் பார்க்கிற போதே, மேகங்களுக்கு மத்தியில் மிதப்பது போல மனம் சந்தோஷப்பட்டது.

ரயில்வேயில் வேலை நியமனக் கடிதத்துடன் சம்பந்தப்பட்ட ரயில்வே அதிகாரியைச் சந்தித்தேன். வேலைக்குச் சேருமுன், மருத்துவப் பரிசோதனை செய்து, உடல் நலம் குறித்து ஒரு ரிப்போர்ட் தர வேண்டுமென்பது விதி. அதன்படி நான் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளச் சென்றேன்.

அங்கே ஒரு சின்னப் பிரச்னை.

(தொடர்ந்து சிரிப்பேன்)

* * * * * * * * * * * * * * *

"ஃபோன் ஏன் இப்படி சூடா இருக்குமாம்?"

"சீரியல் கதையைத் தோழிக்குச் சொன்னப்ப கண் கலங்கிட்டேன்!"

- அம்பை தேவா



ARTHRITIS ✻ மூட்டுவலி / CALCANEAL SPUR ✻ குதிகால்வலி

▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ▼ குதிகால் இணைப்புகளில் வலி, முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.



அன்புள்ள டைரக்டர் திரு S.புருஷோத்தமன் அவர்களுக்கு,

நான் குதிகாலில் வலி மிகுதியால் (Calcaneal spur) நீண்ட காலமாக மிகவும் அவதிப்பட்டு வந்தேன். தங்கள் Adyar Nature Cure Center மருத்துவமனைப் பற்றி கேள்விப்பட்டு தங்களிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். இன்று சிகிச்சை முடிந்து நல்ல நிவாரணத்துடன் முழு திருப்தியுடனும் செல்கின்றேன்.

டைரக்டர், டாக்டர்கள், மேசியர்கள், பிசியோதெரபிஸ்டுகள், நர்சுகள், சமையல் டிபார்ட்மெண்டில் உள்ளவர்கள் முன் ஆபிஸில் உள்ளவர்கள் மற்றும் அடையார் இயற்கை மருத்துவமனையில் பல டிபார்ட்மெண்டுகளில் பணிபுரியும் எல்லோருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

R. Lalitha, 39/2 Naidu Street, 3rd Lane, Kottur, Chennai-600 085

PSORIASIS, PARKINSONISM, ALZHEIMERS DISEASE

ஆகியவைகளுக்கு பக்கவிளைவுகள் இல்லாத சிறந்த மூலிகை மருந்து தரப்படும்.

CANCER - புற்றுநோய்

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்க்கு இயற்கையான முறையில், சிறப்பான, பக்க விளைவுகளோ, வலியோ, அசௌகரியமோ இல்லாத வகையில் சிகிச்சை அளிக்கின்றோம். புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடிய இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படும்.

ரேடியேஷன், கீமோதெரபி எடுத்துக் கொள்ளும் புற்று நோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு அதன் பக்க விளைவுகளை குறைக்கும்படியான (உதாரணமாக : முடி உதிர்தல், இரத்த சோகை, வாய்ப் புண் போன்றவை) இயற்கை முறை சிகிச்சையும், கேன்சர் வியாதியஸ்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான உணவு வகைகளும் வழங்கப்படும்.

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea *(மூச்சுத் திணறல்)* **2. Respiratory difficulties** *(மேல்மூச்சு வாங்குதல்)*
3. Dry cough *(வறட்டு இருமல்)* **4. Cough with sputum** *(சளியுடன் கூடிய இருமல்)*
5. Running Nose *(மூக்கில் நீர் வழிதல்)* **6. Nasal Block** *(மூக்கடைப்பு)*

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்

ADYAR NATURE CURE CENTER™ Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினெஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டீவி, போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

சுகமாக முடியும் கணக்குகள்

கார்த்திக் வகுப்பறையில் இருந்தான். மனதுதான் எங்கெங்கோ அலை பாய்ந்து கொண்டிருந்தது. இன்னும் உதவிப் பேராசிரியர் வகுப்பறைக்கு வரவில்லை. பத்மனாபன் பீரியட் என்றாலே இந்தச் சிக்கல்தான்! எப்பொழுது வருவார், வருவாரா மாட்டாரா என்று பாடம் துவங்கும் முன்பே கேள்விகள் பிறந்து விடும்.

எம்.ஏ படித்த அவருக்குக் கல்லூரியில் வேலை செய்ய விருப்பமில்லை. கம்பெனிகளில் வேலை கிடைக்கவில்லை. அவருடைய விரக்தி, வெறுப்பு, கோபம் எல்லாவற்றிற்குமான வடிகால்கள் மாணவர்கள்தான்! முதல் யூனிட்டைத் துவக்கியதுதான் தெரியும். அடுத்த வாரம் இரண்டு வகுப்புகளில் சில சர்க்யூட்களைப் போட்டுக் காட்டிவிட்டு, அடுத்த வகுப்பில் இரண்டாம் யூனிட் என்றார்.

முதல் யூனிட்டை அவர் நடத்தி விட்டாரா, இல்லையா என்பதைப் பற்றிய பட்டிமன்றம் கல்லூரி விடுதியிலும் கான்டீனிலும் துவங்கிவிட்டது.

சிலபஸ் புத்தகத்தையும் நூலகப் புத்தகங்களையும் படித்து, மாணவர்களே தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டியதுதான்!

நிதானமாக பத்மனாபன் உள்ளே வந்தார்.

அட்டெண்டன்ஸ் எடுத்தார். பிறகு கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன.

மனசுக்குள் 'இங்கி பிங்கி பாங்கி' போட்டுப் பார்த்து விட்டு, பாடம் நடத்தத் துவங்கினார்.

"நவ் வி வில் பாஸ் ஆன் டு த செகண்ட் யூனிட்..."

'ஆமாம், முதல் யூனிட்டை முடிச்சிக்



எஸ்.குமார்

அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை

ஒழிச்சிட்டோமில்லே, அதனால இப்போ ரெண்டாவது யூனிட்டுக்குப் போறோம்..'

பத்மனாபன் மீதும், கல்லூரி மீதும், அப்பாவிடம் சண்டை போட்டு அந்தக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்த தன் மீதும் அவனுக்குக் கோபம் வந்தது.

அந்தக் கோபமும் வெறுப்பும் மனத்தை ஆக்கிரமித்தபோது, பின் மண்டையில் வலி துவங்கி, தலை முழுவதும் வலித்தது.

பத்மனாபனின் பத்து நிமிடப் பாடத்தைக் கூட கவனிக்க முடியாமல் போயிற்று.

வகுப்பு முடிந்துவிட்டது.

கான்டீனுக்கு நடந்த மாணவர்கள் கூட்டத்தில் அவனும் இருந்தான்.



உடனடியாக ஒரு காபி சாப்பிட்டு, தற்காலிகமாகவாவது வலியிலிருந்து விடுபட முடிகிறதா என்று பார்க்க வேண்டும். உடன் வந்த அரவிந்தனுக்கும் சேர்த்து காபி ஆர்டர் செய்தான். சூட்டையும் பொருட்படுத்தாமல் காபியை வேகமாக உறிஞ்சினான். தலைவலி ஓய்கிற மாதிரி இல்லை.

எப்பொழுதாவது ஒருமுறை வருவதாக இருந்தால் பரவாயில்லை. இது உடன் பிறந்தே கொல்லும் வியாதி.

தீபக்கும் மகேஷும் புகையும் சிகரெட்டுடன் எதிரே வந்தார்கள்.

கார்த்திக் பக்கவாட்டில் திரும்பிக் கொண்டான்.

"என்ன மாப்பிள, எவ்வளவு நாளைக்குத்தான் செகண்டரி ஸ்மோக்கராவே இருப்பே! பிடிடா."

"சாரி..."

அவர்களைத் தவிர்த்துவிட்டு, அரவிந்தனுடன் நடந்தான். மீண்டும் வகுப்பறைக்கு வந்ததும் கம்ப்யூட்டர் மேடம் வந்தார். அந்த வகுப்பு முழுவதும் தலைவலி பாடாய்ப் படுத்தியது.

பத்தாம் வகுப்பு படிக்கும்போதே அப்பா சொன்னார்.

"உன் உடம்புக்கு நீ ஸ்ட்ரெயின் பண்ணக் கூடாது. முடிஞ்சவரை படி."

அவனுக்கு அதில் ஒப்புதல் இல்லை.

எதிர்நீச்சல் போட்டு கல்லூரிக்கு வந்தான்.

விடுதியில் தங்கிப் படிப்பதும்

ஊருக்குப் போகிறபோது ஸ்பெஷலிஸ்ட் டாக்டரைத் தேடிப் போய், அறிவுரை பெறுவதுமாக இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன.

டிஸ்டிங்ஷன் மதிப்பெண்கள் பெற வேண்டுமென்ற அவன் கனவு நனவாகவில்லை.

எல்லோரும் தங்களுடைய ஓட்டப் பந்தய ட்ராக்கில் ஓடிக் கொண்டிருக்கும் பொழுது அவன் மட்டும் 'ஹர்டில்' ட்ராக்கில் ஓட வேண்டியிருக்கிறதே!

கடவுளை இறைஞ்சாத நாளில்லை. டாக்டரிடம் கேட்காத சந்தேகமில்லை. படிப்பில் காட்டாத அக்கறை இல்லை...

விடிவு எப்போது?

கார்த்திக் தன்னுடைய அசைன்மெண்ட்டைச் செய்து கொண்டிருக்க-

வெங்கடேஷ் தன் வாக்மேனுக்காக முகத்தில் சந்தோஷம் காட்டிக் கொண்டிருந்தான்.

பட்டுராஜன் உள்ளே வந்தான்.

"மாப்பிளே, சாப்பிடப் போகலியா?"

"இன்னும் பத்து நிமிடத்தில் கிளம்பலாம்."

"ஓ.கே... அதுக்கு முன்னாலே ஒரு பெக்."

பட்டு அவன் பாக்கெட்டிலிருந்து பிராந்தி பாட்டிலை எடுத்து, வெளியே வைத்தான்.

பாட்டிலைப் பார்த்ததும் வெங்கடேஷ் வாக்மேனை நீக்கி, சூரியனிடமிருந்து விலகினான்.

எதிரே வந்து உட்கார்ந்தான்.

"நீயும் வா, கார்த்தி" என்றான், பட்டு.

"அவனை ஏன் கூப்பிடறே! அவன் சிகரெட், மதுவெல்லாம் தொட மாட்டேன்னு அவங்கம்மாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கான்" என்றான் வெங்கடேஷ்.

"லண்டன் போறதுக்கு முன்னாடி காந்தி சத்தியம் பண்ண மாதிரியா?"

"அவனை ஏன் வம்பு பண்றே?"

"இல்லை, இன்னிக்கு அவனும் ஒரு பெக் அடிக்கிறான்" என்ற குரல் வாசலிலிருந்து வந்தது.

அங்கே தீபக்கும் மகேஷும்.

அவர்களும் உட்கார, அவர்கள் தங்களுக்கு ஊற்றிக் கொண்டு அவனைப் பார்த்தார்கள்.

"வா, மாப்பிள."

அவன் அசைன்மெண்ட் பேப்பர்களை அடுக்கி வைத்தான்.

"சாரி" என்று அவர்களைக் கடந்தான்.

"இதோ பார்றா எல்லாமும் தான் வீட்டில் அம்மா, அப்பாகிட்ட வாக்குறுதி கொடுத்துட்டு வர்றோம். அதையெல்லாம் காப்பாத்திக்கிட்டு இருக்க முடியாது" என்றான், மகேஷ்.

"சாரி, ஃப்ரெண்ட்ஸ். இது வாக்குறுதி சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமில்லே. என் ஹெல்த் சம்பந்தப்பட்டதும்கூட. வெரி வெரி சாரி! என்சாய் யுவர்செல்ஃப்!"

அவன் மெஸ்ஸை நோக்கி நடந்தான்.

இரவு நேரம். வெங்கடேஷ் வழக்கம் போல சூரியன் பண்பலையில் இருந்தான். ஆனால் வாக்மேனுக்குப் பதிலாக வால்யூம் வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். பட்டுராஜனும் அதை ரசித்துக் கொண்டிருந்தான்.

கார்த்திக் தூங்க முயற்சித்தான்.

பட்டு வெங்கியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"சாயங்காலம் டவுனுக்குப் போனேன். சாரதாவும் வந்திருந்தா. ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போன்னா. போனோம். அப்



"என்ன இது? நாம ஊரை விட்டு ஓடுறப்ப கூடவே ஒரு நாதஸ்வர பார்ட்டியும் ஓடி வருது?"

"ஊர் எல்லை வரை மங்கள இசையோடு நம்மை வழியனுப்ப சந்தோஷம் தாங்காம எங்கப்பா செஞ்ச ஏற்பாடு இது!


- அம்பை தேவா

புறம் சினிமா, முன்னூறு ரூபாய் கரைஞ்சிட்டுது...''

வெங்கி சிரித்தான் - ''பொண்ணுங்க பாடு ஜாலிதான்! அப்பன், அண்ணன், தம்பி, பாய்ஃப்ரெண்ட், புருஷன், புள்ளைன்னு எவனையாவது காலி பண்ணிப் பொழைச்சிக்கிறாங்க.''

கார்த்திக் யோசித்தான்.

அமைதியான இந்த இரவிலேயே எவ்வளவோ படிக்கலாம். விட்டால்தானே!



சிகரெட், குடி, மாமிசம், பெண்கள், சினிமா, ஓயாத எஃப். எம். என்று பொழுதைப் போக்கும் இவர்களுக்கு நடுவே, விடுதி மாணவனாக வந்து சேர்ந்ததை விதி என்றுதான் சொல்ல வேண்டும்.

நடுஜாமத்தில் ரேடியோ ஓய்ந்தது. வெங்கியின் குறட்டையும் பட்டுராஜனின் அசைவற்ற தன்மையும் அவர்கள் தூங்கி விட்டதை உணர்த்தியது. அவனுக்குத்தான் தூக்கம் வரவில்லை.

காலையில் செய்தித்தாளில் பார்த்தது நினைவுக்கு வந்தது - இந்தியா முழுவதும் இரண்டரை லட்சம் பொறியாளர்கள் வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் போய்ச் சேரப் போகிறவர்கள்தான் நாமும். ஆனால் என்றாவது நல்ல எதிர்காலம் அமையும் என்ற எதிர்பார்ப்புதான், இந்தப் படிப்பின் அடித்தளம். அதற்குத் தகுதியுடையவர்களாக கல்லூரியை விட்டு வெளியே அடியெடுத்து வைக்க வேண்டாமா?

அவனுக்கு லட்சுமிப் பாட்டி சொன்ன ரத்தினபுரிச் சகோதரர்கள் கதைதான் நினைவுக்கு வந்தது.

லட்சுமிப் பாட்டி அப்பாவின் அம்மா. அவனுடைய பிஞ்சு வயதில் அவள் அவனைத் தன் மடி மீது இருத்திக் கொண்டு நிறையக் கதைகள் சொல்லியிருக்கிறாள். அதில் ஒன்றுதான் ரத்தினபுரி சகோதரர்கள் கதை.

.... கடல் கடந்து வியாபாரத்துக்குப் போன வையாபுரியின் குடும்பத்தை வறுமை பிடுங்கித் தின்றது. வையாபுரியின் பிள்ளைகள் மூவரையும் அவர்களின் தாய் சம்பாதித்து வரச் சொல்லி வழியனுப்பினாள். மூவரும் ரத்தினபுரியின் எல்லையைக் கடந்து, அடுத்துள்ள காட்டுக்குள் நுழைந்தனர். அங்கேயே உணவை முடித்துக் கொண்டு மேலும் பயணித்தனர். வழியில் ஒரு குகை குறுக்கிட்டது. அதற்குள் சென்று பார்க்க விரும்பினார்கள். நுழைவாயிலிலேயே நொறுங்கிக் கிடந்த மனித எலும்புக் கூடுகளை அவர்கள் பார்க்க நேர்ந்தது. உடனே மூத்தவன் விஷப் பரீட்சை வேண்டாம் என்றான். தம்பிகள் முரண்பட்டனர். அண்ணனைத் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதித்துவிட்டு, அவர்கள் குகைக்குள் மேலும் சென்றார்கள். வழியிலேயே தங்கக் காசுகள் குவிந்திருப்பதைக் கண்டனர். அவற்றை எடுத்துக் கொண்டனர். இளையவன் மேலும் உள்ளே செல்லலாம் என்றான். மத்திமன் தயங்கினான். இளையவன் தன்னிடம் கொஞ்சம் தங்கக் காசுகளை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவற்றுடன் அண்ணனைப் போக விட்டான். பிறகு தான் மட்டும் மேலும் குகைக்குள் சென்றான். அங்கே கிடைத்த விலை உயர்ந்த ரத்தினக் கற்களுடன் நாடு திரும்பினான். மிகப் பெரிய வியாபாரி ஆனான். செல்வமும் அச்சமற்ற தன்மையும் நிறைந்த அவனுக்கு ஆண் வாரிசில்லாத அரசன் தன் மகளை மணம் முடித்துத் தர, அவன் அந்த நாட்டுக்கே அரசனானான்...

அந்த இரவின் அமைதியில் அந்தக் கதை மீண்டும் மனத்தில் நிழலாடியது.

வாசலில் கிடந்த மனித எலும்புக் கூடுகளை அலட்சியம் செய்து, மரணபயமற்று பயணித்தவன் தான் ராஜரிக வாழ்வை எட்டினான்...

லட்சுமிப் பாட்டி இப்பொழுது இல்லை. ஆனால் -

அவள் விதைத்த விதை இருக்கிறது.

எல்லா அச்சங்களையும் விலக்கிவிட்டு அவன் மெல்ல உறங்கத் துவங்கினான்.



சிவகாமியின் சபதம்

இருபத்து எட்டாம் அத்தியாயம்

விழாவும் விபரீதமும்

எத்தனையோ நூற்றாண்டுக் காலமாக நெடிது வளர்ந்து நீண்டு படர்ந்து ஓங்கித் தழைத்திருக்கும் ஆல விருக்ஷத்தின் காட்சி அற்புதமானது. அத்தகைய ஆலமரத்தின் விழுதுகள் காரணமாகத் தாய்மரத்தைச் சேர்ந்தாற்போல் கிளை மரங்கள் தோன்றித் தனித்த மரங்களைப் போலவே காட்சி தருவதும் உண்டு. ஸநாதன ஹிந்து மதமாகிய ஆலமரத்திலிருந்து அவ்விதம் விழுது இறங்கி வேர் விட்டுத் தனி மரங்களாகி நிற்கும் சமயங்கள் பௌத்தமும் சமணமும் ஆகும். அவ்விரு சமயங்களும் பழைய காலத்தில் பாரத நாட்டில் கலைச்செல்வம் பெருகியதற்குப் பெரிதும் காரணமாயிருந்தன.

அஜந்தா மலைப் பிராந்தியத்துக்குள்ளே மனிதர்கள் எளிதில் எட்ட முடியாத அந்தரங்கமான இடத்தில் மலையைப் பிளந்துகொண்டு பாதிமதியின் வடிவமாகப் பாய்ந்து சென்ற நதிக்கரையிலே, இன்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் புத்த பிக்ஷுக்கள் கருங்கற் பாறைகளைக் குடைந்து புத்த சைத்யங்களையும் விஹாரங்களையும் அமைக்கத் தொடங்கினார்கள். அது முதல் இரண்டாவது புலிகேசிச் சக்கரவர்த்தியின் காலம் வரையில், அதாவது ஏறக்குறைய

அமரர் கல்கி

அறுநூறு ஆண்டுக் காலம் அந்த அந்தரங்கப் பிரதேசத்தில் அற்புதமான சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன. அழியாத கல்லில் அமைந்த சிலை வடிவங்களும், அமர வர்ணங்களில் தீட்டிய ஓவிய உருவங்களும் பல்கிவந்தன. பார்ப்போரின் கண்களின் மூலம் இருதயத்துக்குள்ளே பிரவேசித்து அளவளாவிப் பேசிக் குலாவும் தேவர்களும் தேவியர்களும், வீரர்களும் வீராங்கனைகளும், சௌந்தரிய புருஷர்களும் அழகே உருவமான நாரீமணிகளும் சைத்ரிக பிரம்மாக்களால் அங்கே சிருஷ்டிக்கப்பட்டு வந்தார்கள்.

அவ்வாறு அஜந்தாவிலே புதிய கலை சிருஷ்டி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அந்தப் பிரதேசம் கண்டிராத கோலாகலத் திருவிழா, புலிகேசிச் சக்கரவர்த்தியின் ஆட்சி தொடங்கிய முப்பத்தாறாவது வருஷத்தில் அங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுவே அந்தச் சளுக்கப் பேரரசன் ஆட்சியின் கடைசி ஆண்டுமாகும்.

பழைய பாரத நாட்டில் இராஜாங்கங்களும் இராஜ வம்சங்களும் மாறிய போது, சமயங்களுடைய செல்வாக்கு மாறுவதும் சர்வசாதாரணமாயிருந்தது. இந்த நாளில் போலவே அந்தக் காலத்திலும் விசால நோக்கமின்றிக் குறுகிய சமயப் பற்றும், துவேஷ புத்தியும் கொண்ட மக்கள் இருக்கவே செய்தார்கள். சமரச புத்தியுடன் சகல மதங்களையும் ஒருங்கு நோக்கிக் கலைகளை வளர்த்து நாட்டிற்கே மேன்மையளித்த புரவலர்களும் அவ்வப்போது தோன்றினார்கள்.

நம்முடைய கதை நடந்த காலத்தில் வடக்கே ஹர்ஷவர்த்தனரும், தெற்கே மகேந்திர பல்லவர், மாமல்ல நரசிம்மர் ஆகியவர்களும் அத்தகைய சமரச நோக்கங் கொண்ட பேரரசர் திலகங்களாகப் பாரத நாட்டில் விளங்கினார்கள்.

வாதாபிப் புலிகேசிச் சக்கரவர்த்தியும் காஞ்சிப் படையெடுப்பிலிருந்து திரும்பி வந்த பிறகு, நாளடைவில் அத்தகைய பெருந்தகையாரில் ஒருவரானார். அஜந்தா புத்த சங்கிராமத்துக்கு அவர் அளவில்லாத கொடைகளை அளித்துக் கலை வளர்ச்சியில் ஊக்கம் காட்டி வந்தார். இது காரணமாக, அஜந்தாவின் புத்த பிக்ஷுக்கள் அறுநூறு வருஷமாக அங்கு நடவாத காரியத்தைச் செய்யத் தீர்மானித்தார்கள். அதாவது புலிகேசிச் சக்கரவர்த்தியை அஜந்தாவுக்கு அழைத்து உபசரிக்கவும், அது சமயம் சிறப்பாகக் கலை விழாக் கொண்டாடவும் ஏற்பாடு செய்தார்கள்.

சக்கரவர்த்தியும் அவருடைய பரிவாரங்களும் வந்து சேர்வதற்காகக் காடு மலைகளைச் செப்பனிட்டு இராஜ பாட்டை போடப்பட்டது. அந்தப் பாதை வழியாக யானைகளிலும், குதிரைகளிலும் சிவிகைகளிலும் ஏறிச் சக்கரவர்த்தியும் அவருடைய பரிவாரங்களும், மந்திரி தந்திரிகளும் சேனாபதிகளும் மற்றும் சளுக்க சாம்ராஜ்யத்தின் பிரசித்த கவிஞர்களும் கலை நிபுணர்களும், அயல்நாடுகளிலிருந்து வந்திருந்த விசேஷ விருந்தாளிகளும், மேற்படி கலை விழாவுக்காக அஜந்தா வந்து சேர்ந்தார்கள்.

அவர்களனைவரும் அஜந்தா புத்த பிக்ஷுக்களால் இராஜோபசார மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்கள். வந்த விருந்தாளிகள் கும்பல் கும்பலாகப் பிரிந்து ஒவ்வொரு சைத்யத்துக்கும், விஹாரத்துக்கும் சென்று ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களையும் சித்திரங்களையும் பார்த்துக் களித்துக் கொண்டு வந்தார்கள்.

நல்ல வெயில் எரித்த உச்சிவேளையிலேதான் விஹாரங்களின் உட்சுவர்களில் தீட்டியிருந்த உயிரோவியங்களைப் பார்ப்பது சாத்தியமாகையால், விருந்தாளிகள் அனைவரும் அன்றிரவு அங்கேயே தங்கியிருந்து மறுநாளும் மேற்படி சித்திரக் காட்சிகளைப் பார்த்து விட்டுப் போவது என்று ஏற்பாடாகியிருந்

தது.

சக்கரவர்த்தியின் அன்றைய முக்கிய அலுவல்கள் எல்லாம் முடிந்த பிறகு பிற்பகலில் சிரமப் பரிகாரமும் செய்து கொண்டாயிற்று.

மாலைப் பொழுது வந்தது. மேற்கே உயரமான மலைச் சிகரங்களுக்குப் பின்னால் சூரியன் மறைந்து கீழே கீழே போய்க் கொண்டிருந்தது. அம்மலைச் சிகரங்களின் நிழல்கள் நேரமாக ஆகக் கிழக்கு நோக்கி நீண்டு கொண்டே வந்தன. கிழக்கேயிருந்த சில உயர்ந்த சிகரங்களில் படிந்த மாலைச் சூரியனின் பொன் கிரணங்கள் மேற்சொன்ன கரிய நிழல் பூதங்களால் துரத்தப்பட்டு அதிவேகமாகக் கிழத்திசையை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தன.

மலையை அர்த்த சந்திர வடிவமாகப் பிளந்துகொண்டு சென்ற வாகோரா நதியின் வெள்ளமானது ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் ஆங்காங்கு துள்ளி விளையாடிக் கொண்டும், அந்த விளையாட்டிலே விழுந்து எழுந்து இரைந்து கொண்டும் அதிவிரைவாகச் சென்று கொண்டிருந்தது.

சரிவான பாறைச் சுவர்களிலே கண்ணுக்கெட்டிய தூரம் பாரிஜாத மரங்கள் இலையும் பூவும் மொட்டுக்களுமாய்க் குலுங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் இடையிடையே சரக் கொன்றை மரங்கள் கண்ணைப் பறித்த பொன்னிறப் பூங்கொத்துக்களைச் சரம் சரமாகத் தொங்கவிட்டுக் கொண்டு பரந்து நின்றன.

நதி ஓரத்துப் பாறை ஒன்றில் இரண்டு கம்பீர ஆகிருதியுள்ள புருஷர்கள் அமர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

சற்று அருகில் நெருங்கிப் பார்த்தோமானால் அவர்கள் புலிகேசிச் சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவுந்தான் என்பதை உடனே தெரிந்து கொள்வோம்.

முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு எந்த வாகோரா நதிக் கரையின் பாறையின் மேல் உட்கார்ந்து அண்ணனும், தம்பியும் தங்கள் வருங்காலப் பகற்கனவுகளைப் பற்றி சம்பாஷித்தார்களோ, வாதாபிச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிச் சளுக்க ராஜ்யத்தை மகோந்நத நிலைக்குக் கொண்டு வருவது பற்றிப் பற்பல திட்டங்களைப் போட்டார்களோ, அதே பாறையில் இன்று அவர்கள் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், அன்றைக்கும் இன்றைக்கும் அவர்களுடைய தோற்றத்திலேயும் சம்பாஷணையின் போக்கிலேயும் மிக்க வித்தியாசம் இருந்தது. பிராயத்தின் முதிர்ச்சியோடுகூட அவர்களுடைய வெளி உலக அநுபவங்களும் அக உலக அநுபவங்களும் அவர்கள் ஈடுபட்ட கோரமான இருதயப் போராட்டங்களும் ஆசாபாசங்களும் கோபதாபங்களும் சேர்ந்து, முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் அதே நதியில் பிரதிபலித்த பால்வடியும் இளம் முகங்களைக் கோடுகளும் சுருக்கங்களும் விழுந்த கொடூர முகங்களாகச் செய்திருந்தன.

முக்கியமாக, நாகநந்தி பிக்ஷுவின் முகத்தில் கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. இரத்தம் கசிவது போல் சிவந்திருந்த கண்களில் அடிக்கடி கோபாக்னியில் ஜுவாலை மின்னலைப் போல் பிரகாசித்தது.

அவர் கூறிய வார்த்தை ஒவ்வொன்றும் நெருப்பைக் கக்கிக் கொண்டு பாயும் அக்னியாஸ்திரத்தைப் போல் புறப்பட்டுச் சீறிக் கொண்டு பாய்ந்தன.

"ஆ! தம்பி! என்னுடைய விருப்பம் என்னவென்றா கேட்கிறாய்; சொல்லட்டுமா? இந்தக் கணத்தில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டு இந்த அஜந்தா மலையானது அப்படியே அதல பாதாளத்தில் அமிழ்ந்து விட வேண்டுமென்பது என் விருப்பம். ஆயிரம் இடிகள் சேர்ந்தாற் போல் விழுந்து இங்குள்ள சைத்யங்

களையும், விஹாரங்களையும், இங்கே வசிக்கும் பிக்ஷுக்களையும், உன்னையும் உன் பரிவாரங்களையும் என்னையும் அடியோடு அழித்து நாசமாக்க வேண்டுமென்பது என் விருப்பம்!" என்றார் நாக நந்தி.

இதைக் கேட்ட புலிகேசி, சாவதானமாக, "அடிகளே! அஜந்தாவுக்கு வந்தது உண்மையிலேயே பலன் தந்துவிட்டது. எனக்குச் சொல்ல முடியாத சந்தோஷமாயிருக்கிறது. கொஞ்ச காலமாகத் தாங்கள் ரொம்பவும் பரம சாதுவாக மாறிக் கொண்டு வந்தீர்கள். இன்றுதான் பழைய நாகநந்தி பிக்ஷுவாகக் காட்சி அளிக்கிறீர்கள்!" என்று சொல்லி புன்னகை புரிந்தார்.

"ஆம் தம்பி, ஆம்! இன்று பழைய நாகநந்தி ஆகியிருக்கிறேன். அதன் பலனை நீயே அநுபவிக்கப் போகிறாய் ஜாக்கிரதை!" என்று பிக்ஷு நாக சர்ப்பத்தைப் போல் சீறினார்.

"அண்ணா! என்னை என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய்?" என்று புலிகேசி கேட்டார்.

"இன்று இராத்திரி நீ தூங்கும்போது இந்த விஷக் கத்தியை உன் மார்பிலே பாய்ச்சி உன்னைக் கொன்று விடப் போகிறேன்..!"

புலிகேசி "ஹா ஹா ஹா" என்று சிரித்தார். பிறகு, "அப்புறம் என்ன செய்வீர்கள்? அதாவது என் பிரேதத்தை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று பரிகாசக் குரலில் வினவினார்.

"இந்த நதியில் கொண்டு வந்து போட்டு விடுவேன்!"

"அப்புறம்? கேட்கிறவர்களுக்கு என்ன சொல்லுவீர்கள்?"

"ஒருவரும் கேட்க மாட்டார்கள்!"

"ஏன் கேட்க மாட்டார்கள்? அஜந்தாவுக்கு வந்த சக்கரவர்த்தி இரவுக்கிரவே எப்படி மறைந்தார் என்று சளுக்க ராஜ்யத்தின் பிரஜைகள் கேட்க மாட்டார்களா?"

"கேட்க மாட்டார்கள்! சக்கரவர்த்தி மறைந்தது அவர்களுக்குத் தெரிந்தால் அல்லவா கேட்பார்கள்? ஒருவருக்கும் அது தெரியப் போவதில்லை."


"அது எப்படி?"

"ஒரு சமயம் நான் உன் உடைகளைத் தரித்து அடிபட்டுச் சித்திரவதைக்குள்ளாகி உன் உயிரைக் காப்பாற்றினேன். இன்னொரு சமயம் நான் உன்னைப் போல் வேஷம் தரித்துப் போர்க்களத்தில் நின்று மகேந்திரனோடு போராடி அவன்மீது விஷக்கத்தியை எறிந்து கொன்றேன். அதே உருவப் பொருத்தம் இப்போதும் எனக்குத் துணை செய்யும். நீ மறைந்ததையே ஜனங்கள் அறிய மாட்டார்கள். நாகநந்தி பிக்ஷு மறைந்ததைப் பற்றி யாரும் கவனிக்க மாட்டார்கள். நியாயமாக இந்தச் சளுக்க ராஜ்யம் எனக்கு உரியது. நான் மனமார இஷ்டப்பட்டு உனக்கு இந்தச் சாம்ராஜ்யத்தைக் கொடுத்தேன். சென்ற முப்பத்தைந்து வருஷமாக உன்னுடைய க்ஷேமத்தையும் மேன்மையையும் தவிர வேறு எண்ணமே இல்லாமலிருந்தேன். ஆனால், நெஞ்சில் ஈவிரக்கமற்றவனும், சகோதர வாஞ்சையற்றவனும் நன்றியற்ற கிராதகனுமான நீ என்னை இன்று பலர் முன்னிலையில் அவமானப்படுத்தினாய்! ஆ! இந்தப் பூமி பிளந்து உன்னை இன்னும் விழுங்கவில்லையே என்பதை நினைத்துப் பார்த்தால் எனக்குப் பரம ஆச்சரியமாயிருக்கிறது!"

"அண்ணா! அண்ணா! நீ என்ன சொல்கிறாய்? என்னை இப்படியெல்லாம் சபிக்க உனக்கு எப்படி மனம் வருகிறது? உன்னை என்ன அவமானப் படுத்தி விட்டேன்?"

"இன்னும் என்ன அவமானம் செய்ய

• தக்ஷிண பாரத தேசத்தின் சரித்திரத்தில் பல்லவ சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மரின் வாதாபிப் படையெடுப்பு பிரசித்தி பெற்றது. கி.பி. 642 - ஆம் ஆண்டில் பல்லவ சைன்யம் சளுக்க சாம்ராஜ்யத்தின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றி அதைத் தீயிட்டு அழித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அந்தக் காலத்துச் சரித்திரத்தில் பிரசித்தி படைந்த தென்னாட்டு ஸ்தலங்கள் சிலவற்றை எதிரே உள்ள படத்தில் காணலாம்.


வாதாபி படையெடுப்பு
நர்மதை
தபதி
அஜந்தா
கோதாவரி
வேங்கி
வாதாபி
துங்கபத்திரை
வட பெண்ணை
காஞ்சி
பாலாறு
மாமல்லபுரம்
தென் பெண்ணை
செங்காட்டங்குடி
உறையூர்
மதுரை
தாமிரபரணி

வேண்டும்? சிவகாமி உன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரியதாக அழியாத வர்ணத்தில் சித்திரம் எழுதச் செய்ததைக் காட்டிலும் வேறு என்ன அவமானம் எனக்கு வேண்டும்? இதற்காகவா என்னை நீ இங்கே அழைத்து வந்தாய்? இதற்காகவா இந்தக் கலைவிழா நடத்தினாய்? ஆகா! துஷ்ட மிருகமே! ஒரு கலையைக் கொண்டு இன்னொரு கலையை அவமானப்படுத்திய உனக்காக எரிவாய் நரகம் காத்திருக்கிறது, பார்!''

"அண்ணா! உனக்கு என்ன வந்து விட்டது! அந்தப் பல்லவ நாட்டு நடனக்காரி உன்னை என்ன செய்து விட்டாள்? உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாக இருந்த சகோதரர்களை இப்படிப் பிரிப்பதற்கு அவளிடம் அப்படி என்ன சக்தி இருக்கிறது? அண்ணா! அண்ணா! என் முகத்தைப் பார்த்துச் சொல்லு! நமது முப்பத்தைந்து வருஷத்து அன்யோன்ய சிநேகத்தை நினைத்துக் கொண்டு சொல்லு! அன்றொரு நாள் இதே பாறை மீது உட்கார்ந்து நாம் கட்டிய ஆகாசக் கோட்டைகளையும், அவற்றையெல்லாம் பெரும்பாலும் காரியத்தில் நிறைவேற்றி வைத்ததையும் எண்ணிப் பார்த்துச் சொல்லு...! இந்த தெய்வீக வாதோர நதியின் சாட்சியாக, இந்தப் பர்வத சிகரங்கள் சாட்சியாக, ஆகாசவாணி பூமிதேவி சாட்சியாகச் சொல்லு! என்னைக் காட்டிலும் உனக்கு அந்தக் காஞ்சி நகரத்துப் பெண் மேலாகப் போய் விட்டாளா? அவளுக்காகவா இப்படியெல்லாம் நீ எனக்குச் சாபம் கொடுக்கிறாய்?''

முன்னைக் காட்டிலும் கடினமான, குரோதம் நிறைந்த குரலிலே புத்த பிக்ஷு கூறினார்: "ஆமாம், ஆமாம்! புத்த பகவானுடைய பத்ம பாதங்கள் சாட்சியாகச் சொல்லுகிறேன். சங்கத்தின் மீதும் தர்மத்தின் மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். உன்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு எனக்குச் சிவகாமி மேலானவள்தான்! நீயும் உன் சாம்ராஜ்யமும் உன் புத்திரமித்திரர்களும் அவளுடைய கால் தூசுக்குச் சமமாக மாட்டீர்கள். அவளை அவமானப்படுத்திய நீயும் உன் சந்ததிகளும் சர்வ நாசமடையப் போகிறீர்கள்! அந்தச் சரணாகதி சித்திரத்தை எழுதிய சித்திரக் கலைஞனின் கதி என்ன ஆயிற்று என்று உனக்குத் தெரியுமா?''

"அடிகளே! அந்தத் துர்ப்பாக்கியனைத் தாங்கள் என்ன செய்து விட்டீர்கள்?''

புத்த பிக்ஷு பயங்கரமான சிரிப்பு ஒன்று சிரித்தார்.

"பார்த்துக் கொண்டேயிரு! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் யாராவது வந்து சொல்வார்கள்!''

"அண்ணா! ஒன்று நான் தெரிந்து கொண்டேன். இளம் பிராயத்திலிருந்து பிரம்மசரியத்தையும் பிக்ஷு விரதத்தையும் மேற்கொள்வது ரொம்பத் தவறானது. இல்வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அநுபவித்து விட்டுத் தொலைத்த பிறகுதான் சந்நியாசம் மேற்கொள்ள வேண்டும். வாலிபத்திலேயே வாழ்க்கை வைராக்கியம் கொள்கிறவர்கள் உன்னைப் போல்தான் பிற்காலத்தில் யாராவது ஒரு மாயக்காரியின் மோக வலையில் விழுந்து பைத்தியமாகி விடுகிறார்கள்!''

"புலிகேசி! இத்தனை நேரம் பொறுத்திருந்தேன். இனிமேல் சிவகாமியைப் பற்றி நீ ஒரு வார்த்தை சொன்னாலும் என்னால் பொறுக்க முடியாது.''

"அடிகளே! சிவகாமி தேவியிடம் தாங்கள் இவ்வளவு பரிவு காட்டுகிறீர்களே? அவளுடைய கௌரவத்தை இவ்வளவு தூரம் காப்பாற்றுகிறீர்களே? தங்களிடம் சிவகாமி தேவிக்கு இவ்வளவு தூரம் பரிவு இருக்கிறதா? தாங்கள் அவளிடம் வைத்திருக்கும் அபிமானத்தில் ஆயிரத்தில் ஒரு பங்காவது அவளுக்கு உண்டா...?''

புலிகேசி சக்கரவர்த்தியின் மேற்படி கேள்வி புத்த பிக்ஷுவின் உள்ளத்தை வாள் கொண்டு அறுப்பது போல் அறுத்தது என்பதை அவருடைய முகக் குறி காட்டியது. அந்தச் சொல்ல முடியாத வேதனையை வெகு

சீக்கிரத்திலே நாகநந்தி சமாளித்துக் கொண்டு திடமான குரலில், "அந்தக் கேள்வி கேட்க உனக்கு யாதொரு பாத்தியதையும் இல்லை. ஆனாலும் சொல்லுகிறேன். சிவகாமி உன்னைப் போல் அவ்வளவு கல்நெஞ்சம் கொண்டவள் அல்ல. அவளுக்கு என் பேரில் பிரியம் இருக்கத்தான் செய்கிறது" என்றார்.

"அண்ணா? நீ இப்படி ஏமாறக் கூடியவன் என்று கனவிலும் நான் எதிர்பார்க்கவில்லை!"

"தம்பி! நான் ஏமாறவில்லை. நாம் அஜந்தா யாத்திரை கிளம்பிய அன்று இரவு சிவகாமி என் உயிரைக் காப்பாற்றினாள்!"

"அது என்ன? உன் உயிருக்கு அப்படி என்ன ஆபத்து வந்தது. சிவகாமி காப்பாற்றுவதற்கு?"

"இந்த விஷக் கத்தியால் என்னை நானே குத்திக் கொள்ளப் போனேன். சிவகாமி என் கையைப் பிடித்து என்னைக் காப்பாற்றினாள்" என்று புத்த பிக்ஷு கூறியபோது, அவரது அகக் கண் முன்னால் அந்தக் காட்சி அப்படியே தோன்றியது. அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

புலிகேசி புன்னகை புரிந்து, "ஐயோ! மகா மேதாவியான உன்னுடைய புத்தியா இப்படி மாறிப் போய்விட்டது? சிவகாமி எதற்காக உன் உயிரைக் காப்பாற்றினாள், தெரியுமா? அவளுடைய காதலன் மாமல்லனுடைய கையினால் நீ சாக வேண்டும் என்பதற்காகத்தான். அந்த மூடப்பெண் இன்னமும் அப்படிக் கனவு கண்டு கொண்டிருக்கிறாள்!" என்றார்.

மேலே விவரித்த அண்ணன் தம்பி சம்பாஷணை நேயர்களுக்கு நன்கு விளங்கும் பொருட்டு அன்று மத்தியானம் நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்க வேண்டும். புலிகேசிச் சக்கரவர்த்தியும் புத்த பிக்ஷுவும் சீன யாத்திரிகரும் மற்றும் சாம்ராஜ்யத்தின் பிரமுகர்களும் ஒரு கும்பலாக அஜந்தாவின் அதிசயச் சித்தரங்களைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார்கள். சைத்தியங்கள், விஹாரங்கள் இவற்றின் உள்சுவர்களிலே புத்த பகவானுடைய தெய்வீக வாழ்க்கை வரலாறும், அவருடைய பூர்வ அவதாரங்களின் சம்பவங்களும் சித்திரிக்கப்பட்டிருந்தன. வெளித் தாழ்வாரச் சுவர்களிலோ அந்தக் காலத்துச் சமூக வாழ்க்கைச் சித்திரங்கள் சில காணப்பட்டன.


அப்படிப்பட்ட நவீன வாழ்க்கைச் சித்திரங்களில் புலிகேசிச் சக்கரவர்த்தியின் வாழ்க்கை சம்பந்தமான இரு முக்கிய சம்பவங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று, புலிகேசிச் சக்கரவர்த்தி இராஜ சபையில் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருக்க, பாரஸீக மன்னனிடமிருந்து வந்த தூதர்கள் சக்கரவர்த்திக்குக் காணிக்கைகள் சமர்ப்பித்த காட்சியாகும்.

மேற்படி காட்சி எல்லாருக்கும் மிக்க குதூகலத்தை அளித்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், மற்றொரு சித்திரம் அப்படிக் குதூகலத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக அனைவருக்கும் ஒருவித அசந்துஷ்டியை உண்டாக்கிப் பின்னால் பெரும் விபரீதம் நேர்வதற்கும் காரணமாயிற்று.

அந்த விபரீதச் சித்திரம், புலிகேசிச் சக்கரவர்த்தியின் பாதங்களில் ஒரு நடனக் கலைவாணி தலையை வைத்து வணங்கி மன்னிப்புக் கோருவது போல் அமைந்த சித்திரந்தான். இதைத் தீட்டிய ஓவியக் கலைஞன் சிறந்த மேதாவி என்பதில் சந்தேகமில்லை. புலிகேசியின் முகத்தையும் தோற்றத்தையும் அமைப்பதில் அவன் கற்பனா சக்தியின் உதவியைப் பயன்படுத்தியிருந்தான். அந்தச் சித்திரத்தில் புலிகேசி துஷ்டநிக்கிரஹம் செய்வதற்கு முனைந்திருக்கும் தேவேந்திரனையொத்துக் கோப சௌந்தரியம் பொருந்தி விளங்கினான். கீழே கிடந்த பெண்ணின் தோற்றத்தில் அளவில்லாத சோகத்தையும் மன்றாடி மன்னிப்புக் கோரும் பாவத்தையும் சித்திரக் கலைஞன் வெகு அற்புதமாக வரைந்திருந்தான்.



''சிவகாமி உன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரியதாக அழியாத வர்ணத்தில் சித்திரம் எழுதச் செய்ததைக் காட்டிலும் வேறு என்ன அவமானம் எனக்கு வேண்டும்?''



அருள்வாக்கு

"அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயிலே மண்ணு" என்பது நம் எல்லோருக்கும் தெரிந்தது. இதிலே 'அறியாதவன்' என்பதில் வல்லின 'றி'யை இடையினமாக மாற்றி, "அரியாதவன்" என்று சொல்வார்கள். ஹரியாகிய யாதவ குலக் கண்ணன் என்று அர்த்தம். அவன் வாயிலே மண்ணைப் போட்டுக் கொண்டு விட்டு யசோதைக்கு லோகம் முழுவதையும் காட்டினான் அல்லவா; அதைத்தான் 'அரியாதவன் வாயில் மண்ணு' என்பது.



"ஸரி, அரியும் சிவனும் ஒன்று என்று சொல்லி விட்டு இப்படி ஒன்று - இவர்களிலே ஹரி லோகம் முழுவதையும் காட்டினவன் என்று எதற்காகச் சொல்ல வேண்டும்?"

"எதற்காகவா? இதிலேயும் பெரிய தத்வம் இருக்கிறது. ஒரே பிரம்மம்தான் ஹரி, சிவன் இரண்டு பேரும். அதனாலே அவர்கள் ஒன்றேதான். ஆனால் அந்த ஒரே பிரம்மத்தை நிர்குணம், ஸகுணம் என்று இரண்டு நிலைகளில் நாம் பாவிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த இரண்டில் லோக வ்யவஹாரம் அடிபட்டுப் போன நிர்குணம்தான் சிவன். லோக வ்யவஹாரத்தை நடத்தும் ஸகுணமே ஹரி. மண்ணைத் தின்று லோகம் முழுவதையும் தன் வாயில் அடங்கி இருப்பதாக அவன் காட்டினபோது இந்த உண்மையைத்தான் உருவகப்படுத்தி இருக்கிறான். "அரியாதவன் வாயில் மண்ணு' என்று சொல்லி இதை ஞாபகப்படுத்தி விட்டதால் முதல் வரியில் சொன்ன 'அரியும் சிவனும்' என்பதில் விட்டுப் போன சிவன் நிர்குணம் என்பதையும் சொன்னதாகி விடுகிறது."

'றி'யை 'ரி'யாகக்கூட மாற்றாமல் அறியாதவன் என்ற ஒற்றை வார்த்தையை 'அறி' 'யாதவன்' என்று இரண்டாகப் பண்ணிக் கொண்டாலே போதும். 'அறி, யாதவன் வாயிலே மண்ணு' என்றாலே அரியும் சிவனும் ஒண்ணானாலும் இவர்களில் யாதவனாக வந்து மண்ணைத் தின்னவன் ஸகுண ப்ரம்மம் என்று அறி; அதனால் இன்னொருவன் நிர்குணம் என்றும் அறி' என்று அர்த்தமாகி விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

பக்கத்திலே நின்ற சேடிப் பெண்களின் பயந்த இரக்கம் வாய்ந்த தோற்றத்தைக் கொண்டு அந்த நடனப் பெண்ணின் சரணாகதியைப் பன்மடங்கு பரிதாப முள்ளதாகச் செய்திருந்தான்.

இவ்வளவுக்கும் பின்னால் சற்றுத் தூரத்திலிருந்து புத்த பிக்ஷு ஒருவர் கவலை ததும்பிய முகத் தோற்றத்துடனே விரைந்து வருவதையும் காட்டியிருந்தான். அந்தப் பிக்ஷுவைப் பார்த்தவுடனேயே, அவர் மேற்படி நடனப் பெண்ணை இராஜ தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே விரைந்து வருகிறார் என்ற எண்ணம் எல்லாருடைய மனத்திலும் உதயமாகும்படி இருந்தது. சித்திரங்களை விளக்கிக் கூறி வந்தவர் மேற்படி சித்திரத்தின் தாத்பரியத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னவுடனேயே அங்கிருந்தவர்கள் அனைவரும் ஏக காலத்தில் நாகநந்தி பிக்ஷுவை நோக்கினார்கள். ஒரு கண நேரம் நாகநந்தியின் முகம் படம் எடுத்த பாம்பைப் போல் காட்சியளித்தது. அடுத்த கணம் நாகநந்தி தம்மை நூறு கண்கள் கூர்ந்து நோக்குகின்றன என்பதை உணர்ந்தார். உடனே அவருடைய முக பாவமும் முற்றிலும் மாறி அதில் புன்னகை தோன்றியது.

"அற்புதம்! அற்புதம்! இந்தச் சித்திரத்துக்கு இணையான சித்திரம் உலகத்திலேயே இருக்க முடியாது! என்ன பாவம்? என்ன கற்பனை? இதைத் தீட்டிய ஓவியப் பிரம்மா யார்? அவருக்குத் தக்க வெகுமதி அளிக்க வேண்டும்!" என்று நாகநந்தி கூறினார்.

(தொடரும்)

சோ

எழுதிய **வால்மீகி ராமாயணம்**

மஹாபாரதம் பேசுகிறது

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள் **100** தலைப்புகளில் புத்தகங்கள்! **100**

என். ஸ்ரீநிவாஸன் எழுதியது

முதன்முறையாகத் தமிழில் வெளிவரும்

என்ஸைக்ளோபீடியா

1.	நம்மவர் செய்த விந்தைகள்	100
2.	அவர்கள் செய்த விந்தைகள்	100
3.	உலக மகா கொடுங்கோலர்கள்	100
4.	உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள்	100
5.	விந்தை உயிரினங்கள்	100
6.	அரண்மனை ரகஸியங்கள்	100
7.	உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள்	100
8.	நம்ப முடியாத உண்மைகள்	100
9.	வியப்பூட்டும் உண்மைகள்	100
10.	தாவர உலகிலே!	100
11.	விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும்	100
12.	யார் என்ன சொன்னார்கள்?	100
13.	நீருலகிலே!	100
14.	பாலூட்டிகள் வரிசையிலே!	100
15.	தமிழ் வளர்த்த பெருமக்கள்	100

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ.100/-

Dr. சுப்ரமண்ய ஸ்வாமி

எழுதிய

ராஜீவ் காந்தி கொலை

விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும்

(தமிழாக்கம் - சுதாங்கன்)

பரபரப்பான அரசியல்வாதியின் பரபரப்பான புத்தகம்

விலை ரூ. 125/-

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் தொகுத்த

தமிழ்ப் பழமொழிகள் (4 தொகுதிகள்) ரூ. 300/-

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி - திரு அவதாரம் நிறைவு வரை - ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் - புகைப்படங்களுடன் - இரண்டு தொகுதிகள் - (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது)

பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு (ரூ.500/-)

'சொல்லின் செல்வன்' பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

விதுர நீதி	ரூ. 30/-	ஸனத்குமாரரின் உபதேசங்கள்	ரூ. 25/-
நீதி சதகம்	ரூ. 21/	பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்	ரூ. 60/-
விபூதி ருத்ராட்சம் மகிமை	ரூ. 37/-	வைராக்கிய சதகம்	ரூ. 16/-
சித்தர்கள் சரித்திரம்	ரூ. 35/-	யட்சப் பிரச்னம் ப்ரச்னோத்ர ரத்னமாலிகா	ரூ. 25/-
துணுக் துணுக்	ரூ. 21/-	சித்ரகுப்தன் கதைகள்	ரூ. 18/-
அஷ்டாவக்ரர் உபதேசங்கள்	ரூ. 33/-	வாரியார் சொற்பொழிவில் கேட்டவை	ரூ. 60/-
மஹரிஷிகள் வரலாறு A.V. சுகவனேஸ்வரன்	ரூ. 65/-	An Introduction to the Vedas (Ka.Sri.Sri)	ரூ. 60/-

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை - 600 004. © 24941314

கிராமம் நகரம் மாநகரம் 8

'ஒளி உண்டாகக் கடவதாக' என்றார் கடவுள்; ஒளி உண்டானது. 'சினிமா உண்டாகக் கடவதாக' என்றார் மீண்டும்; தாமஸ் ஆல்வா எடிசன் உண்டானார். குகைகளின் சுவர்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும், ஓவியங்களும் உயிருள்ளதாகி நடனமாடத் தொடங்கின.

இதெல்லாம் நடந்து முடிந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு எங்கள் கிராமத்துக்கு டூரிங் டாக்கீஸ் வந்தது. கூண்டு வண்டிகளில் இருபுறமும் போஸ்டர் ஒட்டி, ரேடியோ ஸ்பீக்கர்களில் 'இன்றே கடைசி' என்று

நா. முத்துக்குமார்

திரையிடப்படும் படத்தின் பராக்கிரமங்களைச் சொல்லி, சிறுவர்கள் நாங்கள் பின்தொடர, நோட்டீஸ் கொடுத்துச் சென்றார்கள். மறக்காமல் ஒவ்வொரு தடவையும் கடைசியாக 'ஒளி ஒலி அமைப்பு ஈஸ்வரி சவுண்ட் சர்வீஸ்' என்று முகவரியோடு காது குத்து, கல்யாணம், மஞ்சள் நீராட்டு விழா போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு அணுகச் சொன்னார்கள். ஆடாதொடை பூக்கள் வடிவத்தில், சாயம் போயிருந்த அந்த ஸ்பீக்கர்களின் வசீகரத்தில், நாங்கள் ஊர் எல்லை வரை சென்று வழியனுப்புவோம். இப்படியாக மாட்டு வண்டிகளின் ஸ்பீக்கர் உதவியுடன் சினிமாவின் விதை எங்கள் ஊரில் விழத் தொடங்கியது.

ஒவ்வொரு உருவமும் தனது காதில் பேசும் ரகசியங்களைக் கறுத்த நிழலாக மொழி பெயர்க்கிறது – ஒளி. ஒளிக்கும் நிழலுக்குமான உறவின் சூட்சுமம் விக்ரமாதித்யனுக்கு வேதாளம் சொல்லும் கதையாக தினந்தோறும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒளி, உயரமான உருவங்களைச் சுருக்கி நிழலெடுத்து அகங்காரம் அழிக்கிறது. குட்டையான உருவங்களை நெடிதாக்கிக் காட்டி ஆறுதல் சொல்கிறது. "ஒளி இல்லாத பொருள் ஜகத்தில் இல்லை; இருள் என்பது குறைந்த ஒளி" என்றான் பாரதி.



ஒளி அவனது நிழலையும் வரலாற்றின் இருண்ட அறையில் புகைப்பட மாக்கி விட்டு, அடுத்தடுத்த நிழல்களைப் பிரதியெடுக்க விரைந்து கொண்டிருக்கிறது.



கிராமத்தில் இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு எங்கள் பாட்டி கதை சொல்லத் தொடங்குவாள். வேப்ப மரக் காற்றோடு திண்ணையில் அமர்ந்து 'உம்' கொட்டக் கொட்ட, பௌர்ணமி நிலவொளியில் மாய உலகம் தன் கதவுகளைத் திறக்கும். 'ஒரு ஊர்லஃ' என்று ஆரம்பித்து ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, கதைகள் சஞ்சரிக்கும். பறக்கும் கம்பளம் மேகங்களைக் கிழித்து வானத்தில் பறக்கும். பஞ்சவர்ணக் கிளியின் கழுத்துச் சிமிழுக்குள் இளவரசியின் உயிர் அபயக்குரல் கொடுக்கும். மோதிரங்களை விழுங்கும் மீன்கள் துஷ்யந்தனின் ஞாபகங்களைக் களவாடும்.

பள்ளிக்கூடம் முடிந்து விளையாடும் பின்மாலைப் பொழுதுகளில் நாங்கள் விஞ்ஞானிகளாகி விடுவோம். விஞ்ஞானம் ஒரு பொம்மை மாதிரி. அது எப்போதும் சிறுவர்களின் கண்களாலேயே பார்க்கச் சொல்கிறது. ஆச்சரியங்களையும், பிரம்மாண்டங்களையும், புதிர்களையும் திறந்து பார்க்க சிறுவர்களின் மனநிலையை விஞ்ஞானம் கேட்கிறது. விஞ்ஞானிகள் பலரின் செயல்களில் குழந்தைத்தனம் கலந்திருப்பது இதனால்தான்.

விஞ்ஞானிகளான பிறகு நாங்கள் சொந்தமாக திரைப்படம் காட்ட ஆரம்பித்தோம். எங்கள் முதல் திரைப்படக் கருவியின் செய்முறை மிக எளிமையானது. ஒரு தீப்பெட்டி, நீளமான சுருளாக ஒட்டப் பட்டக் காகிதப் படங்கள், இரண்டு குச்சிகள், இவைதாம் எங்கள் முதலீடு.

தீப்பெட்டியின் மத்தியில் சதுரமாக வெட்டிவிட்டு, மேலேயும் கீழேயும் இரண்டு குச்சிகளைச் செருகி, மேல் குச்சியில் காகிதச் சுருளை ஒட்டி, அதன் முடிவை கீழ்ச் சுருளில் கட்டியதும் கருவி தயார். கீழே இருக்கும் குச்சியைத் திருகத் திருக சதுர இடைவெளியில் படம் ஓடிக் கொண்டிருக்கும். சில நாட்களில் அனைவருக்கும் போரடித்துவிட்டது. செய்முறை எளிதென்பதால் எல்லா சிறுவர்களும் விஞ்ஞானிகளாகி விட்டார்கள்.

மூத்த விஞ்ஞானிகள் வளர வேண்டாமா? நாங்கள் வேறு கருவிக்கு மாறினோம். இதன் முதலீடு வீட்டிற்குத் தெரியாமல் திருடும் தைரியத்தைக் கேட்டது. ஒரு நாற்பது வாட்ஸ் பல்பு; முகம் பார்க்கும் கண்ணாடி, சில ஃபிலிம் சுருள்கள். இவை தான் கச்சாப் பொருள்கள். பல்பின் மேல் பகுதியை உடைத்து விட்டு அதன் குடுவைக்குள் தண்ணீரை ஊற்றிக் கொள்வோம். பல்புக்கு முன்னால் சூரிய ஒளியில், முகம் பார்க்கும் கண்ணாடியைக்



> "கர்ப்பமானதாலே வேலையை விட்டு நிறுத்திட்டாங்களே... உன்னோடது என்ன கம்பெனி?"
> "ஊறுகாய் கம்பெனி!"
> — தமிழ்நாயகி

காட்டி, பிரதிபலிக்கும் ஒளி பல்பில் விழுமாறு செய்வோம். பல்புக்கு பின்னால் ஃபிலிம் சுருளை வைப்போம். இவை அனைத்தும் ஒரு வெள்ளைச் சுவர் அல்லது வெண்திரை (அப்பாவின் வேஷ்டி) முன்னால் நடக்கும். ஃபிலிமில் இருக்கும் உருவம் பெரிதாகத் தெரிய, கூடியிருக்கும் சிறுவர்க் கூட்டம் குதூகலிக்கும். அந்தக் காலத்தில் கிராமத்து மாந்தோப்புகளில் மாங்காய்கள் திருடு போவதெல்லாம் நாங்கள் காட்டும் இந்தப் படத்திற்குப் பையன்கள் தரும் கட்டணமாக இருந்தது.

இந்த எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் சவால் விட்டபடி, "மருதமலை மாமணியே முருகய்யா..." என்றழைத்து டிக்கெட் கொடுத்து டூரிங் டாக்கீஸ் (சரிபாதி செந்தமிழில் டெண்ட்டு கொட்டா) படம் காட்டிக் கொண்டிருந்தது. கிராமத்தின் ஒரே பொழுது போக்கு அதுதான். ஆற்று மணலில் அமர்ந்தபடி, சாம்பல் நிறத்தில் சாயம்போன திரையில் பொரி உருண்டை சாப்பிட்டபடி படம் பார்ப்போம்.

ஒருமுறை நான் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது, இடைவேளையில் பக்கத்து ஊரைச் சேர்ந்த ஒரு அண்ணன், எங்கள் தெரு அக்காவிற்கு ஒரு கடிதம் கொடுத்து என்னைக் கொடுக்கச் சொன்னார். அந்த அக்கா ரொம்பவும் அழகாக இருப்பார். கிராமத்திலேயே எட்டாவது வரை படித்தவர். செம்பருத்திப் பூ பறிக்க காலைகளில் எங்கள் வீட்டிற்கு வருவார். கடிதத்தை வாங்கியதும் எனக்கு கைகள் நடுங்கத் தொடங்கிவிட்டன. டிக்கெட் கௌண்ட்டருக்கு அருகில் ஒளிந்து நின்று பிரித்துப் படித்தேன், "உனக்கு செகப்பு தாவணி ரொம்ப அழகா இருக்கு... உன் தங்கச்சிக்கிட்ட என்னைக் காட்டி என்ன சொல்லிக்கிட்டிருந்தே? என்னையே பார்த்துப் பார்த்து சிரிக்குறா! மளிகைக் கடை அண்ணாச்சி சந்தேகப்படறாரு... நாளைக்கு கன்னியம்மன் கோயிலுக்கு வந்துடு'' என்று எழுதி கையெழுத்திட்டிருந்தது. ஏகப்பட்ட எழுத்துப் பிழைகள். கையெழுத்திற்கு மேல் 'கோடி முத்தத்துடன்' என்பதற்குப் பதிலாக 'கேடி முத்தத்துடன்' என்றிருந்தது.

அந்த அக்காவின் அம்மாவுக்குத் தெரியாமல் கையைக் கிள்ளி கடிதத்தைக் கொடுத்தேன். நான்காக மடித்து தாவணிக்குள் செருகிவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தது. நாலைந்து மாதத்திற்குள் இருவரின் வீட்டிற்கும் விஷயம் தெரிந்து சண்டையாகி, அந்த அக்காவும் அண்ணனும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள். துஷ்யந்தனின் மோதிரத்தை விழுங்கிய மீன்கள் அவர்களின் கடிதங்களையும் விழுங்கியபடி நீந்திக் கொண்டிருந்தன. அதற்குப் பிறகும் டூரிங் டாக்கீஸின் மணலுக்கடியில் விரல்கள் சேர்வதும், கண் பார்வை வழி காதல் தொடர்வதும் நடந்து கொண்டுதானிருக்கிறது. இப்போது சவுக்கு கட்டைக்குப் பதில் ஆளுயர சுவர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேலி போடுகின்றன.



மாநகரத்து திரையரங்குகளில் மணல் மேடுகள் இல்லை. ஏ,பி,சி,டி என்று மாநகரம் ஆண்களையும், பெண்களையும் எண்களாக மாற்றி, சம உரிமை கொடுத்து உட்கார வைக்கிறது. அகன்ற திரைகளில், டி.டி.எஸ், ஒலியுடன் மாநகரம் தொழில் நுட்பத்தின் துல்லியத்தை பார்வையாளர்களுக்கு அளிக்கிறது. மாநகரத்து பெருந்திணைக் காதலர்களும், உடன் போக்கு ஜோடிகளும் கடைசி இருக்கைகளைக் கேட்டு வாங்கிப் படம் பார்க்கிறார்கள். கைக்கிளை அன்பர்கள், கழிவறைகளில் தத்தம் காதலியின் பெயரையோ, படத்தையோ கிறுக்கி, அதற்குக் கீழ் ஆட்டீன் வரைகிறார்கள்.

(சந்திக்கிறேன்)

படம்: ஸ்ரீஹரி

மீரா எழுதாத நாவல்!

எப்போதும்போலில்லாமல் நடுரோட்டில் மேடை போட்டு சாகித்ய அகாடமி நடத்திய விழா, கவிஞர் மீராவின் முதலாண்டு நினைவு நாள் விழாவாகத்தானிருக்கும்.

தமிழகத்தின் அனைத்து மூலைகளிலிருந்தும் திருவிழா போல, சிவகங்கையில் அக்கறையோடு கூடியிருந்தனர் கவிஞர்களும் எழுத்தாளர்களும்!

தலைமை தாங்கிய கவிஞர் அப்துல்ரகுமான், "மீரா எல்லோருக்கும் பொதுவானவர், அவர் ஒருபக்க வாதத்தை எப்போதும் விரும்பாதவர். ஆனால் அவரை பக்கவாதம் துன்புறுத்தியது. விருந்தாளிகளை உபசரிப்பதில் மீராவைப் போல நான் வேறு யாரையும் பார்த்ததில்லை. ஆனால் அவர் அழையாத விருந்தாளியாய் நோய்கள் வந்தன" என்று மீராவின் நினைவுகளில் மூழ்க, அடுத்தடுத்து வந்த எழுத்தாளர்களும், கவிஞர்களும் மீராவுக்கும் தங்களுக்குமான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

"மீரா எழுதத் திட்டமிட்ட நாவல் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த நாவலின் நாயகன் மீராதான். ஓர் அற்புதமான கவிஞன் படைக்க இருந்த சுயவரலாற்று நவீனம் நமக்குக் கிடைக்காமல் போனது தமிழ் இலக்கியத்துக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத நஷ்டம்" என்ற கவிஞர் க.வை. பழனிச்சாமி, பயணங்களின் போதெல்லாம் அவரது பெட்டிக்குள் இளைஞர்கள் எழுதிய இலக்கியங்களின் கையெழுத்துப் பிரதிகள்தான் நிரம்பிக் கிடக்கும் என்ற தகவலையும் சொன்னார்.



• நினைவு நாள் மேடை - கவிஞர் அப்துல் ரகுமான், சாகித்ய அகாடமி இயக்குனர் இளங்கோ, பேரா. பஞ்சாங்கம், கவிஞர் பாலா. மீராவின் பேத்தி பிரபஞ்சனா.

'விவாதங்கள் - விமர்சனங்கள்' என்ற அமர்வுக்குத் தலைமையேற்ற எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், "தமிழ் இலக்கியச் சூழலில் குழு மனப்பான்மை பெருகிவிட்டது. குழு சார்ந்த கருத்துக்களே திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. ஜெயகாந்தன் எழுத்துக்களையே மறுதலிக்கும் அளவுக்குக் குழு மனப்பான்மை குரூரம் அடைந்து விட்டது. மீராவின் நினைவு நாள் விழாவைக் கொண்டாடும் போது அர்த்தமுள்ள விவாதங்கள் கட்டமைக்கப்பட வேண்டும்" என்றார்.

விழாவின் முடிவில் நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்று:

மீரா வாழ்ந்த சிவகங்கை வீட்டை அவரது நினைவகமாக ஆக்குவது.

அழியாத நினைவுகளோடு விழா முடிந்ததும் இரண்டு எழுத்தாளர்கள் இப்படிப் பேசிக் கொண்டார்கள்:

சமீப காலத்தில் இறந்த எழுத்தாளர்களில் அதிக கூட்டம் கூடியது இரண்டு பேருக்குத்தான். அதில் ஒருவர் மீரா! – இன்னொருவர் சு. சமுத்திரம்.

— இராகுலதாசன்

அரசியலில் இதெல்லாம்...?

● என். சுஜாதா, சென்னை - 61.

? ஜெயலலிதா வரிமேல் வரிபோட்டு வதைக்கிறாரே, மீண்டும் மக்களைச் சந்தித்து வோட்டுக் கேட்க வேண்டுமென்ற பயமே கிடையாதா?


! இப்படியெல்லாம் கேட்டால் கேள்வி வரி போட்டுவிடுவார், ஜாக்கிரதை!

● க. கணேசன், பொறையாறு.

? கர்நாடகா திறந்துவிடும் காவிரி நீரின் அளவை மேட்டூர் அணையில்தான் அளக்க வேண்டும் என்று காவிரி கண்காணிப்புக் கமிட்டி கூறியதை ஏற்றுக் கொள்ள கர்நாடகா மறுத்து விட்டதே?

! காவிரி சம்பந்தமாக நியாயமான எந்த கோரிக்கையைத்தான் கர்நாடகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது!

நீங்கள் கேட்டவை – தராசு



• மறந்தவர்...
படம் : மீடியாராமு

● இ. கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி.

? ஹாலிவுட் தரம் என்றால் என்ன?

!அப்படி ஒன்றும் கிடையாது; அங்கும் படு குப்பைகள் உருவாகின்றன.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? நாடு முழுவதும் வாஜ்பாய் அரசுக்கு எதிராக, காங்கிரஸ் ரயில் மறியல் போராட்டம் நடத்தப் போகிறதாமே... இதனால் பெரிய அளவில் என்ன நன்மை கிடைத்து விடப் போகிறது?

! பயணிகளை அவதிப்படுத்தி சரக்கு களைத் தாமதப்படுத்துவதால் காங்கிரஸ் மீது மக்களின் அதிருப்திதான் புகையும். தவறான போராட்டம்.

● இல. வெங்கட்ராமன், சென்னை - 78.

? பிரச்னைப் பெண் என்று தெரிந்தும் மம்தாவுக்கு மந்திரிப் பதவி கொடுத்தது ஏன்..?

! பிரச்னைக்காரர்களைப் பக்கத்தில் வைத்துக் கொள்வதுதான் அறிவுடைமை என்பதால்தான்!

● எஸ்.ஆர்.ஸ்வாமி, திருநெல்வேலி-11.

? அப்பாவி மக்கள் வோட்டுப் போடவும் சாகவும்தானா...?

! சே, சே! அப்படியில்லையே! வரிகட்டவும் நிதிதரவும் செய்கிறோமே! மறந்து விட்டீர்களா!

● வீ. உதயகுமாரன், வீரன்வயல்.❐

? பகுத்தறிவு நாத்திகர்களுக்கு மட்டும் தான் சொந்தமா?

! இல்லை; அது மானுடத்துக்குச் சொந்தம். ஆத்திகர்களை முட்டாள்களாகச் சித்திரிக்கும் முயற்சியில், நாத்திகர்கள் பகுத்தறிவு வாதத்தைக் கையாண்டதால் அது அவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பது போன்ற மாயத் தோற்றம் ஏற்பட்டிருக்கிறது...

● கிருஷ்ண ராஜ்கோபால், சென்னை - 92.

? 'முதல்வர் எது செய்தாலும் அது துணிச்சல்' என்று குறிப்பிட்ட நண்பர் ஒருவரின் கேள்விக்கு உங்கள் பதில் (கல்கி 31.8.03) குறித்து... முதல்வரின் முயற்சிகளில் எதிலுமே 'நாளை நல்லது நடக்கும்' என்ற மனோபாவம் இல்லை என்கிறீரா சுவாமி...?

! மனோபாவம் இருந்தால் போதாது;

அது எல்லோருக்கும் உண்டு. மார்க்கம் சிறப்பாக அமைதல் வேண்டும். அதற்குத்தான் தலைவர் தேவை.

● **எம்.வி.ராணி, மதுரை-3.**

? நீளம் தாண்டலில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கமாமே...?

! அஞ்சுவைவிட நீளமாகத் தாண்டியவர் 'ஜெ'தான்! அடேயப்பா, இருபத்தைந்து லட்சம் பரிசாமே!

● **ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.**

? 'இந்தியாவில் பொது மக்களை தெய்வமாக நினைத்துப் பேசியது ஜெயலலிதாதான்' என்கிறாரே இன்பத்தமிழன்?

! 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அண்ணா சொன்னதை அ.தி.மு.க.வினர் மறக்கலாமா?


● **ஏ. சுகுமார், காட்டுக்கானூர்.**

? ஒரு பெண்ணைப் பார்த்து வாஜ்பாய் அரசு பயப்படுகிறது என்கிறாரே சோனியா?...

! ஒன்றல்ல; மூன்று என்கிறது டெல்லி அரசியல் வட்டாரம்!



• பதக்கப் பெண்!



• பரிசளிக்கும் பெண்!

● **என். சண்முகம், திருவண்ணாமலை.**

? உயர்கல்வி பெண்களுக்கு அடிப்படை உரிமை என்கிறாரே முதல்வர் ஜெயலலிதா...?

! அதென்ன பெண்களுக்கு அடிப்படை உரிமை? ஆண்கள் என்ன பாவம் செய்தார்களாம்!

● **பொன்விழி, அன்னூர்.** ✱

? 26 கோடி வசூல் செய்த கலைஞர், தமக்காக தீக்குளித்த குடும்பங்களுக்கு ஏதாவது உதவுவாரா...?

! தெரியாது. ஆனால் அப்படி உதவுவது அந்த மூடத்தனத்தை வளர்க்கவே உதவும் என்பது தெரியும்.

• மெகா வசூல்!



• பிரச்னைப் பெண்!

• பயமுறுத்தும் பெண்!

❑ ரூ.100/- பரிசு பெறுவர்:
வீ. உதயகுமாரன்,
ஜாம்புவானோடை அஞ்சல்,
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 614 738

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
பொன்விழி,
குமார் கல்யாண் ஸ்டோர், 24/25, கோவை ரோடு,
அன்னூர் - 641 653.

16.4.1990ஆம் ஆண்டு சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் 200 சதுர அடியில் ஆரம்பித்து, 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் **சென்னை, மைலாப்பூர் எண்.5, வடக்கு மாட வீதியில்** உள்ள கட்டிடத்தின் அடித் தளத்தில் சுமார் 2500 சதுர அடியில் ஷோரூமாக மாற்றி அமைக்கப்பட்டது என்பதை அதன் நிர்வாக பங்குதாரராக இருந்த **ஏ. சந்திரசேகரன்** ஆகிய நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஏ. சந்திரசேகரன்

தரம் நாணயம் நம்பிக்கை!

நான் எனது கடந்த கால அனுபவங்களைப் பற்றி கல்கி வாசகர்களாகிய உங்களிடம் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். 1972ம் ஆண்டு காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு ஷோரூமில் சாதாரண குமாஸ்தாவாக சேர்ந்து கடின உழைப்பு, நேர்மை ஆகியவற்றை மூலதனமாக நினைத்து படிப்படியாக ஏற்றமுற்று 1990ல் சென்னை **பி.எம். சில்க் சாரீஸ்**என்ற நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் என்று உயர்ந்து, 2002ம் ஆண்டு தீபாவளிக்கு பிறகு நிர்வாக பங்குதாரர் என்ற பொறுப்பிலிருந்து ஏற்றமுற்று உரிமையாளர் என்ற முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வுலகில் **கடின உழைப்பு, உண்மை, நேர்மை** ஆகிய மூன்றுக்கும் ஈடு இணை ஏதும் இல்லை என்பது எனது அனுபவபூர்வமான, நிலையான அழிக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

அதேபோல் நானும் எனது வியாபாரத்தில் **தரம், நாணயம், நம்பிக்கை** ஆகிய மூன்றையும் தாரக மந்திரமாக கொண்டு எனது வாடிக்கையாளர்களை திருப்தி அடைய செய்கிறேன். அந்த முறையில் வியாபாரம் செய்யும்பொழுது அதன் செலவுகள் குறைந்து (டி.வி., மிக பெரிய அளவில் பேனர்கள், கவர்ச்சிகரமான தள்ளுபடி மற்றும் குலுக்கல் முறையில் பரிசு பொருட்கள் ஆகிய செலவுகள்) விற்பனை செய்யும் சேலைகளின் விலை நியாயமாகவும், மக்கள் கடின உழைப்பின் மூலம் சம்பாதிக்கும் பணத்தில் எங்களிடம் வாங்கும் சேலைகளுக்கு தரத்துடன் உத்திரவாதமும் கொடுக்க முடிகிறது என்பதை **உறுதியுடன்** தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருமுறை எங்களது ஷோரூமிற்கு வருகை தந்து சேலை எடுத்தவர்கள் அதை உபயோகித்து **மனத் திருப்தி** அடைந்தவுடன் உறவினர்கள், நண்பர்கள் என்று அனைவரையும் எங்களுக்கு சிபாரிசு செய்வது என்பது எங்களது ஷோரூமின் தனிச் சிறப்பு. இதனால் எங்களின் வாடிக்கையாளர்களே விளம்பரமாக இருப்பதால் எங்களுக்கு செலவுகள் குறைந்து விலை குறைவாக விற்பனை செய்ய முடிகிறது என்பதை மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவநதி

தொலைக்காட்சித் தொடர்

பிரபஞ்சன்

காட்சி : 63

காலை / விடிகிறது, வெயில் புறப்படுகிற நேரம்.

பாத்திரங்கள்: கண்ணன், கீதா, கண்ணனின் அம்மா, கிராமத்து மனிதர்கள்.

இருள் பிரியும் நேரம். பஸ் நிற்கிறது கண்ணனும் கீதாவும் இறங்குகிறார்கள். பஸ் புறப்பட்டுப் போகிறது. அங்கிருந்து கிளை பிரிந்து ஊரை நோக்கிச் செல்லும் மணல், செம் மண் சாலை. இரு புறமும் கொஞ்சம் நெல், மாந்தோப்புகள், தென்னந்தோப்புகள், புஞ்சை வயல்கள்.

கண்ணன்: இந்த மண் சாலையிலேயே இரண்டு மைல் நடக்கணும் நீ.

கீதா: நடந்தா என்ன? நடந்துதான் புதுப்புது இடங்கள், மனிதர்களைப் பார்க்க முடியும். அனுபவம் வேற எப்படி வரும்?

கண்ணன்: அப்போ, நட...

(இருபுறமும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நடக்கிறான். கீதாவும்)

ஒரு காலத்தில் இதெல்லாம் காவிரிப் பாசனத்துல விளைஞ்ச பூமி. இப்போ, போர்வெல். மண்ணோட ஆத்மாவிலேந்து தண்ணீரைச் சுத்தமா உறிஞ்சுக்கிட்டு இருக்காங்க. அங்கேயும் தண்ணி இல்லை.

கீதா: அரசியல். தண்ணீர் அரசியல். சுப்ரீம் கோர்ட்டே தண்ணீர் விட உத்தரவு போடுது. அப்போ, மத்தியிலும் காங்கிரஸ் பிரதமர். மாநிலத்திலயும் காங்கிரஸ் முதலமைச்சர், தண்ணீர் வரலை. அரசியல். வோட்டு அரசியல்.

கண்ணன்: நாமா கோடு கிழிச்சுக்குவோம், நாமா ஆந்திரா, கன்னடம்னு மதில் வைச்சுக்குவோம். நதி நீரைக் கூட எங்க நதின்னு சொந்தம் கொண்டாடுவோம். நம்ம வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் மத்தியில உள்ள மதில் சுவரை இடின்னார் ஒரு கவிஞர். எங்கே போய்க்கிட்டு இருக்கோம்னு தெரியலை.

ஊருல எல்லா சாதியும் இருக்கு. ஆனா, சாதி தெரியாமதான் வாழ்ந்தோம். தேர்தல் வந்தது. அது வரும்போதெல்லாம் சாதிக் கலவரம். மாமன் மச்சான்னு வாழ்ந்தோம்.



இப்போ சாதிக்காரரா வாழுறோம். ஊருல, பெரும்பாலான வீடுகள்ல, பையன்கள் டவுன்ல. கிராமம் சிதைஞ்சு போச்சு.

(கண்ணன் நிற்கிறான். ஒரு மாந்தோப்பையும், அதன் பின் இருந்த வெளியையும் நோக்குகிறான்.)

வா.

(கீதாவிடம் சொல்லிவிட்டு அதை நோக்கி நடக்கிறான்.)

இந்த இடம், என் நண்பன் ஒருத்தனை உயிரோட எரிச்ச இடம்.

(திடுக்கிடுகிறாள் கீதா.)

மூர்த்தின்னு என் கூடப் படிச்சவன். என்னோட 'டிகிரி' படிச்சான். வேலைக்கு முயற்சி பண்ணிக்கிட்டு இருந்தான். அப்போ காதல். அந்தப் பெண், உயர் சாதி. விஷயம் கசிய ஆரம்பிச்சதும், என்கிட்டயும் சொல்லாமே, ஒரு நாள் அந்தப் பெண்ணை அழைச்சுக்கிட்டு மெட்ராசுக்குப் புறப்பட்டு இருக்கான். வழியிலேயே மாட்டிக்கிட்டான். மாங்கொல்லைக்கு மேற்கால, செங்கல் சூளை போட்டிருக்காங்க. அந்தச் சூளையில, அவனைப் போட்டு எரிச்சுட்டாங்க.

கீதா: ஐயையோ, அந்தப் பெண்?

கண்ணன்: அவளை வெட்டி கொள்ளிடத்துல மிதக்க விட்டாங்க.

கீதா: இன்னமுமா இப்படியெல்லாம் நடக்குது?

கண்ணன்: மந்திரிகள் பேசற மாதிரி பேசறே, கீதா. அந்தக் காலத்துல ராஜாக்கள், மந்திரியைப் பார்த்து, மாசம் மும்மாரி பொழிந்ததான்னு கேட்பாங்களாம். மூர்த்தி மாதிரி, அந்தப் பொண்ணு சரஸ்வதி மாதிரி தினமும் ஒரு கொலை எங்கெங்கோ நடந்துகிட்டே இருக்கு. வெளியே தெரியறது இல்லை. நம்ம 'மீடியாக்கள்' நகரத்தைச் சுத்துது. கிராமமே அவங்களுக்குத் தெரியாது. கமலுக்கும் சிம்ரனுக்கும் என்ன உறவுங்கிறதுதான் நம்ம 'மீடியாக்' கவலை.

கீதா: போலீசுக்குப் போகலையா, பிரச்னை?

கண்ணன்: பொதுவா, ஊர்ப் பிரச்னை, ஊருக்குள்ள தீர்ந்துடும். கொலைகள் கூட, பஞ்சாயத்துக்குள்ளேயே தீர்ந்துடும். ஊருல, சாதியை இந்த அமைப்பு காப்பாத்துது அதனால, இந்த மரத்தடி மேடை இன்னும் நீடிக்குது. போலீசை ஊருக்குள்ள விட்டா, அவங்க, மனுஷ மரியாதையைக் குலைச்சுடுவாங்க. பெரியவங்க, நல்லவங்க, பெண்கள், அயோக்கியர்கள்னு வித்தியாசம் தெரியாம நடந்துக்குவாங்க. அப்புறம் லஞ்சம்... மாமூல்.

கீதா: மாமூல் என்ன மொழி, கண்ணன்?

கண்ணன்: தெரியலை. போர்ச்சுகிசோ, உருதோ, தெரியலை. ஆனா, மாமூலைத் தமிழ் மயப்படுத்தியதில், நம்ம போலீசுக்குப் பெரும் பங்கு உண்டு. இன்னொரு நிகழ்ச்சியும் நடந்து போச்சு. இங்கேயிருந்து ஒரு பெண்ணை ஏதோ சாட்சிக்கோ, விசாரணைக்கோ போலீஸ்காரன் அழைச்சுக்கிட்டு போய், பலாத்காரமா நடந்துட்டான். அதிலே இருந்து, நாங்க, எங்க ஊர்க்காரங்க போலீஸ்டேஷனுக்கே போறதில்லை.

கீதா: கொடுமையா இருக்கு. மூர்த்திக்கு அம்மா அப்பா இருக்காங்களா, என்ன பண்றாங்க?

கண்ணன்: அப்பா இருக்காங்க. அம்மா இல்லை. விதவை



அக்கா, விவசாயக் கூலி. அது சம்பாத்தியத்துல, அப்பனுக்குச் சோறு போடுது. சின்னப் பொண்ணு, யாரோடையோ பட்டணம் போச்சுன்னு சொன்னாங்க. தகவல் தெரியலை.

இதா: பட்டணம் போச்சுன்னா?

கண்ணன்: ஓடிப் போறதைத்தான், ஊருல அப்படிச் சொல்வாங்க.

நடக்கக் கஷ்டமா இருக்கா, இதா...

இதா: இல்லை. கேக்க தான் கஷ்டமா இருக்கு. மனித உரிமைகள் பற்றி நிறைய பேசறோம். ஒரு பக்கம், மனிதத் தன்மை எவ்வளவு கேவலமா சீரழியுது?

கண்ணன்: எங்க அப்பாவுக்கு நிறைய சொத்து இருந்துச்சு, நண்பர்களுக்கு ஜாமீன் கையெழுத்துப் போட்டு, அதனால சொத்துகள் போச்சு. எனக்குச் சொத்து பற்றியெல்லாம் கவலை இல்லை இதா. என் தங்கையைக் கட்டிக்கிட்டவருக்கு நிறைய செஞ்சோம். கடைசியா, என் பேரில இருந்த சொத்தையும் கொடுத்தோம்...



(மௌனம்)

இதா: இப்போ, திருப்தியா இருக்காங்களா?

கண்ணன்: அதுதானே பிரச்னையே. சந்தோஷமா இருக்கத்தானே, இவ்வளவும். ஆனா, இன்னும் ஏதேனும் கிடைக்காதான்னு பார்க்கிறார் மாப்பிள்ளை. என்ன பண்ண? நிறையாத மனசுக்கு, எதைக் கொடுத்துதான் நிறையப் பண்றது? குடும்ப வாழ்க்கைக்கு அர்த்தமே தெரியலை. பெண்ணைக் கட்டிக் கொடுக்கிறதே, தண்டனை ஆயிடுச்சு.

இதா: கேலிக் கூத்தாயிடுச்சு, கல்யாணம் மாதிரி அமைப்பெல்லாம்.

கண்ணன்: கல்யாணம் மட்டும் அல்ல. எல்லா அமைப்புக்கும் இதுதான் விதி. அமைப்பை ஸ்தாபிப்பவர், சுய சிந்தனையாளரா இருப்பார். பின்னால வருபவர்கள், ஊசியைத் தொடர்கிற நூல் மாதிரி செயல்படுவாங்க. எல்லாம், சடங்காயிடும். ஒரு பெண் துறவிக்கு தன்னோட புத்தர் சிலைக்கு மட்டும் ஊதுபத்தி வாசனை போய்ச் சேரணும்னு ஆசை. தகரத்தில் ஒரு குழாய் பண்ணி மூக்குக்கும் பத்திக்கும் தொடர்பு பண்ணிட்டாளாம். என்னாச்சு? புத்தர் மூக்கும், முகமும் கரிஞ்சி, கறுப்பாகிப் போச்சி. எல்லா சிஷ்யர்களும், குரு முகத்தைக் கறுப்பாக்கிக்கிட்டிருக்காங்க.

''தேவேந்திரா! ஆபத்து! உடனடியாகத் தேவலோகத்தில் தடை விதிக்க வேண்டும்!''

''எதற்குத்தடை விதிக்கச் சொல்கிறீர்கள்?''

''அழகிய அசுரா, அழகிய அசுரா' பாடலுக்குத்தான்!''

— லீலா ஜெயபாண்டியன்

இதா: வீடு வந்தாச்சா?

(கண்ணன் சிரிக்கிறான்)

கண்ணன்: கண்ணகி சொன்னது ஞாபகத்துக்கு வருது.

இதா: எந்தக் கண்ணகி?

கண்ணன்: அருங்காட்சியகத்துல, இருட்டு மூலையில நிக்கிற கண்ணகிதான். காவிரிப்பூம்பட்டணத்தை விட்டு மதுரைக்குப் புறப்படறாங்க, அவள் கணவனும், இவளும். ஊரையே தாண்டலை. மதுரை வந்தாச்சான்னு கேட்டாளாம், இவ.

இதா: வீட்டு வாசல் தாண்டாமே வளர்கிற பெண், அப்படித்தான் இருப்பா. வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்-னு பெருமை அடிச்சுக்கிட்டா, அப்படித்தான் நேரும். கண்ணன், நான் அஞ்சு மைலுக்கு மேல நடந்திருக்கேன்னு நினைக்கிறேன். இவ்வளவு தூரம் நடந்து எனக்குப் பழக்கம் இல்லப்பா, அதான்.

கண்ணன்: இதோ, கூப்பிடற தூரம்தான். அந்த மெத்தை வீடு தெரியுதுல்ல, அது தான்.

இதா: கூப்பிடற தூரமா? ரெண்டு



பார்லாங் இருக்கும் போல இருக்கே.

(வீடு போய்ச் சேர்கிறார்கள். அம்மா, வாசலில் அரிசி புடைத்துக் கொண்டிருக் கிறாள். இவர்களைப் பார்த்ததும்)

அம்மா: வாடா, வாம்மா... வா. நீ வந்ததுல ரொம்ப சந்தோஷம்.

(முறத்தை வைத்து விட்டு எழுகிறாள்.)

காக்கா, காலையிலேந்து கத்திக்கிட்டே இருந்துச்சு. விருந்து வரும்னு நினைச்சேன். இரு. காபி போட்டுத் தர்றேன். குளிச்சிட்டு வாங்க. பலகாரம் பண்ணவா? ஒரேயடியா சாப்பாடே சாப்பிடறீங்களா?

கண்ணன்: எதுக்கும்மா சிரமம். சாப்பாடே பண்ணிடு.

அம்மா: சிரமம் என்னடா சிரமம்?



(அம்மா, காபி தம்ளர்களைக் கொண்டு வந்து கொடுக்கிறாள். இருவரும் வாங்கிக் குடிக்கிறார்கள்.)

அம்மா: ஏண்டா, இளைச்சுப் போயிட்டே?

கண்ணன்: இந்த 'அம்மாக்' கண்ணாடிக்கெல்லாம், உடம்பைக் குறைச்சுக் காட்டறது தான் வழக்கம். ஏம்மா, பாப்பாகிட்ட இருந்து ஏதாவது கடிதம் வந்துச்சா?

அம்மா: வந்துச்சு. புதுசா எதுவும் கேக்கலை. அவ புருஷன்.

கண்ணன்: பிள்ளையாருக்குக் கொழுக்கட்டை பண்ணுவோம். என்ன ஆச்சரியமா இருக்கு. *(அம்மா 'ப்ச்' என்றபடி நகர்கிறாள்.)*

கண்ணன்: நான் குளிச்சிட்டு வந்துடட்டுமா?

(போகிறான். காட்சி மாறுகிறது. சமையல் அறையில் அம்மாவுடன் சீதா, சமையல் வேலையில் இருக்கிறாள்.)

சீதா: நானே சொன்னேம்மா. அம்மா சொல்றபடி, கல்யாணம் பண்ணிக்கோயேன், கண்ணான்னு! சொல்றதைக் கேக்கறதே இல்லையே.

கண்ணன்: அவன் சுபாவமே அது தாம்மா. நீதான், அவன்கிட்ட பேசி ஒப்புதல் வாங்கணும்.

சீதா: நிச்சயமா...

கண்ணன்: *(வந்து கொண்டே)* என்ன நடக்குது., என்ன நிச்சயம்?

சீதா: அது எங்களுக்குள்ளே. ஏதோ அந்தரங்க விஷயம்.

கண்ணன்: இருக்கட்டும். எனக்குத் தெரியாமலா இருக்கப் போகுது. அம்மா... சுசிலா அக்காவுக்கு ஒரு ஏஜென்சி எடுக்கலாம்னு வந்திருக்கோம். ரொட்டி ஏஜென்சி.

அம்மா: அவசியம் பண்ணு. பாவம். தனியாயிட்டவ. ரொம்ப நல்ல பொண்ணு. அவ தலையில இப்படி அபகீர்த்தி – புருஷங்கற பேரில...


கண்ணன்: தனி என்னம்மா, தனி? நாம இல்லையா? யாருமே தனியும் இல்லை. அனாதையும் இல்லை, உலகத்துல. கடைசி மனுஷன்தான் அனாதை.

சாப்பிடுகிறார்கள்.

அம்மா: பத்து நாள் இருங்களேன். எனக்கு சந்தோஷமா இருக்கும்.

அவர்கள் மௌனமாக இருக்கிறார் கள்.

(தொடரும்)



நட, நட! அட, அட!

‘ஃபைவ் ஸ்டார்’ படம் மூலம் நல்ல பெயர் கிடைத்தாலும் அடுத்து பட வாய்ப்புக்களே இல்லாமல் ஒரு வருஷம் கஷ்டப் பட்டிருக்கிறார் பிரசன்னா.

“மொத்தம் பதின்மூன்று கதைகள் கேட்டேன். எதுவுமே பிடிக்கலை. ஆழ்வார்பேட்டையில் இருந்த பெரியம்மா வீட்டில்தான் சாப்பாடு, ஜாகை. கையிலிருந்த பணம் எல்லாம் காலி. திடீர்னு கோடம்பாக்கம் இயக்குனர் காலனியிலிருந்து கதை கேட்க வரும்படி அழைத்தார்கள். பஸ்ஸுக்குக் கூட காசில்லை. நடந்தே கோடம்பாக்கம் போனேன். வழியில் பார்க்கிறவர்கள் எல்லாம் “பாவம்யா பிரசன்னா, நடந்து போறார்!” என்றார்கள். கண்ணீர் முட்டியது. ஆனால் கலங்கவில்லை. நல்ல வேளையாக நான் அன்று நடந்து போய் கேட்ட கதை பிடித்திருந்தது. அதுதான் ‘காதல் டாட் காம்’ படமாக வெளிவர இருக்கிறது” என்று சொல்லும் பிரசன்னாவின் கையில் தற்போது ஒரு டஜன் படங்கள்.

நல்ல கதைகளுக்காகக் காத்திருந்தால் நடந்தே போய் கூட ஜெயித்து விடலாம் போலிருக்கிறதே!

– ஸ்ரீ



லூசியக்கா

எந்த மக்களுக்காக லூசி போராடி வருகிறாரோ, அந்த மக்களை இழிவாகப் பேசியதாக அவர் மீதே வழக்குப் போடப்பட்டிருக்கிற விசித்திரமும் நடந்திருக்கிறது.

திருவண்ணாமலையிலிருந்து அவலூர்ப்பேட்டைக்குக் கடைசி பஸ் இரவு ஒன்பதரை மணிக்கு. அதை விட்டு விட்டால், அப்புறம் நள்ளிரவு ஒன்றரை மணிக்கு தான். ஒன்பதரை மணி பஸ் போய் விட்டது. வேறு வழியில்லாமல் ஒன்றரை மணி பஸ்ஸுக்காகக் காத்திருந்தார் அந்தப் பெண்மணி. இரவு நேரம். பேருந்து நிலையத்தில் மிகக் குறைவாகவே மக்கள். ஒரு பெண்மணி தனியே நின்றால் தவறான எண்ணத்துடன் நோட்டமிடும் கண்கள்தான் எத்தனை? ஒன்றிரண்டு கிராமத்துப் பெண்கள் இருக்குமிடமாகப் பார்த்து, ஒன்றிக் கொள்ளும் அந்தப் பெண்மணி, ஒன்றரை மணி பஸ்ஸைப் பிடித்து அவலூர்ப் பேட்டைக்குச் செல்கிறார். வீட்டுக்கருகில் கொஞ்சம் நிறுத்துமாறு ஓட்டுநரைக் கேட்டுக் கொண்டால் அவரோ, "ஆமா... ராத்திரி திருவண்ணாமலையில் சுத்துது... இங்க மட்டும் ரொம்ப பயப்படற மாதிரி நடிக்குதே" என்று காதுபட அக்கினி அம்புகளை வீசுகிறார். கனத்த மனத்தோடு அந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு தெருக்களின் சோடியம் வேப்பர் வெளிச்சத்தில் வீட்டை வந்தடைகிறார் அந்தப் பெண்மணி. படுக்கையில் விழுந்து ஒரு மணி நேரம் கேவிக் கேவி அழுகிறார். "அந்த ஒரு மணி நேரம்தான். அதற்குப் பின் என் உள்ளத்தில் தைரியம் கிளர்ந்தெழும். இதற்கெல்லாம் பயந்து, ஒடுங்கி வீட்டுக்குள் இருந்தால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படிச் சேவை செய்வது? சமுதாய அநீதிகளுக்கு பலியாகும் பெண்களுக்கு, எப்படி வழிகாட்டுவது என்ற எண்ணங்கள் மேலோங்கி வந்து, என்னைச் செயல்பட வைக்கும்" என்று சொல்கிறார் ஆரோக்கிய மேரி லூசியா. சுருக்கமாக லூசி.



• லூசி

அவலூர்ப் பேட்டை மற்றும் சுத்துப் பட்டில் இருக்கும் ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயது வித்தியாசம் பாராமல் இவர் லூசியக்கா. பாதிக்கப்பட்ட பெண்கள் இரவு, பகல் என்று கால நேரம் பார்க்காமல் அவலூர் பேட்டையில் உள்ள இவரது வீட்டுக் கதவைத் தட்டுகிறார்கள். லூசியும், தமது ஆட்டோவில் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு உடனே செல்கிறார்.

லூசிக்குச் சொந்த ஊர் திருச்சி. அப்பா பிச்சை; அம்மா சேஷம்மா. பக்தி சிரத்தையான கத்தோலிக் குடும்பம். பத்து குழந்தைகளில் ஏழாவதாகப் பிறந்தார் லூசி. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, ஹோலி கிராஸில் பி.யு.சி. தேர்ந்தவருக்கு, நர்ஸ் ஆகும் ஆசை வந்தது. செவிலியர் பயிற்சியில் சேர்ந்து விட்டார். பத்துக் குழந்தைகளில் ஒன்று ஏசுவின் சேவையிலும் இருக்கட்டும் என்று லூசியை மரியின் ஊழியர் சபை என்ற அமைப்பில் சேர்த்து விட்டார் அப்பா. மதசேவை, மக்களுக்கு மருத்துவச் சேவை என்று, ஊர் ஊராகச் சென்று சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது லூசிக்கு. ராமநாதபுரம் மாவட்டம் சருகணியில் வேலை பார்த்தபோது தான் அந்தத் திருப்பம் நடந்தது.

"மத, ஜாதி, பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகளால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவதை அங்கு என்னால் பூரணமாய்

உணர முடிந்தது. பெரும்பாலான சமயங்களில் நியாயம் அந்த மக்கள் பக்கம் இருந்தும், அவர்களுக்கு நீதி கிடைக்காமல் அவதிப்படுவதை நினைத்து உள்ளம் கொதித்தது. இந்த மக்களுக்காக நாம் பாடுபட வேண்டும் என்று வைராக்கியம் மனத்தில் துளிர்த்தது. திட்டக்கோட்டை என்ற கிராமத்தில் மக்களுடன் கலந்து வாழத் துவங்கினேன்" என்று அந்த அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொண்டார் லூசி.

ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களின் குடும்பத்தில் ஒருத்தியாக இருந்து கொண்டு அவர்களுடன் வயல் வேலை, செங்கல் சூளை வேலை, என்று தினசரி பத்தரை மணி நேரம் கடுமையாக வேலை செய்தார் லூசி. சம்பளம் ஆறு ரூபாய். அவர்களைப் போலவே மண் தரையிலும், பாயிலும் படுத்துறங்கினார். அவர்கள் அழும்போது லூசியும் அழுதார். ஆனால் பெரும்பாலான சமயங்களில் அந்த மக்கள் அழும் சூழலே அங்கு நிலவியதைக் கண்டு மனம் நொந்தார். அந்த ஒன்றரை வருட வாழ்க்கை, அந்த மக்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள வழி செய்தது. "இவர் எதற்காக இந்த மக்கள் மத்தியில் வாழ வேண்டும் என்று சமூகம் அவரைக் கேள்விக் குறியுடன் பார்த்தது. "டேய்... அவ வெள்ளைத் தோலைப் பார்த்தால் வேற ஏதோ சாதி சனம் போலத் தெரியுதே" என்று சிலர் பேசுவார்களாம். ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு மரியின் ஊழியர் சபை லூசியை அவலூர்ப் பேட்டைக்கு அருகில் உள்ள மேக்களூர் என்ற கிராமத்திலிருந்த தனது மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தது.

"மேக்களூர் மருத்துவ மனையில் சேவை செய்யும் போதே, எனக்கு மதத்தின் மீதுள்ள பிடிப்பு விட்டுப் போய் விட்டது. மதமும், ஜாதியும் மனிதர்களை – குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை இன்னமும் அழுத்தி, அவர்களை முடக்கி விடுகிறது என்ற எண்ணம் வலுவாக உருவாகிவிட்டது. அந்தச் சமயத்தில்தான் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டிருந்தது. சமுதாய சேவை செய்ய விடுதலைச் சிறுத்தைகளுடன் என்னை இணைத்துக் கொண்டேன்" என்கிறார் லூசி.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தில்

அடேயப்பா! எம்மாம் பெருசு!


குருவாயூர் கிருஷ்ணன் கோயிலின் அவல் பாயசம் பிரசித்திப் பெற்றது. இதை 'வார்ப்பு' எனப்படும் வெண்கலப் பாத்திரத்தில் தயாரிக்கின்றனர்.

படத்தில் காணப்படும் வார்ப்பின் விட்டம் ஆறு அடி.

சேர்ந்த பிறகு பொன்னூர், குண்டுப்பட்டி, புகலூர் ஆகிய கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் ஜாதியினராலும், காவல் துறையினராலும் துன்புறுத்தப்பட்டபோது, அந்த மக்களுக்காகப் போராடினார் லூசி. கொஞ்சம், கொஞ்சமாக அந்த மக்கள் மத்தியில் லூசியின் பெயர் பிரபலமானது. ஒரு கட்டத்தில் தந்தை இறந்தபோது, தகவல் கூடத் தெரியாத நிலையில் சிறையிலிருந்தார் அவர். மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் அவர் ஈடுபட்டிருக்கும் போது, சட்டத்தின் துணையிருந்தால், இன்னமும் விழிப்புடன் செயலாற்ற முடியுமே என்ற ஆர்வம் பளிச்சிட, இரண்டு வருடம் பெங்களூர் சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானார் லூசி.

"விடுதலைச் சிறுத்தைகள் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தது எனக்கு உடன்பாடாக இல்லை. காரணம், அரசியல் கட்சிகள் இன்று நீர்த்துப் போய், சந்தர்ப்பவாதக் கூட்டணியில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றன. அவற்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவித விடிவு காலமும் உண்டாகாது என்பது எனது கணிப்பு. ஏழை எளிய மக்களுக்கு உண்மையான விடுதலை என்பது, அவர்களை விழிப்புணர்வு அடையச் செய்வதுதான். அதன் மூலம் அவர்களே விடுதலை தேடிக் கொள்வார்கள். எனவே, அதற்கு அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டுமென்றால் அவர்களுடனேயே இருந்து போராட வேண்டும். இந்தக் காரணங்களுக்காக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பிலிருந்து விடுபட்டு, மனித உரிமை இயக்கம்; உழைக்கும் பெண்கள் விடுதலை இயக்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட முடிவு செய்தேன்" என்கிறார் லூசி.

வரதட்சணைக் கொடுமை, பாலியல்



உயரம் இரண்டரை அடி. எடை 200கிலோவுக்கு மேல். அடுப்பில் ஏற்றி இறக்க என்றே வேலையாட்கள் உள்ளனர்.

அப்படிப்பட்ட வார்ப்புகள் சிறியது, பெரியது என பல அளவுகளில் குருவாயூர் கோயிலில் உள்ளன. இவற்றைத் தேய்த்துப் பராமரிக்க தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.

— இரா. செயபாலன்

பலாத்காரம் ஆகியவற்றால் பாதிக்கப்படும் பெண்களுக்கு நிவாரணம் கிடைக்க முன்னுரிமை கொடுக்கிறார் லூசி. பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான ஏழு பெண்களுக்காக இன்று நீதிமன்றங்களில் போராடிக் கொண்டிருக்கிறார். "கிராமப் புறங்களில் நடக்கும் இந்த வழக்குகள், போலிஸாரால் கட்டைப் பஞ்சாயத்து செய்யப்பட்டு அமுக்கப்படுகின்றன. இதற்கென்று சில தரகர்களும் கிராமப் புறங்களில் உண்டு" என்கிறார் லூசி. விவகாரங்களில் இவர் தலையை நுழைத்து நீதி கேட்டுப் போராட்டம் நடத்துவது, அதிகார வர்க்கத்தினருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது. அவர்களுக்குத் தரகு வேலை பார்க்கும் சிலர், "இரு....இரு... உன்னையே பலாத்காரம் செய்து கொலை செய்து விடுகிறோம்" என்று நேருக்கு நேரேயே மிரட்டுகிறார்களாம். காரணம், கட்டைப் பஞ்சாயத்து செய்ய முடியாததால் வரும்படி இல்லாமல் போய் விட்டதல்லவா!

எந்த மக்களுக்காக லூசி போராடி வருகிறாரோ, அந்த மக்களை இழிவாகப் பேசியதாக அவர் மீதே வழக்குப் போடப்பட்டிருக்கிற விசித்திரமும் நடந்திருக்கிறது. தமிழகத்தை உலுக்கிய ரீட்டாமேரி வழக்கில் லூசி துணிந்து இறங்கியதன் காரணமாகத்தான், அந்தப் பெண்ணுக்கு இறுதியில் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் கிடைத்தது. ஜெயிலில் (செஞ்சி) பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான அந்தப் பெண்ணுக்காக நீதி கிடைக்க நடந்த போராட்டத்தில் எனக்கு விடப்பட்ட மிரட்டல்கள்தான் எத்தனை?" என்று வியந்தபடி சொல்கிறார் லூசி. இரவு பதினொன்று முதல் ஒரு மணி வரை தொலைபேசி மிரட்டல்கள் வந்து கொண்டேயிருக்குமாம்.

லூசிக்கு சமூக சேவகர், வழக்கறிஞர் என்ற முகங்களைத் தவிர, மற்றொரு முகமும் உண்டு. அதுதான் பாம்புக்கடி வைத்தியர் என்ற முகம்! செவிலியராக இருந்த காரணத்தால், அலோபதி வைத்தியம் நன்றாகவே தெரியும் லூசிக்கு. ஆனால் பாம்புக்கடிக்கு மூலிகை வைத்தியம் பார்க்கிறார் லூசி.

இப்படிப் போராட்ட மயமான வாழ்க்கையின் காரணமாக, பெண்ணுக்கே உரிய இயல்பான வாழ்க்கைப் பாதை தடம் மாறி விட்டதில், வருத்தம் ஏதேனும் லூசிக்கு உண்டா?

நமது கேள்வியின் உட்பொருள் நன்றாகவே விளங்குகிறது லூசிக்கு. "அதற்காகக் கொஞ்சமும் வருத்தமில்லை" என்கிறார் புன்னகையுடன்.

"கல்யாணம், கணவர், குழந்தைகளோடு ஓர் இயல்பு வாழ்க்கையை ஏற்றுக் கொண்டிருந்தால், அந்த வாழ்க்கைக்கு என்னால் சரியாக நீதி செய்திருக்க முடியாது. எனவே இப்போது நான் தேர்ந்தெடுத்திருக்கும் இந்த நிலைதான், மக்களுக்காகப் போராடுவதற்கு ஏற்ற நிலை. இந்த வாழ்க்கையில் அன்றாடம் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. குடும்பம் என்றால், என் உயிரைப் பற்றிக் கவலைப்பட மற்ற ஜீவன்கள் இருக்கும். அவர்களுக்காக நான் வாழ வேண்டியிருக்கும். அதனால் என் போராட்டத் தீவிரம் கொஞ்சம் முனை மழுங்கிப் போகும். இப்போது நான் அதற்கெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை அல்லவா? களத்தில் மக்களுக்காக என் உயிர் போவதானால், போகட்டுமே" என்கிறார் இந்த வீராங்கனை.

— ப்ரியன்

அன்பின் ஊற்று —14

உள்ளம் நிரம்பட்டும்!

ஓர் அனற் கொழுந்து மேல் நோக்கிச் செல்வதற்கு, மேலே இடம் தேவை. அதைப் போல, வாழ்க்கையில் முன்னேற மனிதனுக்குக் குறிக்கோள் தேவை; பூசித்து வழிபட ஏதேனும் ஒன்று அவனுக்குத் தேவை. ஒன்றிய உணர்வுடன், அன்பு, பெருமை, மற்றும் மதிப்பு யாவும் வழிபாட்டில் சேர்ந்து வர வேண்டும்.

ஒன்றிப் போய்விடும் உணர்வு இல்லாத வழிபாடு, அல்லது ஒரு குறிக்கோள் சார்ந்த வழிபாடு சுயமதிப்பைத் தாழ்த்திவிடும். இதை நம் முன்னோர்கள் உணர்ந்திருந்தனர். எனவே, மக்கள் எதை வழிபடுகிறார்களோ, அதன் ஓர் அங்கமாகவே தம்மை உணர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். சூரியன், சந்திரன், மலைகள், நதிகள், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களை மக்கள் வழிபட அவர்கள் ஊக்குவித்தனர்.

வழிபாடு என்பது அன்பு மற்றும் பாராட்டு ஆகியவற்றின் உச்சநிலை. வன்மம் அல்லது பொறாமையாக அன்பு மாறுவதை வழிபாடு தடுக்கிறது. வாழ்க்கையில் எதையேனும் நீங்கள் போற்றாமலோ, பாராட்டாமலோ இருந்தால், எதிர்மறை உணர்வுகளால் உங்கள் உள்ளம் நிரம்பும். வழிபடவும், போற்றவும், ஒன்றுமே இல்லாதவன் நிச்சயம் சோர்வில் வீழ்வான்.

போற்றுதலும் வழிபாடும் இல்லாத வாழ்க்கை, சமுதாயத்தில் உணர்ச்சி வயப்பட்ட, மனம் சம்பந்தப்பட்ட, மற்றும் சமூக சார்பான பிரச்னைகளுக்கு வழி வகுக்கிறது. வாழ்க்கையில் பிடித்துக் கொள்ள உயர்வான எதுவும் உங்களிடம் இல்லை என்றால், சுயநலம், இறுமாப்பு மற்றும் வன்முறை ஆகியவை நிச்சயம் தொடரும். சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் போற்றுவதும், பெருமைப்படுத்துவதும் அழுத்தத்தை அகற்றி, அன்பையும் இரக்கத்தையும் வளர்க்கும்.

வழிபடுதல் ஒரு நாகரிகமற்ற, அறிவற்ற செயலாகச் சென்ற நூற்றாண்டில் கருதப்பட்டது. அது அடிமை மனப்பான்மையிலிருந்து எழுவதாகக் கருதப்பட்டது. அது உண்மையில் இவற்றிற்கு எதிரானது. நன்றியறிதல் மூலமாக மட்டுமே வழிபாடு நிகழ முடியும்; அடிமை மனப்பான்மையிலிருந்து அல்ல.

வழிபாடு என்பது உண்மையில் முதிர்ச்சியின் ஓர் அடையாளம்; பலவீனத்தின் அடையாளமல்ல.



வழிபாடு என்பது உச்சநிலை, அப்படி வழிபாட்டின் உச்சநிலையாக இருப்பது ஆன்மஞானம். அதாவது, சமாதி நிலை.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

குருஜி

ஆர்ட் அஃப் லிவிங் மூச்சுப் பயிற்சி முறையை நான் கற்றுக் கொண்டது எனது பாக்கியம் என்றே நினைக்கிறேன். என்னுடைய நெருக்கடி மிகுந்த அலுவலக வாழ்க்கையில் இதற்கு நேரம் ஒதுக்கி, பயிற்சியில் பங்கு கொள்ள முடிந்தது. இதன் காரணமாக உடலும், மனமும் புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றன. பரபரப்பு நிறைந்த சூழலில், உறுதியான, நியாயமான, புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க, இந்த பயிற்சிதான் எனக்கு உதவியது.







எல்லோருக்கும் இந்த வாழும் கலை மூச்சுப்பயிற்சி மிகுந்த பலன் தரும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. பயிற்சி வகுப்பை மிகச் சிறந்த முறையில் நடத்திய திருஸாஜிக்கு என்








நன்றி. இந்தப் பயிற்சி மூலம், உலகம் முழுக்க சமாதானத்தைப் பரப்பும் பணியைச் செய்து வரும் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்களுக்கு நானும், எனது நண்பர்களும் மிகுந்த கடமைப்பட்டிருக்கிறோம்.


-பி.கே. குஞ்ஞாலிக்குட்டி,
கேரள மாநில அமைச்சர்,
முஸ்லிம் லீக் தலைவர்



கலவரக் காயங்கள் மீது மறுபடியும் கல்லடியா?

அந்தக் கறுப்பு நாட்களின் காயம் ஆறி விட்டிருக்கிறது. ஆனால் வடு இன்னும் மறைய வில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லு கின்றன, போலீஸ் சோதனைச் சாவடிகள். கலவரங்களால் அதிகம் பாதிக்கப்பட்ட உக்கடம், செல்வபுரம், பெரியார்நகர், கோட்டை மேடு பகுதிகளில் இன்னும் அகற்றப்படாத சோதனைச் சாவடிகள், வெறிச்சோடி ஒட்டடை படிந்து கிடக்கின்றன. இந்தப் பகுதி களில் வாழும் மக்களின் முகங்களிலும் கூட கனமான சோகம் படிந்து கிடக்கிறது.

- உண்மை ரிப்போர்ட்



டவுன்ஹாலை ஒட்டிய கோட்டைமேடு, கலவர சமயத்தில் கசப்பான அனுபவங்களைச் சந்தித்த பகுதிகளில் ஒன்று. கோவையின் முதலாவது பள்ளி வாசல் கட்டப்பட்ட இடம். இங்கே வசிக்கும் இஸ்லாமிய மக்கள் பெரும்பாலும் சிறு வியாபாரிகளாக இருந்தவர்கள். கலவரத்துக்குப் பிறகு கோட்டை மேடு பகுதிக்குப் பொதுமக்களின் வரத்து குறைந்து போனதில், வியாபாரம் நொடித்துப் போய் பெரும்பாலானவர்கள் கூலித் தொழிலாளர்களாக மாறிவிட்டிருக்கிறார்கள்.



• கமிஷனர் சஞ்சய் அரோரா

''இனியொரு கலவரத்தைத் தாங்குகிற சக்தி எங்களுக்கு இல்லை. இங்கே வாழும் இஸ்லாமியர்களுக்கு உருது தெரியாது. அத்தனை குடும்பங்களும் தென்பாண்டியிலிருந்து வந்த தமிழ் மக்கள். கோட்டைமேடு பகுதியில் கலவரத்தில் ஈடுபட்டவர்கள், வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட கூலியாட்கள்'' என்கிறார் கோட்டை மேடு ஹிதாயத்துல் இஸ்லாம் ஷாபிஹிய்யா பள்ளி வாசல் ஜமா அத்தின் தலைவர் ஹாஜி எல்.எம்.அப்துல் ஜலீல்.

இவர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார், முந்நூறு ஆண்டு பழைமையான கோட்டை மேடு அருள் மிகு சங்கமேஸ்வரர் ஆலய அறங்காவலர் குழுவில் இடம் பெற்றிருக்கும் பி.முருகேசன்.

“புனித மைக்கேல் தேவாலயம் உள்ள புனித வின்சென்ட் சாலை, முருகன் ஆலயம் அமைந்திருக்கும் சுப்ரமண்யர் வீதி, பெருமாள் கோவில் வீதி, சங்கமேஸ்வரர் கோவில் கொண்டிருக்கும் ஈஸ்வரன் கோவில் வீதி, இத்தனை வீதிகளும் கோட்டை மேடில் உள்ளன. இந்த வீதியில் இஸ்லாமிய சகோதர்கள்தான் அதிகம் வசிக்கிறார்கள். அவ்வளவு ஏன்! சங்கமேஸ்வரர் கோவில் வாசலில் பூ, அர்ச்சனை தட்டு விற்று வரும் சமீரா, ஓர் இஸ்லாமியப் பெண்மணி” என்கிறார்.

இத்தனை ரணமான கலவரத்துக்கு இனி ஒரு போதும் கோவை மக்கள் இடம் தர மாட்டார்கள். ஆனால் அசோக் சிங்கால், மோடி,



• ஹாஜி எம்.எம்.அப்துல் ஜலீல்




• சங்கமேஸ்வரர் கோவிலில் பூ விற்கும் சமீரா

அத்வானி, தொகாடியா போன்ற தலைவர்கள் கோவைக்கு வருவதை நாங்கள் அடியோடு விரும்பவில்லை. நாங்கள் என்றால், இஸ்லாம் சகோதர்களையும் சேர்த்துத் தான் சொல்கிறோம். குறிப்பாக, இராம.கோபாலன் போன்றவர்கள் கோவையில்



• பி.முருகேசன்




• வி. நந்தகுமார்

வந்து முகாமிடு வது, மாநகரில் தேவையற்ற பதற்றத்தை ஏற் படுத்துகிறது. வடக்கேயிருந்து பி.ஜே.பி. தலை வர்களோ, சங் பரிவார் அமைப்புகளின் தலை வர்களோ கோவைக்கு வந்தால், இரண்டு நாள் பள்ளிகளுக்கு விடுமுறை விட்டுவிட வேண்டிய நிலை. இஸ்லாமியப் பெற்றோர் முன்னெச் சரிக்கை கைதுக்கு பயந்து, முப்பது வயதுக்குட் பட்ட தங்கள் மகன்களை, கேரளத்துக்கு அனுப்பி வைக்க வேண்டிய அவல நிலை இன்னும் நீடிக்கிறது" என்கிறார், நல்லுறவுக் கமிட்டியின் தலைவரான வழக்கறிஞர் வி. நந்த குமார்.

கோவை மாநகரக் காவல் துறை கமிஷனர் சஞ்சய் அரோரா என்ன சொல்கிறார்?

மாநகரை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். தேவையான பகுதிகளில் சோதனைச் சாவடிகள் மூலம் அவ்வப்போது 'சீல்' வைத்து கண்காணிக்கிறோம். வார்டு வாரியாக நல்லுறவுக் கமிட்டி மற்றும் கண்காணிப்புக் கமிட்டி முழுமையாகச் செயல்படுகிறது. அனைத்து ஜமாத்தைச் சேர்ந்தவர்களும் சிறந்த முறையில் ஒத்துழைப்பு தருகிறார்கள். ஒரே கவலை, தனிப்பட்ட காரணங்களுக்காக நடை



• கோட்டைமேடு பள்ளி வாசல்

பெறும் கொலைகளை கலவரத்தின் நீட்டிப் பாக்குவதற்கு விஷமிகள் முயல்கிறார்கள். இதை மீடியா தவறுதலாகப் புரிந்து கொண்டு செய்தியைத் தந்துவிடக் கூடாது" என்கிறார்.

கோவை காவல்துறையில் முன்பு தீவிரமாய் இருந்த 'கோஷ்டியிசம்' கலவரத்தை மேலும் தூண்டுவதாக இருந்தது. இனி கோவை காவல்துறையில் தனிப்பட்ட உணர்வுகளோடு செயல்படுகிறவர்கள் இருந்தால், அவர்களைக் கண்டுபிடித்து வேறு ஊர்களுக்கு அனுப்பி விட வேண்டும் என்றும் கோவை மக்கள் விண்ணப்பிக்கிறார்கள்.

— ஜெய்

படங்கள்:
டி.ஜி.சண்முகம்

ஆரம்பத்தான் கொழுப்பு!

வணக்கத்துக்குரிய வயிறே... 11

சுடச்சுட காரெட் ஹல்வா, அதற்குப் பக்கத்திலேயே ஜில் என்ற பிஸ்தா ஐஸ்க்ரீம். இரண்டையும் கலந்து சாப்பிடுவதுதான் ஃபேஷன். நெய் சொட்ட சொட்ட அவல் கேசரி, முறுகலாய் ஒரு மசால் தோசை, முந்திரி பக்கோடா, இது தவிர வழக்கமான விருந்து ஐட்டங்களும் உண்டு... அதில் ஒரு ஸ்பூன் இதில் ஒரு ஸ்பூன் என்று பார்த்துப் பார்த்து வைத்துக் கொண்டாலும் தட்டு நிரம்பி ஹவுஸ் ஃபுல் ஆகி விட்டது.

டாக்டர் எஸ். அஷோக்

என்ன செய்வது? தடபுடல் கல்யாண ரிசப்ஷன் டின்னர்! இப்போ போய், கொலஸ்ட்ரால், கலோரி என்று கணக்கு பார்க்க முடியுமா?

வசதியான டேபிளாகப் பார்த்து உட்கார்ந்து ஒரு கட்டு கட்டியாகி விட்டது. இனிமேல் ஜீராவாச்சு, ஜீரண உறுப்புகளாச்சு!

இரைப்பையில் கூட்டித் தள்ளப்பட்ட உணவுக் கூழ் முதலில் முன் சிறு குடலுக்குள் நுழைந்து தலை காட்டுகிறது. இங்கேதான் செரிமானமும் செரிக்கப்பட்ட உணவிலிருந்து சத்துப் பொருள்கள் உறிஞ்சப்படுவதும் நிகழ்கின்றன.

இந்த செரிமான நிகழ்ச்சிக்காகவென்றே, சில ஸ்பெஷலான செரிமான நீர்கள் குடலுக்குள் சுரக்கின்றன. ஆனால் மேலும் மேலும் கடினமான, கொழுப்புமிக்க பொருள்கள் ஒரேயடியாக வந்து விழும் போது, சாதா செரிமான நீர்கள் "ஸாரி ஸார், பியாண்ட் அவர் லிமிட்ஸ்" என்று காலை வாரி விட்டு விடுகின்றன.

'உடனே பித்த நீரை அனுப்பி வைக்கவும்' என்ற எக்ஸ்பிரஸ் தந்தி, கல்லீரலுக்கு அடிக்கப்படுகிறது. சிறுகுடலின் நரம்பு வழியாக இந்தச் செய்தி கிடைத்ததும், கல்லீரல் உடனே பித்த நீரை அனுப்பி வைக்கிறது.

இந்த பித்த நீர், சிறு குடலுக்குப் போய், அங்கே கொழுப்பை ஜீரணம் செய்கிற வேலையைச் செய்து முடித்து விட்டு, இரத்தக் குழாய் வழியாக மீண்டும் கல்லீரலுக்கே வந்து விடும்.

பித்தநீர் இல்லை என்றால் என்னவாகும்? கொழுப்பு அதிகமாகச் சேரும். உடல் இயக்கம் பாதிக்கப்படும்.

பித்த நீரின் பிரபாவம் இதுதான். ஆனால் பித்தப் பை? தேவையில்லை! பித்தப்பை ஓர் எக்ஸ்ட்ரா உறுப்புதான்.

உணவு செரிமானத்துக்கு, கல்லீரல் அனுப்பும் பித்த நீர் நேராகக் குடலுக்குச் சென்றாலே போதும்தான்! பித்தப்பை ஒரு சேமிப்புப் பை தான்!

நாம் சாப்பிடும் உணவில், கொழுப்புப் பொருள்கள் அதிகரிக்கும் போது, பல சமயங்களில் கற்களாக உருமாறி பித்தப்பையில் கற்கள் உருவாகிறது.

சில சமயம் 'ஸ்ட்ரெப்ட்டோ காக்கை' என்ற பாக்டீரியா, டைஃபாயிடு கிருமி போன்றவை பித்தப் பையைத் தாக்கி, பித்தக் கற்களை உண்டாக்கி விடும். பித்த நீர் முறையாக வெளியேற முடியாதபடி அடைப்பு ஏற்பட்டாலும், பித்த நீர் தேக்கம் ஏற்பட்டு, கற்கள் உண்டாகும்.



பித்தக் கற்கள்: பித்தக் கற்களின் பெரும்பகுதி 'மிக்ஸட் ஸ்டோன்ஸ்' களால் ஆனவைதான். கொலஸ்ட்ரால், கால்ஷியம் கார்பனேட், கால்ஷியம் பிலிருபினேட் போன்ற கற்களின்



கலவையாகத்தான் இருக்கின்றன.

பித்தக் கற்கள் ஏன், யாருக்கு ஏற்படுகின்றன?

* உடல் பருமனாக இருப்பவர்களுக்கு
* பரம்பரை காரணமாக
* கருத்தடை மாத்திரைகள் அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு
* செக்ஸ் ஹார்மோன்ஸ் மாற்றங்கள்
* இரத்த சோகை நோய் உள்ளவர்களுக்கு
* சிறுகுடல் பாதையில் ஏற்படும் வியாதிகள் காரணமாக...
* விரதம் இருப்பதால்...

"என்னது? விரதம் இருப்பது நல்லது தானே? பித்தக் கற்கள் தோன்றும் என்கிறீர்களே?" என்று நீங்கள் கேட்கலாம்.

வேளா வேளைக்குப் போதுமான உணவு கிடைக்காதபோது, பித்த நீர் அளவுக்கு அதிகமாகச் சுரந்து, கற்களாக உறைந்து விடும் அபாயம் இருக்கிறது. ரம்ஜான் போன்ற நோன்பு மாதங்களில் பித்தப்பை பிரச்னை ஏற்பட்டு, அட்மிட் ஆகும் நபர்களின் எண்ணிக்கை அதிகமாவது இதனால்தான். தீவிர டயட் இருக்கும் இளம் பெண்களுக்குப் பித்தப்பையில் கற்கள் உண்டாவதன் காரணமே பட்டினி ஃபேஷன் தான்!

பித்தக் கற்களின் அறிகுறிகள் என்ன?

விதவிதமான வலிகள் ஏற்பட்டு, மாரடைப்பு வலியோ என்று கூட பயம் ஏற்படும். மார்பு எலும்புக்கும் தொப்புளுக்கும் இடையே வலிக்கும். வயிற்றின் மேற்புறம் தோன்றும் வலி, முதுகுப் பக்கம் ஏறி, வலது தோள் பட்டையில் கடுப்பெடுக்கும். வாந்தியும் குமட்டலும் இருக்கும்.

ஒரு சிலருக்கு எள்ளின் முனையளவு கூட வலி இருக்காது. ஆனால் பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

ஆபரேஷன் மட்டும்தான் தீர்வா?

இல்லை. பித்தப்பை கற்களைக் கரைப்பதற்கென்றே மருந்துகள் உள்ளன. சில சமயம், பித்த நீர்ப் பைக்குள் அதிர்வலைகளைப் பாய்ச்சி, கற்களைப் பொடியாக்கி, மலத்துடன் வெளியேற்றி விடலாம். இம்முறை, கணையத்தில் வீக்கம் பித்தப்பையில் அழற்சி உள்ளவர்களுக்கும், கருவுற்ற பெண்களுக்கும் ஏற்றதன்று.


லேப்ரோஸ்கோப்பி எனப்படும் நுண்துளை அறுவை சிகிச்சை முறையில் பித்தக் கற்களை வலியின்றி, மிகச் சுலபமாக நீக்கி விடலாம். சில சமயம், குடல் ஒட்டுதல் அதிகம் இருந்தாலோ, பொது பித்த நாளத்தில் கட்டி, கல் இருந்தாலோ ஓப்பன் சர்ஜரி தேவைப்படலாம். பித்தப்பையைக் கற்களுடன் நீக்காவிட்டால் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

பித்தக் கற்கள் வராமலிருக்க என்ன செய்யணும்?

ரொம்ப ஸிம்பிள்! கொழுப்புக் கூடுதலாக உள்ள உணவைத் தவிர்க்க வேண்டும். பட்டினி, விரதம் என்று வயிற்றைக் காயப் போடாமல், வேளாவேளைக்கு மிதமான, நார்ச் சத்துள்ள உணவைச் சாப்பிட்டு, மிதமான உடற்பயிற்சி செய்து வந்தாலே கற்களுக்குக் கல்தா கொடுக்கலாம்.

குடிகாரர்களுக்கு உதவுவதற்கு என்றே செரிமான மண்டலத்தில் ஓர் உறுப்பு இருக்கிறது. அது பற்றி அடுத்த வாரம். அதுவரை காத்திருங்க.


• மதி



புக் பேங்க்



• நடனம்





என்ன பண்றது... அமைச்சரே சொல்லிட்டாரு! 'வாஸ்து'படி இப்படி இருந்தாத்தான் பதவி பிழைக்குமாம்!

'தினமணிடூன்' தமிழ் வாசகர்களுக்கு ஒரு புது வரவு. தினமணி தினத்தாளில் வந்த 'மதி'யின் கார்ட்டூன்களைத் தொகுத்து வெளியிட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு புது முயற்சி.

அட்டையிலேயே கொடிகட்டிப் பறக்கிறார் 'மதி'! யாரையும் புண் படுத்தாமல், எல்லோரும் ரசிக்கும்படி, பக்கத்துக்குப் பக்கம் ஜாலியாக வரைந்திருக்கிறார். ஆர்.கே. லக்ஷ்மணை நினைவு படுத்தும் ப்ரஷ் வீச்சு, மதியின் கிண்டலுக்கும்



கேலிக்கும் வலு சேர்க்கிறது.

சில கார்ட்டூன்களில் சென்னை சாலைகளின் லட்சணத்தை எப்படி 'குழி குழி'யென்று



அமைச்சர் சொல்றாரு, சென்னையில் 60% சாலைகள் சேதமாம்! மீதி 40% சாலைகள் எது எதுன்னு சொன்னா ரொம்ப நல்லா இருக்கும்!

குழிக்கிறார்!


குறிப்பாக ஜர்னலிசம் படிக்கும் எல்லா மாணவர்கள் கையிலும் வைத்திருக்க வேண்டிய புத்தகம்.

கிண்டலை ரசிக்கத் தெரியாத அரசியல்வாதிகளுக்கு, அன்பளிப்பாகச் (சொந்தக் காசு செலவு செய்து பழக்கமில்லாததால்!) கொடுத்து கார்ட்டூனை ரசிப்பதற்குப் பயிற்சி அளிக்கலாம்!

சமூகப் பிரக்ஞை மற்றும் அரசியல் ஆர்வமுள்ளவர்களுக்கு, இந்த 'மதி'டூன் ஒரு வெகு 'மதி'!

— ஓவியக் கலைஞர் 'நடனம்'

எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் (மதுரை) லிட், விலை. ரூ. 75/-





அவைகள் 'செக்' என்றே எனக்குத் தெரியாது! யாரோ ரசிகர்கள் சிலர் 'ஆட்டோகிராஃப்' கேட்கிறார்கள் என்று நினைத்துதான் கையெழுத்து போட்டேன்!

மெல்லினம்

13

மழை நீரின் ருசியை அனுபவித்திருப்பார்களா? கிணற்றுத் தண்ணீர். குழாய்த் தண்ணீர். லாரித் தண்ணீர். கேன் தண்ணீர். குடத்துத் தண்ணீர். பாக்கெட் தண்ணீர். ஒரு மழையை நேரடியாகப் பருகிப் பார்க்கும் ஆவல் யாருக்காவது வந்திருக்குமா? தனக்கு மட்டும் எப்படி இப்படியொரு ஆசை வந்தது?

ஆனால் அவனது சின்ன வாய்க்கு வெளியே மட்டும்தான் தூறல்கள் விழுந்தன. கன்னத்தில், உதட்டில், கண்ணில், நெற்றியில்.

பா. ராகவன்

உதட்டில் கூடப் படக் கூடாது. மிக நேரடியாகத் தொண்டையைத் தொட வேண்டும். முடியுமா?

''ம்ஹூம். அது கஷ்டம்'' என்றது பின்னால் இருந்து வந்த ஒரு குரல்.

சட்டென்று திரும்பிப் பார்த்தவன், அந்த மகாபலிபுரத்துக் குரங்கு தன் பின்னால் நின்று கொண்டிருக்கக் கண்டு சற்றே வியப்புற்றான்.

"நீ இன்னும் ஊருக்குப் போகலையா? போயிருப்பேன்னு நினைச்சேன்" என்றான் ஜக்கு.

"போகலை. என்ன அவசரம்?" என்றது அது.

"குரோம்பேட்டையிலெல்லாம் உனக்கு மத்த குரங்கு ஃப்ரெண்ட்ஸ் கிடைக்கறது கஷ்டம். பசங்க பார்த்தா கல்லடிப்பாங்க. கெட்ட பசங்க" என்று உண்மையான அக்கறையுடன் அவன் சொன்னான்.

"மத்தவங்களுக்காகவா நான் அவ்ளோ தூரம் ஒன் நாட் எயிட் பஸ் கூரை மேல ஏறி உக்காந்து வந்தேன்? உனக்காகத்தான் வந்தேன். நீ கல்லடிக்க மாட்டியோல்லியோ? அது போதும்" என்றது அது.

"நானா? சேச்சே!"

"தெரியும். நீ நல்ல ஆத்மா. அதனால தான் உம் பின்னாடி போகச் சொல்லி காட் என்னை அனுப்பினார்" என்றது அது.

அவன் ஒரு கணம் அதிர்ந்தான். 'நீ என்ன சொல்றே? 'காட்'ஆ உன்னை அனுப்பினது?''

"பின்னே? லார்ட் ஆஞ்சநேயா, எங்க பாஸ்" என்று பெருமையுடன் சொன்னது அந்தக் குரங்கு.

"ஓ" என்றான் ஜக்கு.

"அப்படின்னா என் பிராப்ளம் தெரிஞ்சு தான் நீ வந்திருக்கே. நான் என்னதான் பண்ணட்டும் சொல்லு. யார்கிட்டயும் சொல்லவும் முடியலை. நானே ஒளிச்சு வெச்சுக்கவும் கஷ்டமாயிருக்கு. அந்த நிர்மலா யாரு? எங்கப்பா அவளைக் கல்யாணம் பண்ணிண்டாரா? இல்லாட்டி ஏமாத்திட்டாரா? இது எனக்குத் தெரிஞ்சாகணும்."

"ஹூம்" என்றது அது. "ஸோ ஸாட்! நீ ஏன் இவ்ளோ வருத்திக்கறே? இப்ப உனக்கு என்ன குறை? உங்கப்பா ஆசையாத் தானே இருக்கார்? வீட்டுல ஒரு பிராப்ளமும் இல்லை. உங்கம்மா உன்னைத் தாங்கு



தாங்குன்னு தாங்கறா. தாத்தா, பாட்டியும் உம்மேல உசிரையே வெச்சிருக்காங்க. அந்த நிர்மலா போயே 'போயாச்சு. இனிமே அவ வரவே மாட்டா. விடு அதை'' என்றது குரங்கு.

"எங்க போயிட்டா? செத்துப் போயிட்டாளான்னே?''

குரங்கு ஒரு கணம் யோசித்தது. "ம்ஹூம். செத்துப் போகலை. ஆனா காணாமப் போயிட்டாள்னு வெச்சுக்கோயேன். இத்தனை வருஷமா உனக்கு அவளைத் தெரியாது. அந்த டைரியிலேருந்து தானே முளைச்சா? டைரியைத் தூக்கிப் போடு. அத்தோட அவளும் காணாமப் போயிடுவா.''

"அதெப்படி?'' என்றான் ஜக்கு. இவ உங்கப்பாவுக்குக் கல்யாணம் ஆறதுக்கு முன்னாடி இருந்தவதான். கல்யாணத்துக்கு அப்புறம் இவ கிடையவே கிடையாது. உங்கம்மா மட்டும்தான். அப்புறம் உங்கம்மாவும் நீயும் மட்டும் போதுமா? இதை மறந்துடாதே.''

"அதுவும் தானே எனக்குப் பிடிக்கலை? நிர்மலான்னு ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சுண்டு இருந்துட்டு, அப்பா எப்படி எங்கம்மாவைக் கல்யாணம் பண்ணிண்டார்? அதுவே எனக்குப் பிடிக்கலையே. அவளை நேர்ல பார்த்துப் பேசாம, என் மண்டையே வெடிச்சுடும் போல இருக்கு.''

"ஐயோடா!'' என்றது அது.

"அவளை எங்க போயிப் பாப்பே? அவ அமெரிக்கா போயிட்டாளே?''

"வாட்? அமெரிக்காவா? உனக்கெப்படி அது தெரியும்?''

"நீ அந்த டைரியை முழுக்கப் படிக்கலையா?'' என்று கேட்டது குரங்கு.

"ம்ம்ம்...படிச்சேன். சில பேஜஸ் புரியலை. இங்கிலீஷ்ல இருந்தது. அப்பா சேர்த்து சேர்த்து எழுதியிருக்கார்" என்றான் அவன்.

"அதான். முழுக்கப் படிக்காம இப்படிப் போட்டுக் குழப்பிண்டா என்ன அர்த்தம்? ஜக்கு! நீ ரொம்ப நல்ல பையன். என்னத்துக்காக இவ்ளோ கஷ்டப்படறியோ? விடுன்னாலும் விட முடியலைங்கற...ம்... சரி, நான் ஒண்ணு சொல்றேன். இன்னிக்கு ராத்திரி கரெக்டா பதினொண்ணே முக்காலுக்கு முழிச்சிண்டிரு. உன்னை ஒரு இடத்துக்குக் கூட்டிண்டு போறேன்."

"வாட்? பதினொண்ணே முக்காலுக்கா? அதெல்லாம் கஷ்டம். முடிஞ்சா இப்பவே அழைச்சுண்டு போ. எங்க போகப் போறே?" என்றான் அவன்.

"அந்த நிர்மலா வீட்டுக்குத்தான்" என்றது குரங்கு.

"நிர்மலா வீட்டுக்கா? அது எங்க இருக்கு?"

"இங்கதான். நாகப்பா நகர் தாண்டி லட்சுமிபுரம் போற வழியல. மேத்யு டாக்டர் கிளினிக்குக்குப் பின்னாடி."

"நிஜமாவா?" அவன் திடீரென்று பரபரப்படைந்திருந்தான்.

"ஆனா அவ அமெரிக்கா போயிட்டதா சொன்னியே?"

"அவ போனா என்ன? அவ வீடு இருக்கு. அவளோட தாத்தா, அங்கதான் இருக்கார். அப்பா இல்லை, செத்துப் போயிட்டார். அவம்மாவும் அங்கதான் இருக்கா."

"கரெக்ட். இந்த டீடெயில்கூட டைரில இருந்தமாதிரிதான் இருக்கு. இங்கிலீஷ்ல இருந்தது. பாதி புரிஞ்சது" என்றான் ஜக்கு.

"போவோமா? உங்கம்மா தேட மாட்டாளே?"

"இல்லை. போகலாம். அரை மணி லேட்டானாவெல்லாம் அம்மா தேட மாட்டா. மழைக்கு எங்கியாவது நின்னிருப்பேன்னு நினைப்பா" என்றான். வருவது மாதிரி இருந்து சட்டென்று வராமல் போய்விட்ட மழை. இப்போது நிஜமாகவே வந்தால் எத்தனை நன்றாக இருக்கும்!

அவன் தோளிலிருந்து முன்னால் குதித்து ஓடத் தொடங்கியது குரங்கு. அதனைப் பின் தொடர்ந்து அவனும் ஓடினான்.

சீப்பா, சிங்கிள் டீ!

தமிழ்நாட்டில் ஊருக்கு ஊர், கடைக்குக் கடை தேநீரின் விலையில் வித்தியாசம் இருந்தாலும் சிறிய, பெரிய நகரங்களில் பொதுவாக டீயின் விலை இரண்டு ரூபாய்தான்.

ஆனால் விருத்தாசலம் கடைவீதி, மகளிர் காவல் நிலையம் எதிரில் உள்ள டீக்கடையில் டீயின் விலை ஒரு ரூபாய்தான்.

கடை உரிமையாளர் ஆலிச்சிக்குடி கிராமத்தைச் சேர்ந்த என். பழனிவேலுவிடம்,

மூச்சிரைக்க சந்துகளுள் நுழைந்து ஓடி, ரைஸ்மில் சரிவில் கார் ஓட்டும் பாவனையில் டுர்ர்ர்... என்று இறங்கி, சங்கத்து ஸ்கூல் தெருவில் நுழைந்து கிரவுண்டுக்குப் பின்னால் போய் நின்றான் ஜக்கு.

"அதோ அந்த வீடுதான்."

பச்சை சுண்ணாம்பு அடித்து, வாசலில் ஸ்வஸ்திக் கோலம் போட்டிருந்த வீட்டின் சுவரில், 'பரசுராமன்' என்கிற பெயர்க் கல் இருந்தது.

ஜக்கு ஒரு கணம் தயங்கினான். பின்னால் திரும்பிப் பார்த்தான். பத்தடி தூரத்திலேயே குரங்கு நின்றுவிட்டிருந்தது. அங்கிருந்தே "உள்ளே போயி விசாரி" என்று சைகை காட்டியது.

"என்னன்னு கேக்கறது?"

"மக்கு. டைரில படிச்சிருப்பியே? அவ தாத்தா ஜாதகப் பொருத்தம் எல்லாம் பார்ப்பார்னு? அதை வெச்சுண்டு பேசு. எங்கம்மா பாக்க வரணும்னு சொன்னா, எப்ப வரலாம்னு கேட்டு, கேட்டுண்டு வரச் சொன்னான்னு ஏதாவது சொல்லு" அவசரப் படுத்தியது குரங்கு.

அடக் கடவுளே! ஜாதகப் பொருத்தமா! தன் வீட்டில் யாருக்கு ஜாதகம் பார்க்க வேண்டியிருக்கிறது? தாத்தாவுக்கா! குபீரென்று சிரிப்பு வந்துவிட்டது அவனுக்கு.

ஒரு முடிவுக்கு அவன் வரும் முன்னரே வீட்டு வாசலில் ஒரு முதியவர் உதித்து "யாருப்பா?" என்று கேட்டார்.

மனம் முடிவு செய்வதற்குள் உதடு திறந்துவிட்டது. "நிர்மலா ஆண்ட்டி இருக்காங்களா?"

"இல்லியே? நீ ஆரு?" என்றவர் உள்ளே திரும்பி, "இவளே, லெச்சுமீ..." என்று குரல் கொடுத்தார்.

"உள்ள வாப்பா" என்று அவனுக்கும்

''எப்படி கட்டுப்படியாகிறது?'' என்று கேட்டால், ''டீ இருபத்தைந்து பைசா விற்றபோது கடைக்கு வந்தேன். இருபத்தைந்து வருடமா கடை நடத்தறேன். எனக்குக் கட்டுபடியாகிறது. என்ன, லாபம் குறைவா கிடைக்கும்'' என்றார்.

''டீயின் விலை ஒரு ரூபாய் என போர்டு கூட வைக்கவில்லையே'' என்றால்

''அது வேண்டாங்க. தெரிஞ்சவங்களும், மற்றவங்களும் வந்து குடிக்கிறாங்க. விளம்பரம் எதுக்குங்க?'' என்கிறார்.

டீ குடித்தோம். மூன்று குணமும் கொண்டு ருசித்தது!

- புவனகிரி இரா. செயபாலன்



உத்தரவு கொடுத்துவிட்டு, கதவைத் திறந்தார்.

''என்ன வேணும்? நீ யாரு?'' அதே கேள்வி மீண்டும் வந்தது.

எதற்கு வந்தோம், என்ன பேசுவது என்று முன் தீர்மானம் ஏதும் பண்ணிக் கொள்ளாததால் அவனுக்கு வியர்த்துவிட்டது. பாழாய்ப்போன குரங்கு இப்படியொரு இக்கட்டில் கொண்டுவந்து நிறுத்தி விட்டதே! 'ஆஞ்சநேயா, நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று நினைத்துக் கொண்டு, மனம் போன போக்கில் பேசத் தொடங்கினான்.

அவனது அம்மாவும் நிர்மலா ஆன்டியும் ரொம்ப வருஷத்து ஃப்ரெண்ட்ஸ். நிர்மலா ஆன்ட்டியின் தாத்தா ஜாதகம் பார்ப்பாராமே? அவன் அம்மாவின் இன்னொரு ஃப்ரெண்டுக்கு அவரிடம் ஜாதகம் பார்க்க வேண்டும். எப்போ வரலாம் என்று கேட்டு அனுப்பியிருக்கிறாள்.

''அப்படியா? நீங்க எங்க இருக்கீங்க? உங்கம்மா பேர் என்ன?'' என்றார் அந்த முதியவர்.

ஒருகணம் யோசித்தவன், எதற்கும் இருக்கட்டும் என்று ''ராதா நகர்'' என்று பொய் சொன்னான். கவனமாக அம்மா பேரைச் சொல்லாமல் தவிர்த்தான்.

''அட பகவானே! இதுக்காகவா குழந்தையை ரயில்வே லைன் கிராஸ் பண்ணிப் போக அனுப்பியிருக்கா உங்கம்மா? ஈஸ்வரா, ஈஸ்வரா. எப்போ வேணா வரலாம்னு சொல்லு. போறச்சே ஜாக்கிரதையா போ. ரோடுலே இடது பக்கம்தான் போகணும். ஓரமா போகணும். தெரியுமோல்லியோ?''

எத்தனை அக்கறை! ஜக்குவுக்குக் கொஞ்சம் அவமானமாக இருந்தது. ஒரு பெரியவரை இப்படிப் பொய் சொல்லி ஏமாற்றும் அளவுக்குத் தான் கெட்ட பையன் ஆகிவிட்டோம்! அப்படிப் பொய் சொல்லியாவது இந்த வீட்டுக்கு வந்து என்ன சாதிக்கப் போகிறோம்? எதற்காக இங்கே வந்தேன்.'

''சரி சார். நான் வரேன்'' என்று கிளம்பினான். எதற்கும் இருக்கட்டும் என்று ''நிர்மலா ஆன்ட்டி இல்லையா?'' என்றான்.

''அவ அமெரிக்கா போய் ஆச்சே பதினாலு வருஷம்? உங்கம்மா சொல்லலியா?''

அவன் பேசாதிருந்தான். ஆகவே அவரே, ''என்னைத்தானே பாக்கணும்னு சொன்னா? அதனால இதைச் சொல்லாம விட்டிருப்பாளாயிருக்கும். நீ ஜாக்கிரதையா ரோடு கிராஸ் பண்ணிப் போ. போகத் தெரியுமோல்லியோ?''

''தெரியும் சார்'' என்று வாசலுக்கு வந்தவன், என்னவோ பார்க்கத் தவறியது போல் மீண்டும் உள்ளே எட்டிப் பார்த்தான்.

ஒன்றும் ஆர்வத்துக்குத் தீனியாகத் தென்படவில்லை.

''கேட்டேனே? உங்கம்மா பேர் என்ன? முன்னாடி இங்க வந்திருக்காளாமா? உங்கப்பா யாரு?'' பெரியவர் விடாமல் விசாரித்துக் கொண்டிருந்தார்.

சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை உண்டானது. அப்பா பெயரைச் சொல்லலாமா? சொன்னால் இந்தக் கிழவரின் முகபாவத்தில் ஏதாவது மாறுதல் தென்படுமா?

''வேண்டாம்'' பின்னாலிருந்து உறுமலாக அடக்கிய குரல் கேட்டது. குரங்குதான்.

''வரேன் சார்'' பதில் எதிர்பார்க்காமல் திரும்பி ஓடியே போனான்.

(தொடரும்)

பழ மொந்தை



அறுபது கிலோமீட்டருக்கு
அப்பாலேயிருக்கும்
ஒகேனக்கல்லுக்கு
ஆடி தோறும்
கால் நடையாய்
முழுகப் போவாராம்
தாத்தா.

மனோகரா பார்க்க
கூட்டாஞ்சோறோடு கிளம்பி
குரங்குகளிடம் பறி கொடுத்து
பசியோடு
திரும்பி வந்தாராம்
பாட்டி.

கல்லூரிக்கு அப்புறந்தான்
காற் சட்டையே
மாட்டினாராம்
அப்பா.

மாமா வாங்கிய
மிதி வண்டியை
கூடி நின்று
வேடிக்கை பார்க்குமாம்
ஊர்.

கோவணத்திலிருந்து
காற்சட்டை வரை...
கட்டை வண்டி தொடங்கி
கார்கள் வரை...

காலத்தின் சக்கரத்தில்...
விஞ்ஞான வாகனத்தில்...
உலகே விந்தையாய்
வகை மாறிவிட,

யோசித்துப் பார்க்கையில்
மாறாது கிடப்பது
அன்றிலிருந்து இன்றுவரை
அடைகாத்து வரும் - இந்த
அரைப்பட்டினி மட்டுந்தான்.

சி.பாவெல்

தீபாவளி கொண்டாடுங்க! பரிசு தட்டுங்க!

சந்தாதாரர் ஸ்பெஷல்!

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு தீபாவளியன்றும் கல்கி வாசகர்களின் இல்லங்களில் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கி வருகிறது **கல்கி தீபாவளி மலர்.**

இந்த ஆண்டு கல்கி சந்தாதாரரின் மகிழ்ச்சி மும்மடங்காகும்!

காரணம், ஓராண்டுச் சந்தா ரூ 330 செலுத்தினால் ரூ 80 பெறுமானமுள்ள **கல்கி தீபாவளி மலர்** பரிசாக உங்கள் வீடு தேடி வரும்!

கல்கி தீபாவளி மலர் குறைந்த எண்ணிக்கையிலேயே சந்தாதாரருக்கு ஒதுக்கப்படுவதால், ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனடியாகச் செயல்படவும்.

ஏற்கெனவே எமது நேரடி சந்தாதாரராக இருப்போரும் ஓராண்டுச் சந்தா அனுப்பி தங்கள் சந்தாவை நீடிக்கச் செய்து பரிசைப் பெறலாம். சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

முழு விலாசத்தையும் தெளிவாக எழுதவும்.

முடிவு தேதி **அக்டோபர் 10, 2003** முடிவு தேதியை ஒத்திப் போட இயலாது.

'கல்கி' என்ற பெயருக்கு சந்தாத் தொகையை DD, MO அல்லது cheque மூலம் அனுப்பலாம். வெளியூர் cheques ஏற்பதற்கில்லை.

சந்தாத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி காரியாலயம்,
47- NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097



ஒவ்வொரு சொட்டுக்கும் 1400 ஆண்டு!

அப்பாடா! புகை வண்டி, பேருந்து, அல்லது கப்பலில் தண்ணீர் கொண்டு வரும் செலவினங்கள் இன்றி, இன்னொரு கோடையைக் கடந்து வந்தாகி விட்டது. இந்தப் பழைய யுக்திகள் கஜானாவையும் பொறுமையையும் சோதிக்கும் என்பதால்தான் மழை நீர் அறுவடைக்கு மாறிவிட்டோம் போலும்!

'ரயில் நிலையங்கள் கூட மழை நீர் அறுவடை வசதிகள் ஏற்படுத்த வேண்டும்' என்று ஆலோசனை தெரிவித்து ஏ.கே. மூர்த்திக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் சென்னை - 28ஐச் சேர்ந்த சேதுராமன். அகன்ற நிலப்பரப்பு கொண்ட ரயில் நிலயங்கள் இதைச் செய்தால், ரயில்வேயின் தேவை பூர்த்தியாவதுடன் அக்கம் பக்க பகுதிகளின் நிலத்தடிநீர் அளவு மேம்படும் என்கிறார்.

சென்னையில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டும் அல்ல...உலகெங்கும் தண்ணீர் வீணாவதும் இயற்கை நீர் நிலைகள் வளம் குன்றிப் போவதும் அதிகரித்து வருகிறது.


நைல் நதி மெடிடரேனியன் கடலில் கொண்டு சேர்க்கும் நீரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக, சீனாவின் மஞ்சள் நதி வருடத்தில் சராசரியாக எழுபது நாட்கள்



• பங்காரு அடிகளார்



• குன்றக்குடி அடிகளார்



• சுபாஷண் ரெட்டி

வற்றிப் போய்க் கிடக்கிறது. (1996ஆம் ஆண்டில் மூன்று மாதங்களும், அதன் பிறகு ஓர் ஆண்டில் 226 நாட்களும் வற்றிக் கிடந்தது)

1850ல், உலகில் ஒவ்வொரு நபருக்கும் ஆண்டுதோறும் சராசரியாக 33,300 கியூபிக் மீட்டர் தண்ணீர் கிடைத்து வந்தது. 1993ல் இது 8500 கியூபிக் மீட்டராகக் குறைந்து விட்டது.

நிலத்தடி நீரை நாம் உறிஞ்சி எடுக்கிறோம் அல்லவா...? சக்தி வாய்ந்த மோட்டார் பம்புகள் கொண்டு உறிஞ்சப்படும் நீர், தன்னை முற்றிலும் புதுப்பித்து உற்பத்தி செய்து கொள்ள 1400 ஆண்டுகள் ஆகுமாம்!

அடுத்து வரும் எத்தனை தலைமுறைகளுக்கு நாம் அநீதி இழைக்கிறோம் என்று சிந்தித்தால், ரயில் நிலையம் என்ன... விமான நிலையம், விண்ணூர்தி தளம் என்று ஒரு இடம் விடாமல் மழைநீர் அறுவடைக்கு முனைய வேண்டியதுதான்.

சுமி பல்பொருள் அங்காடி



இதற்கு மேலும் எழுதினால் சுமியை சஹாரா பாலைவனத்துக்கு மாற்றிவிட நீங்கள் கல்கி ஆசிரியருக்கு மனு அனுப்புவீர்கள்!

இந்த வாரம் இரு நீதிபதிகள் இருவிதமான அறிவுரைகள் தந்துள்ளனர். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேரில் உள்ள அவதூறு வழக்கை வாபஸ் பெறும்படி தமிழக அரசுக்கு நீதிபதி கனகராஜ் அறிவுரை, சிறுமலஞ்சி கோயிலில் பலியிட்டு படையல் நடத்தத் தடை செய்யக் கூடாது என்று செந்தில்வேல் நாடார் விண்ணப்பிக்க, சைவ உணவு சமைத்துப் படைக்கும்படி நீதிபதி சுபாஷண் ரெட்டி அறிவுரை.

நீதிபதி சொன்னபடி நாடார் கேட்பாரா தெரியாது. ஆனால் இது விஷயமாக ஒரு சிலர் சொல் அம்பலம் ஏறும் வாய்ப்பு அதிகம்: லட்சோப லட்சம் கிராம மக்களைக் கவர்ந்துள்ள பங்காரு அடிகளார்; கிராம மேம்பாட்டுக்காகவே பாடு படுகின்ற குன்றக்குடி அடிகளார்..

வழிபாடு, வாழ்க்கை முறை போதனைகளை அரசு அல்லது நீதிமன்றங்களைக் காட்டிலும் இத்தகு குருமார்களிடமிருந்து ஏற்கத் தயாராயிருப்பார்கள் மக்கள்.

ஏற்கெனவே நேர்ந்து கொண்ட கடன்களைக் கூட வேறு வழிகளில் நிறைவேற்றி 'தெய்வ குற்றம்' விளையாமல் தவிர்க்கலாம் என இவர்கள் அருளுரை கூறினால் அம்பலம் ஏறும். இயக்கம் நடத்தினாலோ பிரச்னையே தீரும்!

இரு குழந்தைகளின் படத்தை வெளியிட்டு, 'எங்கள் தத்து மையத்தின் பாதுகாப்பில் உள்ள இக் குழந்தைகளின் பெற்றோர் உரிய சான்றுடன் பத்து நாட்களுக்குள் வந்தால், அவர்களிடம் குழந்தைகளை ஒப்படைப்போம்' என்று அரசாங்க குழந்தைகள் காப்பகம் அறிவிப்புச் செய்துள்ளது.

நான்கு - ஐந்து வயதுக் குழந்தைகளின் களங்கமற்ற முகத்தைப் பார்க்க வேதனையாயிருக்கிறது. எதனால் பெற்றோர் கைவிடுகிறார்கள்?... புதிர்தான்!

இதைக் காட்டிலும் புரியாத புதிர், இறந்து போன குடும்ப உறுப்பினர்களின் படங்களை, பல ஆண்டுகள் கழித்தும் அவர்கள் நினைவு தினத்தன்று செய்தித்தாளில் விளம்பரமாக வெளியிட்டு அஞ்சலி செலுத்துவது. நம் நண்பர்கள் அல்லது உறவினர்களை நாம் மறவாமலிருப்பது முக்கியம். ஆனால் நாம் மறக்கவில்லை என்று ஊரறிய பிரகடனப்படுத்த வேண்டுமா?... இந்த வெளிப்பாடின் பின் உள்ள மனோதத்துவம் குறித்து மன்ற உறுப்பினர் / உறுப்பினர் அல்லாதார் கருத்து அறிய ஆவல்.

— சுமி





ஜாதகத்தை எடுத்துக்கொண்டு ஓட வேண்டாம்!

சந்திரசேகர ஷர்மா



• களை கட்டிய கச்சேரி...

ஆறு மணிக்கு நிகழ்ச்சி தொடங்க வேண்டும்... தலைமை வகிக்க வைஜயந்தி மாலா பாலி வந்தாயிற்று. நாலேமுக் காலுக்கு மேடையை அலங்கரிக்க ஆரம்பித்தபோதே, முடிச்சு முடிச்சாக பாரதிய வித்யா பவன் அரங்குக்குள் நுழைய ஆரம்பித்த மக்கள் கூட்டம், அரங்கை கிட்டத்தட்ட நிறைத்தும் ஆயிற்று. அமரர் கல்கி பிறந்த நாள் விழாவை (9.9.2003) ஏற்பாடு செய்திருந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை நிர்வாகிகள் மட்டும் வழி மேல் விழி வைத்து வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்... மணி 5.55. நிகழ்ச்சியில் கல்கி விருது பெறவிருந்த கடம் கார்த்திக் இன்னும் வரவில்லை!

"காயத்ரி வேங்கடராகவன் அப்பவே வந்தாச்சு. இரண்டு தம்பூரா..." – விருது பெற விருந்த மற்றொரு கலைஞர் காயத்ரி,



• பார்வையாளர்கள்...

இரட்டைத் தம்பூராவில் சுருதி சேர்த்துத் தயார் நிலையில் இருந்தார். அவரது இரண்டு குழந்தைகளும் உறவினர் பொறுப்பில் கப்சிப் என்று உட்கார்ந்திருக்க, கணவர், கண் டாக்டர் வேங்கடராகவன் காயத்ரிக்குக் கடைசி நிமிஷ வாழ்த்துச் சொல்ல விரைந்தார்.

"கார்த்திக்...?"

கேள்வி முடியும் முன் அம்பாசிடர் வந்து நிற்கிறது. அதனுள்ளிருந்து நெல்லிக் காய் மூட்டை அவிழ்த்தது போல் ஒரு குடும்பம் வெளியேறுகிறது. நடு நாயகமாக, வேட்டியைப் பஞ்சகச்சமாக உடுத்திய ஒரு குட்டி உருவம் – விக்கு வினாயக்ராம்! அவர் பக்கத்திலேயே அவரைப் போல் இரண்டு மடங்கு உயரத்தில் இன்னொரு பஞ்சகச்சக்காரர்– கார்த்திக்! பளிச் பளிச் சென்று அந்தக் காட்சி காமெராவுக்குள் பதிவாக, குருவின் குடும்பத்தினரை அமரச் செய்து



• வைஜயந்தி மாலாவுக்கு கல்கி விநாயகர் அன்பளிப்பு தருகிறார் ஆனந்தி



• காயத்ரி கார்த்திக்

விட்டு மேடைக்குச் செல்கிறார் கார்த்திக்.

"ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
பராசக்தி, ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்..."

– சந்திரசேகர ஷர்மா பாரதியார் பாடலை இறைவணக்கமாகப் பாடுகிறான். சிறுவனின் பைஜாமா ஜிப்பாதான் கொஞ்சம் அளவில் பெரிசென்று பார்த்தால், பாட்டும் வயதுக்கு மிஞ்சிய துல்லியம்தான்!

ஷர்மா, விஜய் சிவாவின் சிஷ்யர் என்று அறிவித்து 'பார்த்திபன் கனவு' நூலை நினைவுப் பரிசாகத் தருகிறார்கள்.

'வாழ்க்கை' திரைப்படத்தில் வைஜயந்திமாலாவின் தமிழ் சினிமா பிரவேசத்தை அழகாக வர்ணிக்கும் அமரர் கல்கியின் விமர்சன வரிகளைப் படித்து வரவேற்புச் சொல்கிறார் கல்கி ராஜேந்திரன். "கலைப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வமிக்கவர், சிறந்த நடனமணி, உள்ளத்தாலும் கலைஞர் 'வைஜயந்திமாலா' என்கிறார். காயத்ரி வேங்கடராகவனின் உணர்ச்சிமிக்க இசைக்கும், கார்த்திக்கின் கலகலப்பான வாசிப்புக்கும், பாராட்டு தெரிவித்து வரவேற்கிறார்.

செந்தமிழில், இனிய உச்சரிப்பில், எளிமையாய்ப் பேசுகிறார்



• விநாயகராமை கௌரவிக்கிறார் கி.ரா.

வைஜயந்திமாலா. கல்கியின் கலை விமர்சனங்கள் எளிமை, சுவாரஸ்யம், நடுநிலைக்குப் பெயர் போனவை. ஆங்கில திரைப் படங்களைக் கூட விமர்சித்தார். வஞ்சனையின்றிப் பாராட்டுவார்; குறைகளைச் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டார்" என கல்கிக்குப் புகழாரம் சூட்டி, கலைஞர்களையும் வாழ்த்திவிட்டு, மருதாணிச் சிவப்பேறிய அழகான கரங்களால் பரிசையும் விருதையும் இரு கலைஞர்களுக்கும் அளிக்கிறார் வைஜயந்திமாலா பாலி.

விருது பெறும் கலைஞர்களின் குருநாதர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். காயத்ரியின் குரு ஏ.சுந்தரேசனுக்கு, அறங்காவலர் வி. கோபாலன் சால்வை அணிவிக்க, விநாயக்ராமைக் கௌரவிக்கிறார் கி.ரா.

விருதுப் பத்திரங்களின் அழகு தமிழும், அவை வாசிக்கப்பட்ட விதமும் தொகுப்புரையும், நிகழ்ச்சிக்கு நேர்த்தி கூட்டுகின்றன.

கலைஞர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்கள்:

'மேன்மேலும் உழைத்து தகுதிகளை வளர்த்துக் கொள்ள ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது' என பணிவு காட்டுகிறார் காயத்ரி.

கார்த்திக்கோ சில கணங்கள் கண் கலங்கி தழுதழுத்து நிற்கிறார். தமது



• விழா மேடையில்...

குருவின் முன்னிலையில் தமக்குக் கிடைத்த இப்பெருமை, கடத்துக்கே கிடைத்த பெருமை என்று மகிழ்கிறார். சுதாரித்துக் கொண்டு சுபாவமான நகைச்சுவைத் தெறிப்போடு முடிக்கிறார்.

"கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை இவ்வாண்டு சுமார் இருநூறு மாணவர்களுக்கு ரூ.2,11,000/- பெறுமானமுள்ள கல்வி உதவித் தொகைகள் வழங்கியிருக்கிறது. படிப்பில் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்" என்று அறிவித்து நன்கொடை தந்தவர்களுக்கும் விழாவுக்கு வந்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறார் சீதா ரவி.

அழைப்பிதழில் அச்சிட்டபடி நிமிடம் பிசகாமல் நிகழ்ச்சி முன்னேற, 6.45க்கு

காயத்ரி வேங்கடராகவனின் இன்னிசைக் கச்சேரி...

ஹம்சத்வனியில் வாரணமுகனைத் துணைக்கு அழைத்து ஆரம்பிக்கிறார்.

'வந்தே வாசுதேவம்' அன்னமாச்சார்யா கீர்த்தனை, சிட்டஸ்வரத்துடன் பளிச் சென்று அமைகிறது.

தொடர்ந்து, சுருக்கமான கல்யாணி ராக ஆலாபனை, 'கொஞ்சமாய் சாகசம், கொள்ள மாளா சௌக்கியம்' என்ற விருதுப் பத்திர வரிகளை நிரூபிக்கிறது. 'கனிந்தருள் புரிந்தால்' கீர்த்தனை உள்ளத்தை நெகிழ் விக்கிறது. நிரவல், ஸ்வரம் பாடி, அழகான முத்தாய்ப்பு வைக்கிறார் காயத்ரி. மனோஜ் சிவாவுடைய மிருதங்கமும் கார்த்திக்கு டைய கடமும் அந்த முத்தாய்ப்புக்கு ஈடு கொடுப்பதோடு, தனியே வைக்கிற முத் தாய்ப்பு, கீர்த்தனையின் நாயகி கற்பகாம்



• வந்தாரே கார்த்திக்!

பாளுக்கு அணிவித்த நெற்றிச்சுட்டி போல் ஜொலிக்கிறது.

கௌரிமனோஹரியில் 'குருலே கயரு வண்டி' (தியாகராஜர்); மனசுக்கு இதமான அகிலாண்டேஸ்வரி (ஜுஜாவந்தி, தீக்ஷிதர்). இடைவெளிகளில் கேட்கும் கடத்தின் கிணுகிணுப்பும் மிருதங்கத்தின் கணகணப் பும் ரசனையோடு இழையும் வரதராஜனின் வயலின் ஒலியிழைகளும், கச்சேரியை ஒரு தூக்கு தூக்கி நிறுத்துகின்றன. காயத்ரி கணீ ரென்று மேல் ஸ்தாயியில் காம்போதி ஆலா பனை ஆரம்பிக்கவும் நிகழ்ச்சி இறக்கை கட்டிக் கொண்டது. வரதராஜனின் ஆலா பனை சற்றும் சளைக்காத ரகம். 'ஆடும் தெய்வம் நீ அருள்வாய்' என மீண்டும் தமிழ்ப் பாட்டைக் கேட்டு கூட்டத்துக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

உற்சாகத்துடன்தான் தனியாவர்த்தனத் தைத் தொடங்கினார் மனோஜ் சிவா. அவர் கொடுக்கவும் கார்த்திக் வாங்கவும் பிரமிப் பூட்டும் கோர்வைக் கோலங்கள் வெளிப் பட்டன.

துக்கடாக்களில் மூன்று கல்கி பாடல்



• ஏ. சுந்தரேசனை கௌரவிக்கிறார் வி.கோபாலன்

கள். (செங்கனிவாயில், தெய்வத் தமிழ் நாட்டினிலே, பூங்குயில்). சிவபெருமா னோடு சிவகாமியின் சபதம் கதா நாயகியையும் நினைவூட்டும் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்ற தேவாரப் பாடல், 'இரக்கம் வராமல் போனதென்ன காரணம்' என இறைஞ்சி இறைஞ்சிக் கேட்கும் கோபாலகிருஷ்ண பாரதியின் பாடல்...

காயத்ரி குழுவினரின் இசை செவி களோடு மனத்தையும் நிறைத்ததால்தான் கூட்டத்தில் பெரும்பகுதி இறுதி வரை கலையாமலிருந்தது. அதுவும் எப்படிப் பட்ட கூட்டம்...? இசையே சுவாஸமாகக் கொண்ட ரசிகர்கள் கொண்ட மதிப்புமிக்க கூட்டம்.

நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் இனி ஜாத கத்தை எடுத்துக் கொண்டு ஜோஸியரிடம் ஓட வேண்டாம். நல்ல யோகமிருப்பதால் தானே இப்படியொரு நிகழ்ச்சியில் பங் கேற்க வாய்ப்பு கிடைத்தது; அதோடு அமரர் கல்கியின் சங்கீத யோகம் (வானதி வெளியீடு) நூலும் அறக்கட்டளையின் அன்பளிப்பாகக் கிடைத்தது!

— காஞ்சனா பிரகாஷ்ராவ்

படங்கள்: வெங்கடேஷ்



''அடுத்த மாசத்துல இருந்து உங்க வீட்டு வாடகையை ஏத்தப் போறேன்...''

''அதுக்கென்ன... நான் வாடகை பாக்கியை ஏத்திட்டுப் போறேன்...!''

- வசந்தி வள்ளுவன்

சாட்... பூட்... சிரி!



''அந்தக் கட்சியிலே உண்ணாவிரதம் இருந்த கோஷ்டியைவிட, உண்ணும் விரத கோஷ்டியிலே அதிக பேர் இருந்தாங்களே...?''

''நீங்க வேற! அங்கே இருந்து இங்கே வந்து சாப்பிட்டுட்டு மறுபடியும் பலபேர் அந்த அணிக்கே போயிட்டாங்க!''

- சீர்காழி வி. ரேவதி



''ஏம்பா, வீடு வீடா நீ வாங்கிட்டுப் போற சோறு மீந்து போனால் என்ன பண்ணுவே?''


''இந்த ஏழையோட குடிசையில் டபுள்டோர் ஃப்ரிஜ் இருக்கு தாயி!''

- லீலா ஜெயபாண்டியன்

''இவர் குழந்தைகள் படம் ஒண்ணை டைரக்ட் பண்றார்...''

''அதுக்காக இன்னைக்கு என்ன சீன் எடுக்கணும்னு 'சாட் பூட் த்ரீ' போட்டுப் பார்க்கணுமா என்ன!''

- வசந்தி வள்ளுவன்





''என்னங்க! மாப்பிள்ளையோட அம்மா நம்ம மகளுடன் ஐந்து நிமிஷம் தனியா...''

''பேசணுமாமா?''

''ம்ஹூம் ஏசணுமாம்!''

- லீலா ஜெயபாண்டியன்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: துணிவு, தன்னம் பிக்கை, எடுத்த காரியங்கள்ல வெற்றி உண்டு. ராகு ஜென்ம ராசியில் கேது ஏழில் சஞ்சாரம் என்பதால சின்னச் சின்னப் பிரச்னைகள், குறிக்கீடுகள் வரலாம். இருந்தாலும் இதுக்காக பெரிசா பயப்பட வேண்டியதில்லை. குரு பார்வை காரணமாக உடனுக்குடன் நிவர்த்தி யாகும். உத்தியோகத்துல எல்லாவகையிலும் சுமுக மான சூழ்நிலை உருவாகும். வராமல் இழுத் தடிச்சுட்டு இருந்த தொகை இப்ப வந்து சேரும். தொழில் சம்பந்தமாக வெளியூர் போக வாய்ப்பிருக்கு.

ரிஷபம்: எதிர்பாராத சந்திப்பு, தெளிவான மனநிலை உண்டு. குல தெய்வப் பிரார்த்தனை, தெய்வ பலம், பூர்வீக சொத்து விவகாரம் ஆகியவற்றில் அனுகூலம் உண்டு. பணவசதி தேவைக்கேற்ப கிடைக்கும். வேலை விஷயத் தில் எதிர்ப்புகள் வந்தாலும் தெய்வ பலத்தால சமாளிப்பீங்க. எதிலும் அவசரம் வேண்டாம். நிதானம் அவசியம். மேல் அதிகாரிகள்கிட்ட சுமுகமாகப் பேசி வருவது நல்லது. குடும் பத்துல இதுவரை இருந்துவந்த கருத்து வேறு பாடு, விரோத மனப்பான்மை விலகும்.

மிதுனம்: எதிர்ப்புகள் விலகும். தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி ஆகியவற்றில் அனு கூலம் உண்டு. தொழில், வியா பாரத்தில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சுமுகமா இருக்கும். வெளிநாட்டுத் தொடர்பு நன்மை தரும். பொன், வெள்ளி, நவரத்னம், ஆபரணம் போன் றவை ஆதாயம் தரும். கலைத்துறையைச் சேர்ந் தவங்களுக்கு நன்மை உண்டு.

கடகம்: எதிர்ப்புகள் மறையும். சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டா லும் குரு பார்வை யால் உடனுக்குடன் நிவர்த்தியாகும். அலு வலகத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பு, மேல் அதிகாரிகளின் ஆதரவு ஆகியவை ஏற் படும். வேலை விஷயமா சிலர் வெளியூர்/ வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. கமிஷன், கான்ட்ராக்ட்ஸ், இயந்திரம், இன்டஸ்ட்ரீஸ் ஆகியவை நன்மை தரும். குடும்பத்துல குதூ கலம் நிறைந்திருக்கும்.

சிம்மம்: உற்சாகமான மனநிலையில் இருப்பீங்க. பேச்சில் கவர்ச்சியிருக்கும். முக்கி யமானவங்க உதவ முன் வருவாங்க. எல்லோ ரும் பாராட்டும் படியா ஏதாவது செய்வீங்க. இதுவரை தாமதமாகி வந்த பதவி உயர்வு, இடமாற்றம் வந்து சேரும். வேலை விஷயமா வெளிநாடு/வெளியூர் போக வாய்ப்பிருக்கு. புதிய முயற்சிகளை தள்ளிப் போடறது நல்லது. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக் குப் பெயர் புகழ் அதிகரிக்கும். குருபார்வை காரணமாக மக்கள் நலம் சீராக இருக்கும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும்.

கன்னி: குடும்பத்துல குதூகலம் நிரம்பி யிருக்கும். கருத்து வேற்றுமை காரணமா பிரிந்து போனவங்க இப்போ ஒண்ணு சேரு வாங்க. எடுத்தக் காரியத்தை எப்பாடுபட் டாவது வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. எதிர்ப்புகள் மறையும். வேலை விஷயத்தில் இது ஓர் அதிர்ஷ்ட வாரம். மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் உண்டு. இதுவரை இருந்து வந்த பண நெருக்கடி இப்ப மறையும்.

துலாம்: பண நடமாட்டம் தாராளமா இருக்கும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்க மூலமா நன்மை உண்டு. இதுவரை இருந்து வந்த குழப்பங்கள், பிரச்னைகள் எதிர்ப்புகள் விலகும். சுய தொழில் பண்ற வங்களுக்கு எதிர்பாராத ஆதாயம் உண்டு. கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். பழைய கடன் தொல்லைகள் மறையும். புத்தகம், பத்திரிகை, பிரிண்டிங் ஆகிய இனங்களைச் சேர்ந்தவங்க முன்னேற்றம் அடைவாங்க. குரு பலம் நிறைந்து இருக்கறதால பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். தாமதமாகி வந்த கல்யாண ஏற்பாடுகள் இப்போ தடபுடலா நடக்கும்.

விருச்சிகம்: மனசுல உற்சாகம் பிறக்கும். பயணங்கள்ல நன்மை உண்டு. தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு ஆகியவை உண்டாகும். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் விலகும். ராகு ஆறில் சஞ்சாரம் என்பதால் துணிவு தன் னம்பிக்கை கூடும். இயந்திரம், இன்டஸ்ட் ரீஸ், கமிஷன், கெமிக்கல்ஸ் போன்ற துறை களில் எதிர்பாராத திருப்பம் உண்டாகும். கூட்டுத் தொழிலில் இதுவரை இருந்து வந்த சிக்கல்கள் மறைந்து நன்மை உண்டாகும்.

அக்னிசர்மா பக்கம்

கடைத்தெரு கலாட்டா!



தீபாவளி ஷாப்பிங் ஆரம்பிச்சாச்சா? நடையா நடந்து, கடைகடையா ஏறி, ஷோகேஸையே கவிழ்த்துப் போட்டு, பிடிச்சதை வாங்கி... நிச்சயம் த்ரில்லிங்கான விஷயம்தான்!

உப்பு, புளி முதல் கொண்டு, புடைவை, நகைனு எவ்வளவோ ஷாப்பிங் செஞ்சிருப்பீங்க! நவரசமான அனுபவங்களும் நடந்திருக்கும். மறக்க முடியாத ஷாப்பிங் அனுபவங்களை ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். சுவையான அனுபவங்களுக்குப் பரிசுகள் உண்டு. உறையின் மீது 'கடைத்தெரு கலாட்டா' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

கடைசி தேதி: 1.10.03

பூர்வீகச் சொத்து விவகாரங்கள்ல அனுகூலம் உண்டு.

தனுசு: துணிவு, தன்னம்பிக்கை, தெளிவான மனநிலை, புனித காரியங்களில் ஈடுபாடு ஆகியவை உண்டாகும். அரசியல்வாதிகள் மதிப்பு, அந்தஸ்து, செல்வாக்கு உயரப் போகுது. அதுக்கு அதிகமாக வாய் திறக்க வேண்டாம். ஏதாவது பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. குருபலம் பூர்ணமாக இருப்பதால் பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும் பெண்களுக்கு. எதிர்ப்புகள் மறையும். சுயதொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி உண்டு.

மகரம்: இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் ஓடிப் போய்டுவாங்க. புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். அவர்களால நன்மை உண்டு. புதிய தொழில் தொடங்க நினைப்பவங்களுக்கு இது நல்ல நேரம். புதிய முயற்சிகள் வெற்றி தரும். வாகனம், போக்குவரத்து, டிராவல்ஸ் ஆகிய வகையில் நன்மையுண்டு. குடும்பத்தில் கணவன் மனைவிகளிடையே மகிழ்ச்சி நிலவும். நல்ல செய்தி ஒன்று தேடி வரப் போகுது. பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவாங்க.

கும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூடப் பிறந்தவர்களால நன்மையுண்டு. பண வசதிக்குப் பஞ்சமில்லை. மூன்றில் ராகு, குரு பார்வை என்பதால் சொத்து விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான நிலை ஏற்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. அலுவலகத்தில் மேலதிகாரிகள் பாராட்டு, புகழ் கிடைக்கும். வேலை இல்லாமல் அல்லாடுபவர்களுக்கு அதுக்காக வாய்ப்புத் தேடி வரும், ஜமாய்ங்க.

மீனம்: இந்த வாரம் உற்சாகமான சூழ்நிலை ஏற்படும். எந்த விதமான எதிர்ப்பைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். வந்த வேகத்தில் தானாகப் போய்விடும். வேலை விஷயமாக சிலர் வெளியூர்/வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. எதிர்பார்த்த நல்ல தகவல் இப்ப வந்து வயிற்றில் பால்

ரிஷப ராசிக்காரரான நடிகர் அர்ஜுனுக்கு எதிலும் அவசரம் கூடாதாம்!



பார்க்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து போனவங்க இப்ப திரும்பி வருவாங்க. பெண்களுக்கு எதிர்ப்புகள் மறைந்து உற்சாகமான மன நிலை ஏற்படும்.

செப்டெம்பர் 17 முதல் 23 வரை

குறையொன்றுமில்லை 8

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


சிரார்த்தத்தில் பரஸ்பர அன்னியோன்ய ஸத்பாவம் தெரிகிறது என்று சொன்னேன்.

இன்னும் என்னவெல்லாம் நன்மை நடக்கிறது பாருங்கள்... கீழே அட்சதை, எள் எல்லாம் இறைக்கிறோம். பூமியிலே ஊர்ந்து செல்கிற சின்னச்சின்ன எறும்பெல்லாம் அதை எடுத்துக் கொண்டு போகிறது. ஒரு பிண்டம் காக்கைக்கு, இரண்டு பிண்டம் பசுவுக்கு வைக்கிறோம். பந்துக்களெல்லாம் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். ஒரு சிரார்த்தம் என்றால், எத்தனை விதமான தர்மங்கள்! பிராணிகளை நாம் சந்திருப்தி பண்ணி வைக்கிறோம். இப்படிப் பலவகை நல்லது நடப்பதனாலேதான், பித்ரு காரியம் - பித்ரு யக்ஞம் என்பது ரொம்ப முக்கியம். அதனால், வம்சமானது விசேஷமாகத் தழைத்து விளங்குகிறது.

அதற்கு மேலே பூத தயா - பூத யக்ஞம் என்று பெயர். எல்லா பிராணி வர்க்கத்தினிடத்திலேயும் அன்பு இருக்க வேண்டும். அது தான் பூத யக்ஞம். மரங்களை தடாலென்று அடியோடு வெட்டுவது, பிராணி வர்க்கங்களை ஹிம்சை பண்ணுவது, அவற்றை அடித்துக் கொல்லுதல் இத்தியாதி இருக்கக் கூடாது. எல்லா பிராணிகளிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும். வியாஸகீட ஸம்வாஸம் என்பது பற்றிச் சொல்லியிருக்கிறேன்... அரிசியிலே நெளிகிற சின்ன புழு... அது உடம்பை இழுத்துக் கொண்டு இழுத்துக் கொண்டு போகும்... அவசரமாக வியாஸர் முன்னிலையில் போயிற்று... அதைப் பார்த்த வியாஸர் "கீடமே (புழுவே) நில்லு!" என்றார். "என்ன வேகம்? எங்கே போகணும்? ஆஸ்திக ஸமாஜத்துக்குப் போகணுமா?... அங்கே போய் உபன்யாஸம் கேட்கணுமா? இவ்வளவு வேகமாகப் போகிறாயே... எதற்கு?"

அது வியாஸரைப் பார்த்து, "அதோ பாரும்! ஒரு கட்டை வண்டி... மாடு பூட்டப்பட்டிருக்கு... அந்த வண்டி அதி வேகமா வரதே ஸ்வாமி... அது என் மீது ஏறினா என் கதி என்ன...? அநியாயமாப் போய் விடுவேனே! வண்டி இங்கே வருவதற்குள்ளே கடந்து போக வேண்டும்... அதிவேகமாகப் போகிறேன்..."

வியாஸர் வாயை மூடிக் கொண்டிராமல், "அந்த வண்டி வந்து உன் மேல் ஏறினால் தான்





என்ன? நீ போனால் தான் போயேன்! என்ன இப்போ....?" என்று சொல்லி விட்டார்.

ரொம்பக் கோபம் வந்து விட்டது புழுவுக்கு.

"மறுபடியும் சொல்லுங்கள்..." என்றது வியாஸரிடம்.

'நீ போனால்தான் போயேன், என்ன இப்போது!" என்றார்.

புழு சொல்லிற்று: "என்னைப் பார்த்தால் உமக்கு அசூயை! அசூயையினாலேதான் 'போனால் போ!' என்கிறீர். நான் என்ன, உம்மைப்போல் சந்தியாவந்தனம் பண்ணணுமா? மாத்தியான்னிகம் பண்ணணுமா? சாயங்காலம் ஆனால் திரும்ப சந்தியாவந்தனம் பண்ணணுமா?... விரதம் இருக்கணுமா? பெண்ணுக்குக் கல்யாணம், பிள்ளைக்கு உபனயனம் பண்ணணுமா...?" என்று வரிசையாகக் கேட்க ஆரம்பித்துவிட்டது அந்தப் புழு!

வியாஸர் நடுநடுங்கிப் போய் விட்டார். புழுவுக்கு சந்தியாவந்தனம் கிடையாது; நமக்கு உண்டல்லவா! நாம் பண்ணாது போனால் புழுவைக் காட்டிலும் மட்டம்! அதனால்தான் புழு பரிகாசம் பண்ணிற்று.

மனிதனைப் படைத்து, அவனுக்கு இத்யாதி இத்யாதி சாஸ்திரங்களைக் கொடுத்து, இதைப் பண்ணு, இதைப் பண்ணாதே என்று பகவான் நியமித்து விடுகிறான்.

"எங்களுக்கு அப்படி ஒன்றையும் நியமிக்க வில்லை; நாங்கள் சுகமாக இருக்கிறோம். நான் இப்படி இருப்பது பொறுக்கலை உமக்கு. அதனால் 'போனால் போயேன்' என்று என்னைக் கண்டு அசூயைப் படுகிறீர்..." என்றது புழு.

புழுவினிடத்திலே கூட ஜாக்கிரதையாகப் பேசவேண்டும் என்று அன்றுதான் வியாஸர் தெரிந்து கொண்டார். வியாஸருக்கே இந்த நிலைமை!

பேச்சு என்பது எதை வேண்டுமானாலும் சொல்லும்... ஆனால், அப்பிரமாணமாகப் பேசினால், யாராவது ஒப்புக் கொள்வார்களா...! ஆகவே ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்.

பூத தயை — எல்லோரிடத்திலும் அன்போடு இருக்க வேண்டும்; அன்போடு பேச வேண்டும்.

வாக்வை சரஸ்வதி என்கிறது வேதம். **வாசா அம்ருதம் விந்ததே** — வாக்கினாலே ஒருவன் அமிருதத்வத்தை அடைகிறான் என்கிறது.

துஷ்டனான ஒருவனுக்கு வாக்கு நன்றாக இராது. நல்லோருக்கு வாக்கு அமிர்தமாக இருக்கும். பாருங்கள், உலகிலே எல்லோரும் குயிலை விரும்புகிறார்கள். கழுதையை யாரும் விரும்புவதில்லை. பஞ்சம ஸ்வரத்துக்குக் கோகிலத்தை அழகாக உதாரணம் சொல்லியிருக்கிறது ஏன்...?

குயில் நமக்கென்ன உபகாரம் பண்ணுகிறது? கழுதை என்ன அபகாரம் பண்ணிற்று...?

இதனால் உபகாரமும் இல்லை; அதனால் அபகாரமும் இல்லை. அப்படியிருந்தாலும் எல்லோரும் கழுதையை வெறுக்கிறார்கள்!

கழுதை கத்துவது கர்ண கடோரமாக இருக்கிறது. குயில் த்வனி அழகாயிருக்கிறது; ரம்யமாயிருக்கிறது. அதனாலே குயிலைக் கொண்டாடுகிறோம்.

அம்ருதத்வத்தை அடைய வேண்டுமானால் இப்படி, குயில் மாதிரி நல்ல வாக்கு அமைய வேண்டும். அந்த வாக்கும் பகவத் அனுக்கிரஹத்தினாலேதான் கிடைக்கும்.

இந்த நாக்கு இருக்கிறதே நம் வாய்க்குள்,

> "நம்ம தலைவர், கூட்டத்துக்குக் கூட்டம் கதை சொல்றது தப்பாப் போச்சு..."
>
> "எதனால?"
>
> "பொதுமக்கள் வர்றதை விட குழந்தைங்க கூட்டம்தான் நிறைய்.....ய்ய வருது..."
>
> — பாபநாசம் தேவி

அது ஒரு நாள் யோசித்துப் பார்த்தது... பற்களைப் பார்த்துப் பேசியது:

"பற்களே! எந்தப் பொருளைக் கொடுத்தாலும், கடினமான வஸ்துக்களைப் போட்டாலும், அதை நன்றாக மென்று, அசை போட்டுச் சூர்ணமாக்கி, நான் அனுபவிக்கும்படியாக உருட்டிக் கொடுக்கிறீர்களே!" என்றது.

பொருள் விளங்காய் உருண்டை என்று ஒன்று உண்டு... வஜ்ரத்தால்தான் வஜ்ரத்தை அறுக்க முடியும் என்கிற மாதிரி, அந்தப் பொருள்விளங்காய் உருண்டையை இன்னொரு பொருள் விளங்காய் உருண்டையாலேதான் உடைக்க முடியும்! அந்த நிலையிலே, அப்படிப்பட்ட வஸ்துக்களையெல்லாம் கூட இந்தப் பல் கடிக்கிறது.

"இப்படிக் கடித்து உருட்டிக் கொடுக்கிறாயே! என்ன உபகாரம் பண்ணுகிறாய் நீ!" என்று நாக்கு ஆச்சர்யத்துடன் கேட்கிறது. "உனக்குப் பிரதியுபகாரம் நான் பண்ண வேண்டாமா...?" என்றது. அந்தப் பற்களெல்லாம் சொல்லிற்று: 'நீ பிரதியுபகாரம் பண்ண வேண்டாம்... பகவான் உன்னையும் என்னையும் எப்படி வைத்திருக்கிறானோ, அதை நீ உணர்ந்து இருந்தால் போதும்" என்றது.


"எப்படி வைத்திருக்கிறான் நம்மை?" — நாக்கு கேட்டது.

"எங்களை வெளியிலே வைத்து, உன்னை உள்ளே வைத்திருக்கிறான். நீ படிதாண்டாப் பத்தினியாக எங்களுக்குள்ளே கட்டுப்பட்டிருந்தால், எங்களுக்கு உபகாரம் பண்ணுவதைக் காட்டிலும் மேல்!"

நாக்குக்குக் கொஞ்சம் வருத்தம், பாவம்...! அது சொல்லிற்று: "இவ்வளவு நிஷ்டூரமாகப் பேசுகிறீர்களே? நான் வெளியே வந்தால் என்னவாம்!" என்றது.

பற்களெல்லாம் சொல்லிற்று: "நீ வெளியே வந்தால் உனக்கு உபத்திரவம் இல்லை; எங்களுக்குத்தான்" என்றன.

"ஏனென்றால், எவனாவது எதையாவது



நாக்கால் சொல்லிவிட்டுப் போய்விட்டால், எதிரே இருக்கிறவன், 'உன் நாக்கை அடக்குகிறேன் பார்!' என்று சொல்லுவதில்லை...' உன் பல்லை உடைக்கிறேன் பார்!" என்று தான் சீறுவான். ஆகையினாலே, நீ தப்புப் பண்ணினால்கூட சிட்சை எங்களுக்குத் தானே வருகிறது... ஆகவே, அடங்கி இரு" என்றன பற்கள்.

நமக்கு வாக்கு கொஞ்சம் வேகமாக, பௌருஷமாக வருகிறபோது, நாக்குக்கும் பல்லுக்கும் நடந்த இந்த சம்பாஷணையை நினைத்துப் பார்த்து உடனே அடக்கிக் கொள்ள வேண்டும்.

அதனால்தான் தசரதச் சக்கரவர்த்தி கஷ்டப்பட்டார்.

குலசேகர ஆழ்வார் சொல்கிறார்: இரண்டு கையாலேயும் தசரதன் வாயிலே அடித்துக் கொள்கிறானாம்... 'என்னை மாதிரி வாய் இந்த உலகிலே யாருக்கும் இருக்கக் கூடாது... வாயால் கெட்டவன் நான்' என்று தன் வாயில் அடித்துக் கொண்டே புலம்புகிறான்.

தசரதனின் புலம்பல் குறித்து குலசேகர ஆழ்வாருடைய அனுபவம் இது.

ஆகவே நாம் மிக ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். அவ்வாறு பேசாததால் வியாஸரையே ஒரு புழு சிக்ஷித்து விட்டது!

நல்ல வாக்கு நமக்கு அமைய வேண்டும். இந்த பூதங்களிடத்திலே தயையுடன் இருத்தல் வேண்டும். புழுவையும் ஹிம்சை பண்ணக் கூடாது. எல்லாம் நமக்கு வேண்டும்.

ஒரு கொசு பாருங்கள்... தட்டினால் பிராணன் போய்விடுகிறது. நுட்பமான பிராணி... ஆனால் சாஸ்திரம் என்ன சொல்கிறது...? கொசு உத்தமமான ஸ்ரீ வைஷ்ணவன் என்கிறது. ஏனெனில் நம்மிடமில்லாத ஓர் அனுஷ்டானம் கொசுவிடம் இருக்கிறது.


'நம்மிடமில்லாத அனுஷ்டானம் அதற்கு என்ன?' என்று கேட்டால்...

கொசு இப்படியே பறந்து போய்க் கொண்டிருக்கும். ஆஸ்திக ஸமாஜம் வழியே சென்றால், அங்கே உள்ளே மகான்களெல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். 'இந்த இடத்தை நாம் விடலாமோ!' என்று உள்ளே வந்துவிட்டது கொசு! உள்ளே புகுந்து என்ன பண்ணுகிறது?... திருப்பாணாழ்வார் சொன்னதை அது பண்ணுகிறது!

மகான்களுடைய கால்கள் திருவடிகளைப் பார்க்கிறது... காலில் விழுந்து சுரீரென்று கடிக்கிறது. அவர் அதைக் கவனிக்காமல் விட்டுவிட, அங்கேயிருந்து மேலே ஏறிப் போய் சரீரத்திலே எங்கே சதை அதிகமாக இருக்கிறதோ அங்கே கடிக்கிறது. அப்புறமும் அவர் வாய் மூடி இருந்தால் காதிலே வந்து 'அபிவாதயே!' என்று ஆரம்பித்துத் தான் யார் என்பதைச் சொல்கிறது! மெதுவாக 'ரொய்ங்ங்...' என்று சொல்கிறது! அப்பவும் வெறுமே இருந்துவிட்டால், எந்த இடத்திலே துளை இருக்கிறதோ, அங்கே உள்ளே நுழைந்து விடுகிறது கொசு! ஆத்ம சமர்ப்பணம் பண்ணுவதற்கே வந்திருக்கிறது அது! கிரமமாகத் திருவடியிலே ஆரம்பித்துத் திருமுடி வரை போகிறதே... அப்படியானால் கொசு உத்தம வைஷ்ணவன் தானே!

ஆகையினால், லோகத்திலே நாம் கவனித்துப் பார்த்தோமானால் ஒவ்வொரு பிராணிவர்க்கத்திடமும் ஓர் உத்தமமான அம்சம் இருக்கும். அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், பகவான் அதை நம் பக்கத்திலே வைத்திருக்கிறான். ஆனால் நாமோ, அதைத் திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருக்கிறோம்.

(வளரும்)



என்ன, வீடெலாம் ஒரே வேப்பிலையா இருக்கு?
காலேஜ்ல ஃபேஷன் ஷோ நடத்தறோம். அதுக்காகத்தான் இந்த வேப்பிலை காஸ்ட்யூம்!''
மாரியாத்தா! காளியாத்தா!
இந்த டிரஸ்லே நான் எப்படி இருக்கேன்?
ம்... அப்படியே வேப்பமரம் மாதிரியே இருக்க...
என்ன கிண்டலா? இதை ரெடி பண்ண நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா...? சின்ன வேப்பமரமே காலி!
ஏய்... வெளியிலே சொல்லாதே! ஃபேஷன் ஷோவிலே பரிசு கிடைக்குதோ இல்லியோ... ஆறுமாசம் ஜெயில் கிடைச்சுடும்.
அப்படியே உன்னையும் வெட்டிட்டு, அதை சந்தோஷமா ஏத்துப்பேன்...!
நல்லவேளை வேப்பிலையிலே காஸ்ட்யூம் செஞ்சீங்க! அதுக்கு பதிலா தொட்டாச்சிணுங்கி இலையிலே பண்ணியிருந்தா... ஓ...காட்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka